www.tamilarangam.net

සරිනිහර්
'SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**வீண் சண்டை விடுக!**
இந்திய தேசமிது என்றென்றும் இந்துவுக்கே
சொந்தமெனப் பண்டிதரே சொல்லிவிட்டார் - இந்த நிலம்
எங்களுக்கும் என்றேன்தான் இனிமேலும் வீண் சண்டை
சிங்களவர் ஆளலன்றோ சீர்?

-ஈழமோகம்

143
இதழ் - 142 மார்ச் 26 - ஏப். 08, 1998 விலை ரூபா 10.00

# புலித் தடை : தடை யாருக்கு?

## 'பிரபாகரனை ஆளுநராக்குங்கள்'

-தொண்டமான்

## ஐம்பது ஆண்டுக் கல்வியின் மறுபக்கம்

## வாஜ்பாயும், கதிர்காமரும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## ஒரு அப்பாவி ஊமைப் பெண்ணும் காரியக்கார ஊமைகளும்!

கிருஷாந்தி, கோணேஸ்வரி வரிசையில் இன்னொரு பெண் மணி; சின்னப்போடி செல்வராணி (20) மீசாலை- நாயுருவி கிராமத்தைச் சேர்ந்தவர்.

மார்ச் 17 செவ்வாய் மாலை சாவகச்சேரி வைத்தியசாலைக்குச் சென்று விட்டு சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்திருக் கிறார்.

அங்கு நிலை கொண்டிருந்த 52வது படையணியைச் சேர்ந்த நான்கு இராணுவத்தினர் அவரை வழிமறித்து கைகளையும், கால்களையும் கட்டித் தூக்கிச் சென்றிருக்கின்றனர் அருகிலுள்ள பற்றைக்கு.

அங்கு வைத்து நான்கு இராணுவத்தினரும் மாறி மாறிப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியிருக்கின்றனர் செல்வ ராணியை.

வாய் பேச முடியா ஊமைப் பெண்ணான அவர் தனக்கு நேர்ந்த வையை விளக்க சிரமப்பட்டிருக்கிறார். அவரது தாயார் நடந்த விடயங்களைச் சொல்லி இருக்கிறார். அப்பெண்ணின் பெண்ணுறுப்பில் கத்துக் குத்துக் காயமும் உள்ளதென்கின்றனர் சாவகச்சேரி வைத்தியசாலை அதிகாரிகள்.

சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அப்பெண் இப்போது மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

யாழ்ப்பாணத்துக்கு சமாதானத்தைக் (?) கொண்டு சென்ற இராணுவ அதிகாரி பலகல்லவோ இது பற்றி தனக்கெதுவும் தெரியாது என்கிறார்.

யுத்தத்தால் அப்பாவி மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்று குரலெழுப்புபவர்களிடம் இருந்து குறைந்த பட்சம் ஒரு கண்டன அறிக்கையையாவது காணோம். இவர்கள் காரியக்கார ஊமைகளோ?

### விசில் ஊதவுமில்லை! துரத்தவுமில்லை!! கைது செய்யவுமில்லை!!!

கிருஷாந்தி பாலியல் வல்லுறவு செய்து புதைக்கப்பட்டது. அவரைத்தேடிச் சென்ற அவரது தாயார், சகோதரன், அயலவர் ஆகியோர் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டது தொடர்பான வழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த இருவர் கடந்த மார்ச் 18ம் திகதி கொழும்பில் நீதிமன்றிலிருந்து தப்பியோடி விட்டார்கள். தப்பியோடிவர்கள் முதலாவது எதிரி சோமரத்ன ராஜபக்ஷ, எட்டாவது எதிரி டி.ஜி.இந்திரஜித் பெரேரா, 7ம் எதிரி ஜெயதிலக தப்பியோடுகையில் கைது செய்யப்பட்டிருக்கிறார்

இந்த தப்பியோடல்கள் ஒன்றும் தற்செயலானதல்ல. முன்கூட்டியே திட்டமிடப்பட்டது. இவர்கள் தப்பியோடப் போகின்றனர் என்பது முன் கூட்டியே தெரிந்திருக்கிறது.

இக்கைதிகளுக்கு காவலாக இருந்த நான்கு சிறைக் காவலர்களையும் விசாரணை செய்த நீதிபதி காமினி அபேரட்ன சொல்கிறார்; நான்கு பேருடைய சாட்சியங்களும் முரண்பாடாக இருக்கின்றன என்று.

இக்கைதிகள் தப்பியோடிய போது சிறைக் காவலர்கள் விசில் ஊதவில்லை. பின் தொடரவுமில்லை. அவர்களைக் கைது செய்ய முயற்சிக்கவுமில்லை. தாங்கள் இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தின் போது என்ன செய்வதென்று பயிற்றுவிக்கப்பட வில்லை என்கிறார் சிறைக்காவலர்களில் ஒருவர்.

களுத்துறையிலும், வெலிக்கடையிலும் தமிழ்க் கைதிகள் தாக்கப்பட்ட போது தாக்கியவர்களுக்கு கம்பிகள், பொல்லுகள், கத்திகள் எடுத்துக் கொடுக்க மட்டும் யார் பயற்றுவித்தார்களோ யாரறிவார்!

இப்போது நான்கு பேரும் வேலையிலிருந்து நீக்கப் பட்டிருக்கிறார்கள். அவ்வளவு தான். அடுத்த வாரமே அவர்கள் இராணுவத்தில் சேர்ந்து எங்காவது ஒரு கிராமத்தில் தொழிலைத் தொடங்கக் கூடும். மீளவும் கிருஷாந்திகள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படவும், கொல்லப்படவும் புதைக்கப் படவும் கூடும். மறுபடி விசாரணை. இவர்கள் தப்பியோடு வார்கள்.

மக்களிடமிருந்து நீதி, வாழும் உரிமை என்பனவும் தப்பி விடும்.: ஆனால் அப்போதும் சமாதானத்துக்காக அரசுக்கு ஆதரவளிப் போர் இருந்து கொண்டே இருப்பார்கள்!

**மண்டூர் பாலியல் வல்லுறவு வழக்கு:**

### படையினருக்குப் பாதுகாப்பில்லையாம்!

96 டிசம்பர் 16ம்திகதி குடும்பப்பெண் ஒருவர் தனது கணவனுக்கு உணவு எடுத்துக் கொண்டு போகும் போது அவரை வழிமறித்த மூன்று விசேட அதிரடிப்படையினர் அவரை இழுத்துச் சென்று பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தினர். இது நடந்தது மண்டூரில். மண்டூர் ஓட்டுத் தொழிற்சாலையில் முகாமிட்டிருந்த மூன்று அதிரடிப்படையினரே குற்றம் சாட்டப் பட்டவர்கள்.

மார்ச் 20ம்திகதி மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டிருந்தது. போக்கு வரத்துப் பிரச்சினை காரணமாக இம்மூன்று விசேட அதிரடிப் படையிரும் வரமுடியாது இருப்பதாக அவர்கள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி கூறியதோடு, வழக்கை வேறு நீதிமன்றுக்கு மாற்றும்படியும் கோரி இருக்கிறார்.

நல்லது, இந்த நாட்டிலே போக்குவரத்து பிரச்சினை, பாதுகாப்புப் பிரச்சினை எல்லாம் இருப்பது ஆளும் அரசியல்வாதிகளுக்கும், மந்திரி பிரதானிகளுக்கும் அவர்களது படையினருக்கும் தான்.

மக்களுக்கு...?

மக்களுக்கா, இந்த 'மாக்களுக்கு' என்ன தான் பிரச்சினை இருக்கிறது?

ஐடென்ரிகாட்... என்று தொடங்கப் போகிறீர்களாக்கும். மூச்!

### கண்கெட்ட பிறகு...

வவுனியாவில், செட்டிக்குளம் - புதுக்குளம் கிராமத்தில் இரவு நேரத்தில் சோதனையிட்ட படையினர் மூன்று பெண்களை தனித்தனியாக அழைத்து விசாரணை (?) செய்துள்ளனர். இதன் போது பெண் படையினரோ பெண் பொலிசாரோ கூட இருக்க வில்லை. இது நடந்தது மார்ச் 7ம்திகதி.

சீருடையில் துப்பாக்கி, கத்தி, சகிதம் வந்த இராணுவத்தினர் விசாரணையின் போது அடையாள அட்டைகளைப் பறித்து விட்டு மறுநாள் அருகிலுள்ள கஜசிங்ஹபுர இராணுவ முகாமில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கூறி இருக்கிறார்களாம். இன்னொரு பெண்ணை அழைத்துச் சென்றவர்கள் இரவு இரண்டு மணியளவில் திருப்பி அனுப்பி இருக்கிறார்கள்.

இது தொடர்பான விசாரணை நடாத்த வேண்டுமெனக் கோரி இருக்கிறது ஈ.பி.ஆர்.எல்.எப்.

சமாதானத்தைக்கொண்டு வரும் யுத்தத்துக்கு ஆதரவளிக்கும் போதே இது பற்றி யோசித்திருக்க வேண்டும் என்று ஈ.பீ.ஆர் எல்.எப்புக்குக் கூறினால் புரியுமோ என்னவோ?

### பிரேமானந்தா வரிசையில்...

''பிக்கு எனது விருப்பத்துக்கு மாறாக என்னுடன் உறவு கொண்டார். நான் அப்போதெல்லாம் கூச்சலிடுவேன். என்னைக் கூச்சல் போட வேண்டாம் என்று பயமுறுத்துவார் கைத்துப்பாக்கி அவருக்கருகில் இருக்கும். கூச்சலிட்டால் என்னைக் கொலை செய்வதோடு எனது பெற்றோரையும். சகோதரிகளையும் கொலை செய்து பக்கத்து அறையிலுள்ள கிடங்கில் போடுவதாகவும் பயமுறுத்துவார் என்கிறார் 14வயது சிறுமி.

கதிர்காமம் ஏழுமலை பௌத்த பிக்கு ரத்மலானே சித்தார்த்த தேரருக்கு எதிரான பாலியல் வல்லுறவு வழக்கு விசாரணையின் போதே அவர் இதைத் தெரிவித்திருக்கிறார்.

96 டிசெ. 31ம்திகதி நேர்த்திக்கடன் ஒன்றைக் கழிப்பதற்காக பெற்றோர் இவரையும், இவரது சகோதரிகள் மூவரையும் அழைத்துக் கொண்டு எம்பிலிப்பிட்டியவிலிருந்து ஏழு மலைக்குப் போயிருந்தனர்

'பிக்கு எங்களை வெகு நேரம் உற்றுப் பார்த்து விட்டு 'உங்களுக்கெல்லாம் பெரும் கஷ்டகாலம் வந்திருக்கிறது. தொடர்ச்சியாக மூன்று மாதம் பூசை நடாத்த வேண்டும்'' என்றார். அங்கு நாங்கள் தங்குவதற்கு அறை ஒன்றையும் ஏற்பாடு செய்து தந்தார்.

சிறிது காலத்தில் பிக்குவுக்கு சமையல் செய்து கொடுத்த பெண் ஊர் சென்றுள்ளதாகக் கூறி, எனது சகோதரிகள் மூவரையும் அவருடைய அறைக்கு அருகிலுள்ள அறைக்கு மாற்றினார். பெற்றோரைச் சந்திக்க விடவில்லை. அதன் பின்னர் தான் என்னுடன் பலாத்காரமாக பிக்கு உறவு கொள்ளத் தொடங்கினார். அவர் எங்களை கொலை செய்து விடுவதாக மிரட்டியதால் நான் எவரிடமும் இது பற்றிக் கூறவில்லை.

ஒரு முறை பிக்கு என்னுடன் உறவு கொள்வதைக் கண்ட சகோதரிகள் அழுது புலம்பி எங்களை வீட்டுக்குச் செல்ல விடுமாறு அவரிடம் கெஞ்சினார்கள்.

பிக்கு எனது பெற்றோரை அழைத்து இவர்களைக் கூட்டிச் சென்றால் எனது பெயரில் அவரால் வங்கியிலிடப்பட்ட ஆயிரம் ரூபா வைப்புப் புத்தகத்தை எரித்து விடுவதாக மிரட்டினார் என்று விசாரணைகளில் சொல்கிறார் அந்த 14 வயது சிறுமி.

சாயிபாபா, பிரேமானந்தா, வரிசையில் மக்களை மிரட்டி ஏமாற் றிப் பிழைப்பதில் இன்னொரு மதகுரு தான் இந்த சித்தார்த்த தேரர்.

அவர்களுக்கு இருந்த/ இருக்கிற அரசிற் செல்வாக்குப் போல இவருக்கு பின்னால் உள்ள அரசியவாதிகள் யார் யாரோ? விசாரணைகள் வெளிக்கொணருமா?

### நாற்பதும் நான்கும்...

ஹிங்குரானகொட விமானப்படை முகாமைச் சேர்ந்த 40வயதுடைய படையினர் ஒருவர் நான்கு வயதுச்சிறுமி மீது பாலியல் வல்லுறவு மேற்கொண்டதாக நிட்டம்புவ பொலிசா ரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

அச்சிறுமி தற்போது வத்துபிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இவ்விடயம் நீதிமன்றத்தின் முன் இருப்பதால் இது தொடர்பான எதனையும் தெரிவிக்க முடியாதென்கின்றனர் பொலிசார்.

- சுடர்விழி



## காமினி: தமிழ் மக்களின் நண்பன்!

ஐம்பது ஆண்டுகட்டு மேலாக பத்திரிகைத்துறையில் பல சாதனைகளை செய்தவரும், கடுமையான உழைப்பாளியும், யாருக்கும் தலை வணங்காத, எதுக்கும் விலை போகாத, தனக்கு சரியெனப்பட்டதை புலிகளின் விசாரணையின் போதும் சரி, இராணுவத் தளபதி முன்னிலையிலும் சரி, முன்னாள் ஜனாதிபதியின் முன்பும் சரி அச்சமின்றி அடித்துச் சொல்லும் நெஞ்சுரமும் துணிவும் கொண்ட அந்த மாமனிதர் இன்று நம்மிடையே இல்லை. எளிமையும், அழகும் செட்டும் அதேவேளை காரமும் நிறைந்த எழுத்தை ஆங்கில மொழியில் ஐம்பதாண்டுகட்கு மேலாக எழுதி வந்த அவரது விரல்கள் இப்போது முற்றாக எழுதுவதை நிறுத்தி விட்டன.

ஒரு பழைய தட்டச்சுப்பொறி, ஒரு டெலிபோன், ஒரு சில பைல்கட்டுகளுடன் இயங்கிவந்த அவரது 'சந்தேசிய' செய்தி நிறுவனம் இயங்க முடியாமல் நின்று போய் ஐந்து வருடங்களுக்கு மேல் ஆகி விட்ட போதும் அவ்வப்போது எழுதிக் கொண்டிருந்தார். ஆயினும், வயது மூப்பும் நோயும் அவரை வென்று விட்டன. அவரது எழுத்து ஓய்ந்து விட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளாக அவருக்கு எழுத முடியாத நிலை இருந்தது. உலகம் அவரைச்சுற்றி இருளத்தொடங்கியிருந்தது. பத்திரிகை உலகம் மெல்லமெல்ல அவரை மறக்கத்தொடங்கியிருந்தது. ஆயினும் அவர் கவலையெல்லாம் அது பற்றியதாக இருக்கவில்லை. அவர் தனது வாழ்நாளின் மிகப்பயனுள்ளதும், அவசியமானதுமான பணியாக எதைக்கருதினாரோ அதைச் செய்யமுடியாமல் போனது தான் அவரது கவலையாக இருந்தது.

ஆம், மார்ச் 9ம் திகதி காலமான காமினி நவரட்ன அவர்கள் தான் அவர். காமினி நவரத்ன வெறும் பத்திரிகையாளர் அல்ல; டெலெக்ஸில் அல்லது இன்று இன்டர் நெற்றில் விழும் ஒவ்வொரு சொல்லுக்கும் டொலர்களில் கணக்கு பார்த்து பணம் பண்ணும் செய்தி வியாபாரத்தில் ஈடுபட்டவரும் அல்ல. அவரது பத்திரிகைத்துறை சார்ந்த உழைப்பும், அதற்கு அவர் கொடுத்த முக்கியத்துவமும், ஒழுங்கும் அவரை மற்றவர்களிடமிருந்து பிரித்துக் காட்டும். வெறும் செய்திகளையும் செய்திக் கட்டுரைகளையும் எழுதுவதாக அவர் தனது செயற்பாட்டை ஒரு போதும் கொண்டிருக்கவில்லை. அரசியல், பொருளாதாரத் துறை விமர்சகராகவும், அரசியல் அபிப்பிராயங்களை ஏற்படுத்தும் சக்திமிக்கவராகவும், நாட்டின் நலனுக்கு உகந்ததென தான் நம்பும் கருத்துக்கட்காக போராடுபவராகவும் அவர் இருந்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த சற்றடே றிவியூ பத்திரிகையின் ஆசிரியர் எஸ்.டி.சிவநாயகம் நாட்டை விட்டு வெளியேற வேண்டி வந்தபோது, யாழ்ப்பாணத்தில் வந்து அவரது பொறுப்பை ஏற்றுக்கொண்டவர் காமினி. பல்வேறு இயக்கங்களின் தர்பாருக்கும் அரசாங்கத்தின் நெருக்கடிக்கும் மத்தியில் துணிவுடன் அதை நடாத்தி வந்தவர் அவர். தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுப்பதைத் தனது கடமையாக வரிந்து கொண்டு அதை நடத்தி வந்தவர் அவர் (எந்தக் காமினி, சிவநாயகம் அவர்கள் போனதும் பத்திரிகையை நடாத்த கொழும்பிலிருந்து வந்தாரோ அந்தக் காமினியை. அவர் இந்தியப்படை வந்திறங்கியபின், அதன் பாதுகாப்பின் கீழ் இருந்து பத்திரிகை நடத்த முடியாது என்று கொழும்புக்கு வந்து பத்திரிகையை நடாத்த வேண்டும் என்று கருதி முயன்றபோது அதே சற்றடே றிவியூ நிர்வாகம் அவரைத் தூக்கி எறிந்தது என்ற கசப்பான உண்மையையும் மறக்க முடியாது.) இயக்கங்களால் அடிக்கடி 'ஜே ஆரின் ஆள்' என்ற சந்தேகப் பார்வைக்கு இலக்காகி விசாரிக்கப்பட்ட போதும், 'தமிழ் மக்களுக்கு எதிராக எழுதுகிறீர்கள்' என்று குற்றஞ்சாட்டப்பட்ட போதும் கூட அஞ்சாமல் யாழ்ப்பாணத்தில் இருந்து இயங்கியவர் அவர். 'நான் ஒரு பத்திரிகையாளன். நான் எப்போதும் தமிழ் மக்கள் பக்கத்தில் நிற்பவன். அம்மக்களுக்கு எதிராக மாறுபவர்கள் தான் என்னை தமிழ் மக்களுக்கு எதிரானவன் என்கிறார்கள்' என்று துணிவாக அவர்களிடமே கூறி, மீண்டு வந்தார் அவர்.

அவர் யாழ் மண்ணை நேசித்தார்; அங்குள்ள மக்களை நேசித்தார் அந்த மண்வாசனையை அந்த மக்களின் உணவுப்பழக்கத்தை, உணவை எல்லாம் நேசித்தார். நிறையவே நண்பர்களைஅவர் அங்கு கொண்டிருந்தார். அங்கிருந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ அவர் செய்த முயற்சிகள் பலருக்குத் தெரியாது

ஒரு பத்திரிகையாளர் என்ற முறையில் அவருக்கு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆருடன் தொடர்பிருந்தது. இவரது எழுத்தின் அழகு, வேகம், காரம் என்பன குறித்து ஜே.ஆருக்கும் ஒருவகை பிரமிப்பு இவர் பால் இருந்தது என்பது பொய்யல்ல. காமினியை விலைக்கு வாங்கிவிட அவர் பல தடவை எத்தனித்தும் இருக்கிறார். ஆனால் காமினி அகப்படவில்லை. ஒரு தடவை காமினியிடம் ஜே.ஆர்;

''உனக்கு நான் என்ன செய்ய வேண்டும்'' என்று கேட்டிருந்தார். அதற்கு காமினி சொன்ன பதில்: ''வடக்கு கிழக்கு பிரச்சினையைத் தீர்'' என்பதுதான். ஜே.ஆர் 'நான் அதைச்சொல்லவில்லை, உனக்கு தனிப்பட்ட முறையில் ''நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்கிறேன்'' என்று திரும்பவும் கேட்டபோதும் கூறிய பதில் 'நான் சொன்னது தான் எனக்குத் தேவை' என்பதுதான். ஆம் காமினிக்கு ஜே.ஆரிடம் கேட்க வேறொன்றும் இருக்கவில்லை. வடக்கு கிழக்கு பிரச்சினை தீர்க்கப்பட்டால் அவரக்கு எல்லாமே கிடைத்த மாதிரி இருந்திருக்கும் என்பது உண்மைதான். உனக்கு என்ன வேண்டும் என்று கேட்கமுதலே 'கொழும்பிலே வீடு வேணும்' என்று கேட்ட ஒரு சில தமிழ் பத்திரிகையாளர்களுடன் ஒப்பிடுகையில், காமினி எவ்வளவு பெரிய மலையாக உயர்ந்து நிற்கிறார் என்பது தெளிவு. துணிவும், வீரமும் கலங்கா நெஞ்சும் கொண்ட காமினி எவ்வளவு இளகிய மனம் கொண்டவர் என்பதை அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் அறிவர். அவரது நெருங்கிய நண்பர்களில் ஒருவரும், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன ஊழியருமான நண்பர் குகமூர்த்தி அவர்கள் கடத்திச்செல்லப்பட்டு காணாமல் போன செய்தியால் அவர் துடித்துப்போன விதத்தை யாராவது பார்த்திருந்தால் தெரியும். அவர் எவ்வளவுக்கு நெகிழ்ச்சியானவர் என்று.

ஓய்வில்லாமல் புகைபிடிப்பதும், கடுமையான குடிப்பழக்கமும் கொண்டிருந்த போதும் அவர் நிதானம் தவறி ஒரு வார்த்தை கூட பேசியதை நான் கண்டதில்லை. குடிபோதையில் நாக்குழற அவர் பேசியதுண்டு. ஆனால் வார்த்தைகள் எந்தப் பிசிறுமின்றி வரும். எழுத்தும் அப்படித்தான்.

அவரது இழப்பு பத்திரிகைத்துறைக்கு ஒரு பேரிழப்பு! ஒரு மூத்த பத்திரிகையாளரை நாம் இழந்து விட்டோம். தமிழ் மக்கள் தமது ஒரு நல்ல நண்பனை இழந்து விட்டார்கள்


- அரவிந்தன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka
EXTRAORDINARY
අංක 1,012/16 — 1998 ජනවාරි 27 — 1998.01.27



# புலித்தடைச் சட்டம்:
# புலிகளுக்கல்ல தமிழ் மக்களின் எஞ்சியுள்ள சுதந்திரங்களுக்கே!

தலதா மாளிகையில் நடந்த குண்டுத் தாக்குதலை அடுத்து, அது வரை ஏன் தடைசெய்யக் கூடாது என்பதற்கு தான் சொல்லி வந்த அனைத்துக் காரணங்களையும் தூக்கி வீசிவிட்டு புலிகள் இயக்கத்தின் மீதான தடையுத்தரவைப் பிறப்பித்தார் ஜனாதிபதி சந்திரிகா.

அவரது தடையுத்தரவு, அவசர காலச் சட்டவிதிகளில் ஒன்றாக ஜனவரி 28ஆம் திகதிய விஷேட வர்த்தமானி மூலமாக வெளியிடப்பட்டுள்ளது. இலங்கை அரசியலமைப்பு சட்டத்தின் 40ஆம் அத்தியாயமான பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி வெளியிடப்பட்டுள்ள இந்த புலித் தடைச் சட்டம் பாதுகாப்பு அமைச்சருக்கு விஷேட அதிகாரங்களை வழங்கியுள்ளது. அமைச்சர், விசாரணை ஒன்றின்பின், ஒரு நபரை புலிகளுக்கு உதவுவதாக அல்லது உதவும் நோக்குடன் செயற்படுபவராக கருதுவாரேயானால், அவரது கையிருப்பில் அல்லது சேமிப்பில் உள்ள பணத்தை பறிமுதல் செய்யவும், அவரை குற்றவாளியாகக் கண்டு ஆகக் குறைந்தது ஏழாண்டு காலத்திற்கு சிறையிலடைக்கவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல், அமைச்சரது இந்த முடிவானது, முடிந்த் முடிவும் இறுதியுமானது மட்டுமல்லாமல், அந்த முடிவு தொடர்பாக எந்த ஒரு நீதிமன்றத்திலும் கேள்வி எழுப்பப்பட முடியாத ஒரு முடிவாக அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் கொண்டு வந்துள்ள இந்தச் சட்டம் புலிகளைத் தடை செய்யும் நோக்குடன் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்பட்ட போதிலும் அதன் விதிகளைக் கவனித்து நோக்குபவர்கள் ஒன்றை மட்டும் புரிந்து கொள்ளலாம்.

அதாவது இந்தச் சட்டம் அமைச்சருக்கும் அதிகாரிகளுக்கும் மட்டற்ற அதிகாரத்தை வழங்குகிறது, அரசியல் மற்றும் தனிப்பட்ட பழிவாங்கல்களுக்கு போதிய வாய்ப்பினை அது உருவாக்கியுள்ளது. நாட்டின் நிலைமைகளை அறிவதற்கான பொதுமக்களின் உரிமையை மறுதலிக்கிறது, பத்திரிகைகளுக்கும் மற்றும் தொடர்பு சாதனங்களுக்கும் உண்மையை அறிவிக்கும் தமது கடமையைச் செய்ய முடியாத நிலைமையை உருவாக்கியுள்ளது.

ஆனால் எதை நோக்கமாகக் கொண்டு இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதோ அதைச் செய்வதற்கு அதாவது புலிகள் மீது கட்டுப்பாட்டைக் கொண்டு வருவதற்கு எந்தளவுக்கும் இது உதவப்போவதில்லை என்பது தான் இதிலுள்ள வேடிக்கையாகும்.

ஏனென்றால, முதலாவதாக புலிகள் இயக்கத்தின் தோற்றகர்லம் முதலே அவர்களது கோரிக்கையாக இருந்தது தனிநாட்டு கோரிக்கையென்பதுடன் அவர்களது ஆயுதம் ஏந்திய போராட்டம் சட்ட விரோதப் போராட்டமாகவே இருந்து வந்துள்ளது. சாதாரண சட்ட விதிகளின் கீழும் ஏற்கெனவே அமுலிலுள்ள 6வது திருத்தச் சட்டத்தின் கீழும் புலிகள் அமைப்பு சட்ட விரோதமான அமைப்பு தான். இலங்கை அரசியல் சட்டத்தின்படி, அச்சட்டத்துக்கு விரோதமாகவே அவர்கள் இயங்கி வருகிறார்கள், ஆயுதம் வைத்திருக்கிறார்கள். போராடுகிறார்கள். ஆக, அவர்களை தடை செய்வதன் மூலம், அரசாங்கம் புதிய விடயம் எதையும் சாதித்து விடவில்லை.

இரண்டாவதாக இந்தச் சட்டத்தின் மூலம் புலிகளுக்கு உதவுபவர்கள் ஆதரவு தெரிவிப்பவர்கள், அல்லது அவர்களைப் போன்ற செயல்களில் ஈடுபடுபவர்கள் ஆகியோரைக் கூட கட்டுப்படுத்திவிட முடியாது. ஏனென்றால் சாதாரண சட்டத்தின் கீழ் கூட இவர்களின் செயல்களும் குற்றங்களே, அதுவும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இவர்களை ஒடுக்குவதற்கு எந்தத் தடையும் கிடையாது. ஆக இந்தப் புதிய சட்டம் இவர்களுக்கு எதையும் புதிதாகச் செய்யப்போவதில்லை.

மூன்றாவதாக, புலிகள் இயக்கம் சர்வதேச ரீதியாக வேர்களைப் பதித்துள்ள ஒரு இயக்கமாக உள்ளது. உள்நாட்டிலும் சரி வெளிநாடுகளிலும் சரி அது சுதந்திரமாக இயங்கும் பிரதேசங்கள் எவையும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்கள் அல்ல. எனவே புதிய சட்டத்தின் மூலம் புலிகளுக்கு சார்பாக பேசுதல் எழுதுதல் பத்திரிகை நடாத்துதல் தொடர்பு வைத்திருத்தல் என்று அவர்களது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் நடக்கின்ற எந்தவொரு நடவடிக்கையையும் அரசாங்கத்தால் கட்டுப்படுத்த ஒருபோதும் முடியாது.

ஆக, இந்தச் சட்டம், புலிகளுக்கு எதிராகப் பயன்படப்போகிறதென்பதை விட மக்களுக்கு எதிராகவே பயன்படுத்தப்படப்போவதென்பதில் சந்தேகமில்லை. பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்ட போது அது பயங்கரவாதத்தைத் தடை செய்து விடும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும் அது எந்தப் பயங்கரவாதத்தையும் தடுக்கும் சக்தியைப் பெற்றிருக்கவில்லை. மாறாக நாட்டில் முற்றுமுழுதான பயங்கரவாதத்தின் ஆட்சி வளர்ச்சி பெற்றதையே நாம் கண்டோம். இந்தச் சட்டத்தின் மூலம் இன்று சிறைகளை நிரப்பிக் கொண்டிருப்பவர்கள், இலங்கை அரசாங்கத்தால் பயங்கரவாதிகள் என்று குற்றஞ்சாட்டப்படும் புலிகளோ அல்லத அவர்களைச் சார்ந்தவர்களோ அல்ல. மாறாக பெருமளவான அப்பாவி இளைஞர்களே, குறிப்பாக தமிழ் இளைஞர்களே இன்று சிறைகளை நிரப்பிக் கொண்டிருக்கிறார்கள். இது இப்புதிய புலித்தடைச் சட்டமும் எப்படிப் பயன்படுத்தப்படும் என்பதற்கு போதுமான முன்னுதாரணமாகும்.

அமைச்சர் ஒருவரது தீர்மானத்தை எந்த நீதிமன்றத்திலும் விசாரணைக்குட்படுத்தப்பட முடியாத ஒரு உயர்ந்த தீர்மானமாக்கும் இச்சட்டம் அமைச்சர் யாரை வேண்டுமானாலும் உள்ளே தள்ளவும் யாருடைய சொத்துக்களை வேண்டுமானாலும் பறிக்கவும் வகை செய்கிறது.

சட்டமியற்றும் சபைக்கும் நீதிமன்றங்களுக்கும், இடையே இந்த மாதிரியான தொடர்ச்சியான போட்டிகள் கடந்த காலங்களிலும், இருந்து வந்திருக்கின்றன. நீதிமன்றம், உருவாக்கப்படும் சட்டத்தை வியாக்கியானம் செய்து, அது சட்டத்தின் ஆட்சிக்கு எதிராகப் போகக் கூடும் என்று கருதும் பட்சத்தில் அதனை ரத்துச் செய்து தீர்ப்பு வழங்கக் கூடும் என்ற ஒரு நிலை இருப்பதால் சட்டமியற்றுவோர், நீதிமன்றத்தின் இந்த அதிகாரத்தினை தடை செய்யும் சட்டங்களை இயற்றி வந்துள்ளதை நாம் காணலாம்.

முன்னைய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக் காலத்திலும் இத்தகைய நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தும் பல கடுமையான சட்டங்கள் கொண்டு வரப்பட்டிருந்தன.

ஒரு நிர்வாகி தனக்கு வழங்கப்பட்டுள்ள தற்றுணிவு உரிமையின் பேரால், எடுக்கும் ஒரு முடிவானது, அதாவது அவர் சரியெனக் கருதும் பட்சத்தில் எடுக்கும் முடிவானது மக்கள் நலனுடன் சம்பந்தப்பட்ட-

→5

# உண்மையைச் சொல்ல இனித் தடை!

-கோமதி



கடந்த ஜனவரி 28ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட வர்த்தமானியின் பிரகாரம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டது எம்மெல்லோருக்கும் தெரிந்ததே. அவசரகால சட்டப் பிரமாணங்களின்படி பிரகடனப்படுத்தப் பட்டுள்ள இந்த மோசகரமான விதிகள் குறித்து இத்தனை வாரங்களாக எவரும் அவ்வளவு பிரச்சினைக்குரிய ஒன்றாகக் கருதியிருக்கவில்லை. ஏதோ புலிகளுக்கு எதிரான ஒன்றாகவே கருதிவந்த வேளை இந்த விதிகள் மக்களின் கருத்தறியும் சுதந்திரத்திற்கு எதிரானதென்பதையும், அரசியல் பழிவாங்கலுக்கு வகைசெய்யும் சட்டமாகவும், பத்திரிகைகளின் சுதந்திர வெளியீட்டுக்கு அச்சுறுத்தலானதென்பதையும் அண்மையில் தான் திடீரென கண்டிருக்கின்றனர். எனவே இப்போது தான் பலர் துயிலிலிருந்து மீண்டு இவ்விதிகளுக்கெதிராகப் போர்க்கொடி உயர்த்த ஆரம்பித்திருக்கின்றனர்.

இந்தச் சட்ட விதிகளின் அபாயத்தை முதலில் சகல பத்திரிகையாசிரியர்களது கவனத்துக்கும் கொண்டு வந்தவர் சண்டே டைம்ஸ் பத்திரிகையின் ஆசிரியர் சிங்க ரணதுங்க தான். அவசர கடிதமொன்றின் மூலம் பத்திரிகையாசிரியர்களுக்கு இந்த விடயத்தை அறிவித்த அவர் உடனடியாக இதற்கெதிரான நடவடிக்கைகளில் இறங்கியாக வேண்டுமென அக்கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

புதிய விதிகளின் படி (அ) "தடை செய்யப்பட்டுள்ள இயக்கத்தின் அல்லது இயக்கம் சார்ந்தவர்களால் பிரசுரிக்கப்படும் எழுத்துக்களை அல்லது பிரசுரங்களை விநியோகிப்பது அச்சடிப்பது பிரசுரிப்பது,

(ஆ) இந்த இயக்கத்தின் நோக்கங்களை முன்னெடுத்துச் செல்லுமுகமாக தகவல்களைப் பரிமாறுவது பரிமாற முற்படுவது, அல்லது இயக்கத்தின் தீர்மானங்களை அல்லது கட்டளைகளை தகவல் பரிமாற்றம் செய்வது" என்பன தண்டனைக்குரிய குற்றங்களாகும்.

இக்குற்றத்துக்கு இலக்கானவர்கள் ஏழு வருடங்களுக்குக் குறையாத 15 வருடங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும்.

சாராம்சத்தில் சொல்லப் போனால் இனி புலிகளின் செய்திகளை, பேட்டிகளை, புகைப்படங்களைப் பிரசுரிக்க பத்திரிகைகள் முனைந்தால் அந்தோ கதி தான்.

இந்த விதிகளைப் கண்டித்து "சுதந்திரப் ஊடக இயக்கத்தினர்" (FMM-Free Media Movement) அறிக்கை வெளியிடுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டாலும் கூட இது வரை அப்படி எந்த வித அறிக்கையும் வெளியிடப்படவில்லை. சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமா என சட்ட வல்லுனர்களுடன் கலந்தாலோசித்து வருவதாக அதன் செயலாளர் சீதா ரஞ்சனி சரிநிகருக்கு தெரிவித்தார். சீதா ரஞ்சனி கடமையாற்றி வரும் "யுக்திய" (சரிநிகரின் சகோதர பத்திரிகை) பத்திரிகை இறுதியாக வெளிவந்த தமது இதழில் முன்பக்கத்தில் இச்செய்தியை வெளியிட்டு கூடவே புதிய சட்ட விதிகளுக்கு சவால் விடும் வகையில் வகையில் புலிகளை ஆதாரம் காட்டி ஒரு செய்தியையும் பிரசுரித்துள்ளது.

முல்லைத்தீவில் புலிகளால் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் பொது மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டிருப்பதாகவும் அங்கு புலிகளின் சிவில் நிர்வாகம் மீண்டும் ஆரம்பிக்கப் பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ள அந்தச் செய்தி புலிகளின் மார்ச் 17ஆம் திகதியன்று வெளியிட்ட அறிக்கையை ஆதாரம் காட்டியிருக்கிறது யுக்திய.

இந்தப் புதிய விதிகளால் பத்திரிகைகள் மக்களுக்கு உண்மை நிலையை தெரியப்படுத்தும் உரிமையை இழந்துள்ளன. யாருடைய பணத்தினை வரியாக வசூலித்து இந்த யுத்தம் நடத்தப்படுகிறதோ எவர்கள் இந்த யுத்தத்தினால் நாளுக்கு நாள் கொல்லப்பட்டுக்க கொண்டிருக்கிறார்களோ, அந்த மக்களுக்கு இந்த யுத்தத்தின் உண்மைகளை தெரிவிக்க முடியாமல் போகிறது. மக்களைப் பொறுத்தளவில் யுத்தத்தின் பங்குதாரர்களாகவே உள்ளனர்.

இனி யுத்தம் பற்றி நடுநிலைமையான செய்திகளை வழங்க பத்திரிகைகளுக்கு இருந்த சந்தர்ப்பம் கூட பறி போய்விட்டது.

இத்தனை காலம் யுத்தம் குறித்த செய்திகளையும் வடக்கு நிலவரங்களையும் குறித்து அரசாங்கம் என்ன அறிவித்தல் வழங்கிய போதும் புலிகளின் பக்க நியாயங்களையும் அறிக்கைகளையும் ஒரு முறை பார்த்தால் கிட்டத்தட்ட நிலைமையை ஓரளவு ஊகிக்கலாம் என்று கருதி வந்த ஊடகங்களுக்கு இனி அரசாங்கம் சொல்வது மட்டும் தான் தகவல்.

ஆய்வாளர்களுக்கு கூட இனி புலிகளின் தகவல்களை மேற்கோள் காட்டி எந்த விடயமும் எழுத முடியாது என்பது ஒழுங்கான ஆய்வுகளுக்கு கூட இருந்த வாய்ப்புகள் அழிக்கப்பட்டுவிட்டன என்று கூடக் கூறலாம்.

→5

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

படம்: எம்.கே.எம்.ஷகீப்



# எழுப்பப்படாத கேள்விகளும் அளிக்கப்படாத பதில்களும்!

# சிந்தனைச் சக்தியை கட்டியெழுப்புவோம்!

ஒரு சிறுபான்மைச் சமூகமான இலங்கை முஸ்லிம்களது பிரச்சினைகள் குறித்து வெளிப்படையாகப் பேசவும், தீர்க்கமான முடிவுக்கு வரவும் நாம் மிக அவசரமாகச் செயற்பட வேண்டியுள்ளது. இதற்கான தேவைகள் எப்போதோ ஏற்பட்டு விட்டன. ஆயினும், சூழ்நிலைகளின் தேவைக்கேற்ப இயங்க நாம் சக்தி பெறாமல் போவது ஏன் என்பது மிகச்சிக்கலானதும், வேதனைக்கும் உரிய ஒரு கேள்வியாகும். எல்லாக் கேள்விகளுக்கும் நாம் எப்போதும் விடைகளைக்கண்டு கொள்வது சாத்தியமில்லைதான். ஆயினும், இந்தக்கேள்வி துரிதமாக விடை கண்டேயாக வேண்டிய ஒன்று.

இலங்கை முஸ்லிம்களது ஒட்டு மொத்தமான பிரச்சினைகளையும், அரசியல் ரீதியான பிரச்சினைகள் என்றே பெரும்பாலானோர் புரிந்து கொண்டிருக்கின்றனர். இது பிரச்சினைகள் பற்றிய மிக மேலெழுந்தவாரியான ஓர் புரிதலாகும். ஏனெனில், மற்ற எல்லாப் பிரச்சினைகளை விடவும் அரசியல் பிரச்சினைகள்தான் மிகத்தெளிவாக வெளித்தெரியும். இந்த நோக்கு நிலையின் மிகப்பெரிய அபாயம் என்னவெனில், நமது உண்மையான பிரச்சினைகள் பலவற்றை அடையாளம் காணமுடியாத வெறுமை நிலை நம்முள் தோன்றுவதாகும்.

'சமூக விடுதலை' என்ற கருத்தாக்கத்திற்கு அரசியலுக்கு அப்பாலுள்ள விரிந்த அர்த்தம் குறித்து நமது சமூகத்தைச் சிந்திக்க வைக்க வேண்டிய பாரிய பொறுப்பு முன்னெப்போதையும் விட நமக்கு மிக அதிகமாக உள்ளது. நமது சமூகத்துள் நிலவும் புரிந்து கொள்ள முடியாத இந்த மௌனம் கலைக்கப்பட வேண்டும்.

நமது சமூகத்தில் நிலவும் கருத்தியல் வெற்றிடம் நிவர்த்திக்கப்படுவதற்கான ஒரு வேலைத் திட்டம் குறித்து நாம் ஏன் சிந்திக்காமல் இருக்கிறோம். நமது சமூகத்துள் மிகத் தீவிரமாகச் சிந்திக்கக்கூடிய புத்திஜீவிகள், அறிஞர்கள் இல்லாத வெறுமை நிலை நீடிக்குமாயின், நாம் போய்ச்சேர வேண்டிய இலக்குகளும் சூன்யமானதாகவே அமையும் என்பது சொல்லித்தெரிய வேண்டியதில்லை.

இந்நிலை நீடிக்குமாயின் நமது அடுத்த தலைமுறை கூட பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க முடியாத வளர்ச்சியற்ற நிலையிலேயே இருக்கும்.

காலம் எப்போதும் முன்னோக்கியே நகரும். ஒரு சமூகத்தின் அசைவும், இயங்கு திசையும் அதற்கு இசைவானதாக முற்போக்காகவே இருக்க வேண்டும். நாம் மீண்டும் மீண்டும் நமது விவகாரங்களில் குழந்தைப் பருவத்து அணுகுமுறைகளையே கடைப்பிடிப்போமாயின் காலவோட்டத்திற்கு எதிர்மறையாகப் பின்னோக்கி நகர வேண்டிய அல்லது ஒரு குறிப்பிட்ட புள்ளியில் தொடர்ந்தும் தேங்கி நிற்க வேண்டிய நிலையே ஏற்படும். ஏறத்தாழ அவ்வாறான ஒரு நிலையிலேயே இன்று நாம் இருக்கிறோம்.

இன்று நமக்குள்ள மிக முக்கியமான பணி, நமது பிரச்சினைகளை அடையாளம் காண்பதும், அவற்றைப் பல்வேறு அலசி ஆராய்வதும் அவை பற்றிய விரிவான தேடல்களைத் கோணங்களில் தொடக்குவதுமாகும். எந்தப் பிரச்சினைகளையும் சரியாக அடையாளம் காணாமல் அவற்றுக்குத்தீர்வு தேடப்போகும் முதிர்ச்சியற்ற போக்கால் நமது சமகாலப் பிரச்சினைகள் பல குறைப்பிரசவங்களையே தீர்வுகளாக வெளித்தள்ளிய எண்ணற்ற அனுபவங்கள் நமக்கு உள்ளன.

முஸ்லிம்கள் பற்றிய ஆய்வுகள் மிக அரிதாகவே வெளிவருகின்றன அல்லது வெளிவருவதில்லை என்ற சூழ்நிலையே தொடர்ந்தும் வருவதற்கான உண்மைக் காரணம் என்ன எனச் சிறிது காலத்திற்கு முன் ஒரு சிங்களப்புத்திஜீவி கேட்டார். உங்களது பிரச்சினைகள் என்ன? அதற்கான அடிப்படைக்காரணிகள் என்ன என்பதனைக் கூடப் புரிந்து கொள்ள முடியவில்லையே என்று அவர் விசனப்பட்டார். இதற்கு மிகச் சரியான பதிலைக்கூற முடியாமல் சங்கடப்பட்டது எனக்கு நன்றாகவே ஞாபகத்திலிருக்கிறது.

நம்மிடையே அரசியல் ரீதியாகவோ, சமய ரீதியாகவோ பல்வேறுபட்ட அபிப்பிராய பேதங்கள் இருக்கலாம்; இருக்கின்றன. இரு தனிநபர்களிடையே ரசனை சார்ந்த அற்ப விடயங்களில் கூட முரண்பட்ட அபிப்பிராயங்கள் நிலவுவது சர்வசாதாரணம் எனில், கருத்து, சிந்தனை, அணுகுமுறை தொடர்பாக அபிப்பிராய பேதங்கள் தோன்றுவதற்கான வாய்ப்புகள் மிக மிக அதிகமாகும். கருத்து வேறுபாடுகள் இயல்பானவை; யதார்த்தமானவை. இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாமல் மேலெழுந்தவாரியாக சமூக ஐக்கியம் பற்றிக் கோஷமெழுப்புவதில் அர்த்தமில்லை. இந்த முரண்பாடுகளிடையே ஒருமித்த கருத்தொன்றை அல்லது ஒப்பீட்டளவில் குறைவான அபிப்பிராய பேதமுள்ள கருத்தைப்பெற முயல்வதே நடைமுறைச் சாத்தியமான தீர்வாகும்.

நம்மிடையே ஆயிரம் முரண்பாடுகள் இருக்கலாம். ஆயினும், இந்த முரண்பாடுகள் அனைத்தையும் விட நாம் ஒன்றுபட்டுப்பேசுவதற்கும், சிந்திப்பதற்கும் உள்ள ஒரேயொரு நியாயம் மிகவும் வலிமையானது. இதை எப்போது நாம் தெளிவாகப் புரிந்து பொது பிரச்சினைகளிலாவது குறைந்த பட்சம் ஒன்றுபட முடியுமோ அப்போதுதான் நமது சமூக விடுதலை அர்த்தமுள்ளதாக மாறும்.

நமது சமூக விடுதலைக்கான போராட்டம் வெறுமனே அரசியல் ரீதியான போராட்டமாகக் குறுக்கப்படும் அபாயம் இனியும் தொடரக்கூடாது. ஒரு சில அரசியல் தலைவர்களை நமது பிரச்சினைகளையெல்லாம் தீர்க்கும் ரட்சகர்களாக நம்பி, நமது 'சமூக விடுதலை'யின் ஒரு பகுதிக்கு நேர்ந்த கதி சொல்லித் தெரிய வேண்டியதொன்றல்ல.

பல்கலைக்கழகம், சமூக ஆய்வு நிறுவனங்கள் போன்றன எந்தளவு தூரத்துக்கு நமது பிரச்சினைகள் பற்றிப்பேசியுள்ளன? உயர்கல்வி நிறுவனங்களிலுள்ள வளங்களை நாம் மிகச் சரியாகப் பயன்படுத்தியுள்ளோமா என்பன போன்ற கேள்விகளுக்கான பதில்கள் நாம் அறிந்தவைதான். சமூகமாற்றத்தின் தொடக்கப் புள்ளிகளே உறைநிலையில் இருந்தால், சாமான்ய மக்களில் மாற்றங்களை எதிர்பார்ப்பது எப்படி? முஸ்லிம்களது சமூக விடுதலைப் போராட்டத்துக்கு ஏற்பட்டுள்ள இந்தத் தத்துவ வறுமையை, செயலூக்கத்திலுள்ள சோர்வை, மந்தகதியிலான நகர்வை மாற்ற வேண்டிய சக்திகள் சுயமாக முன்வருவதால் மட்டுமே இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கலாம். நமது பிரச்சினைகளைப் பற்றி நாம் பேசாமல் வேறு யார்தான் பேசுவது?

தனிமனிதர்களாக இயங்குவது மிகவும் இலகுவானது. கூட்டாக இயங்குவதுதான் மிகக் கடினம். நாம் இன்னமும் நமது பணிகள் பலவற்றை ஆரம்பிக்கக்கூட இல்லை. ஆயினும் உன்னதமான இறுதி விளைவுகள் குறித்த கனவுகளில் திளைத்திருக்கிறோம்.

தொடர்ந்த முயற்சி, தீவிர உழைப்பு, ஆழ்ந்த பொறுமை, சமூக மாற்றத்திற்கான படிமுறை நகர்வு என்பன பற்றிய போதிய புரிதல் இல்லாமல் கனவுகளில் மட்டும் திளைத்திருப்பது அழிவுக்கே நம்மை இட்டுச்செல்லும்.

எந்தவொரு சமூகத்திலும் வளமான ஆக்க சக்தி அதனது இளைஞர்களே. இளைஞர்கள் எப்போதும் மாற்றத்தை விரும்புபவர்கள். அமைப்புக்கு எதிராக குரல் எழுப்புபவர்கள். செயல்வேகமுள்ளவர்கள். எனவே, முஸ்லிம் இளைஞர்கள் உடனடியாகக் களத்திற்கு வர வேண்டும். முதிர்ந்தவர்களது அனுபவமும், அறிவு ஞானமும். இளைஞர்களின் செயல் வேகமும் இணைந்த ஒரு புதிய சக்தியை நாம் கட்டியெழுப்புவோம்.

இந்தத் தருணத்தில் நமக்குத்தேவை ஒரு பலமான சிந்தனைசக்தி (Think Tank) - அதுவே நமது இலக்குகளை வரையறுத்து, அதற்கான பாதைகளை அடையாளம் காட்ட வேண்டும். அதனை அடைவதற்கான வியூகங்களை வகுக்க வேண்டும். அந்தச் சிந்தனைச் சக்தியைக் கட்டியெழுப்புவதை நமது முதன்மையான பணியாகக் கொள்வோம்.

**ஸிராஜ் மஷ்ஹூர்**

---

இந்தியத்தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு கிட்டத்தட்ட இரண்டு வாரகாலமாக யார் பிரதமர் என்று முடிவு செய்யப்பட முடியாத இழுபறி நிலை நிலவியது.

ஜனாதிபதி காங்கிரஸ் ஆட்சிக்கு வருவதற்கான வாய்ப்பில்லை என்ற கசப்பான உண்மையைத் தெரிந்து கொண்டு பாரதிய ஜனதா கட்சியை ஆட்சியமைக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

எப்படியாவது ஆட்சியமைத்துவிட வேண்டும் என்பதற்காக கண்மூடித்தனமான ஒரு கூட்டை உருவாக்கும் முயற்சிக்கு வாஜ்பாய் உடனடியாக தயாராக இருக்கவில்லை. முடிந்தளவுக்கு உறுதியான அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்பதில் அவர் கவனமாக இருந்ததால் ஆரம்பத்தில் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க ஆசைப்பட்ட ஜெயலலிதா கூட அடக்கி வாசிக்க நேர்ந்தது.

பிரதமர் வாஜ்பாய்தான் என்ற அறிவித்தல் வந்ததுதான் தாமதம், விழுந்தடித்துக் கொண்டு அவரை வாழ்த்த அங்கு ஓடிப்போனவர் வேறு யாரும் அல்ல. நம்ம கதிர்காமர் தான். ஜனாதிபதியின் வாழ்த்துச் செய்தியுடன் போன அவர், வாஜ்பாய்க்கு தலதா மாளிகையிலும், கொழும்பிலும் புலிகள் 'பொதுமக்களுக்கு' எதிராக நடாத்திய தாக்குதலைப்பற்றி 'விளக்கமளித்தார்'

இந்திய அரசாங்கமாக இப்போது தெரிவு செய்யப்பட்டிருக்கும் அரசாங்கம், ஒரு காலத்தில் இந்து வெறியைப் பிரச்சாரம் செய்த, வரலாற்றுப் புகழ்பெற்ற பாபர் மசூதியை உடைத்த சிவசேனையினை வழிநடாத்தும் கட்சி என்பதால் எங்கே அது புலிகளுக்கு ஆதரவாக இருந்துவிடுமோ என்ற பயம் இலங்கை அரசுக்கு. போதாக் குறைக்கு, அந்த அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டிருப்பவர் சமதா கட்சித்தலைவர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ். அவர் தீவிர காங்கிரஸ் எதிர்ப்பாளர் மட்டுமல்ல, ஒரு புலி ஆதரவாளர் என்றும் பேசப்படுபவர். கடந்த மார்கழி மாதம் 'புலிகளின் அமைப்பு' என்று கூறப்படுகின்ற 'ஈழத் தமிழர்களுக்கான ஒற்றுமை ஸ்தாபனம்' என்ற அமைப்பின் மாநாட்டை டில்லியில் நடாத்த குஜ்ராலின் அரசாங்கம் தடை விதித்தபோது, அதை தனது வீட்டில் நடாத்த உதவியவர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் (விபரங்கட்கு பார்க்க சரிநிகர் இதழ் 138) இதனால் இன்னமும் உறுதியாக 'புலிகளின் ஆள்' என நம்பப்படுபவர்.




இந்த நிலையில் கதிர்காமர் அங்கு ஓடிப்போனதில் வியப்பில்லை.

ஆனால், இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதரகமும், இலங்கை வெளிநாட்டமைச்சும் என்னதான் பெரிதாக அறிக்கை விட்டு 'இலங்கையுடன் இந்தியா தொடர்ந்து அதே உறவைப்பேணும்' என்று வாஜ்பாய் சொன்னதாகக் கூறிய போதும், கதிர்காமரது பயணம் பெரும் வெற்றியை தந்ததாகக் கூற முடியாது.

தலதா மாளிகையில், மற்றும் கொழும்பில் நடந்த 'பொதுமக்கள் மீதான தாக்குதல்கள்' பற்றி கதிர்காமர் எவ்வளவோ எடுத்துக் கூறிய பின்பும் வாஜ்பாய் 'புலிகளை நாம் கவனிப்போம்' என்று சொல்லவில்லை. மாறாக, இம் மாதிரியான நடவடிக்கைகளுக்கு எமது அரசாங்கத்திடமிருந்து ஆதரவு கிடைக்கப் போவதில்லை என்று தெரிவித்திருந்தார். இந்திய அரசியல்வாதிகளுக்கு பேசக்கற்றுத் தரத் தேவையில்லை. அவர்கள் ராஜதந்திர ரீதியான பேச்சுக்களுக்கு பெயர் போனவர்கள் என்பதை எடுத்துக் காட்டும் ஒரு பதில்தான் மேலே வாஜ்பாய் சொன்னபதில். 'இம் மாதிரியான செயல்களுக்கு', 'எமது அரசாங்கம்' என்பவை போன்ற சொற்களுக்குள் ஆயிரம் அர்த்தங்கள் இருக்கலாம்.

புலிகள் பற்றி எப்படி நடந்து கொள்வார் என்ற கேள்விக்குக் கூட வாஜ்பாய் அளித்த பதில் அவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தை சுட்டிக் காட்டியது தான்!

அந்த தேர்தல் விஞ்ஞாபனம் 'தமிழ் மக்களின் சட்டபூர்வமான அபிலாஷைகளை அங்கீகரிக்கும் ஒரு ஐக்கிய இலங்கையையே நாம் ஆதரிக்கிறோம்' என்று கூறுகிறது. இந்த 'ஐக்கிய இலங்கை' மற்றும் 'ஆதரிக்கிறோம்' என்ற வார்த்தைகளும் ஆயிரம் அர்த்தங்கள் கொள்ளக்கூடியவை. இந்தியா இலங்கையின் இறைமையை மதிக்கும் அதே வேளை, பிரிவினை வாதத்தையோ, வன்முறையையோ அது ஆதரிக்காது' என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

கதிர்காமருக்குக் கிடைத்த பதில் இது தான்.

இந்தப் பதிலின் மூலம் வாஜ்பாய் எந்தப் புதிய வாக்குறுதியையோ, உடன்பாட்டையோ கதிர்காமருக்குத் தெரிவிக்கவில்லை. அவர் பிரச்சினைக்குரியவரான பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ்சை சந்திக்கவும் இல்லை. பதிலாக காங்கிரசின் புதிய தலைவி சோனியாவைச் சந்தித்து விட்டுத் திரும்பியிருக்கிறார்.

இந்திய அரசாங்கமோ, அதன் தலைவர்களோ ஒன்றும் தெரியாத 'பபா'க்கள் அல்ல. இங்கு நடக்கும் ஒவ்வொரு விடயமும் அவர்களுக்குத் தெரியும். அவர்கள் இந்தியாவின் நலன் என்ன என்ற அடிப்படையில் இருந்து ஒரு போதும் மாறப்போவதில்லை. அதவேளை தமது கட்சி நலனை அடிப்படையாகக் கொண்டும் சில நடவடிக்கைகளை அவர்கள் எடுக்க வேண்டும். ஆனால் அந்த நடவடிக்கைகளும் இந்திய நலனுக்கு எதிராக ஒரு போதும் அமையப் போவதில்லை.

காங்கிரஸ் விரோதிகள் என்பதால், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 26 பேரினது நிலை, ஜெயின் கமிசன் அறிக்கை, புலிகள் இந்தியாவில் நடமாடுவதற்கான தடை என்பவற்றில் புதிய அரசாங்கம் மாற்றம் கொண்டு வர உதவக் கூடும் என்று புலிகள் நம்பக்கூடும். ஆனால் இந்திய அரசின் நலன் வாஜ்பாயின் நலனை விட உயர்ந்தது என்பது முக்கியமான ஒரு விடயமாகும்.

மாறிவரும் உலக சூழலும் உள்நாட்டுச் சூழலும் நிரந்தரமாக இலங்கைக்குச் சாதகமாக இந்தியா இருக்கும் என்றோ புலிகளுக்கு தொடர்ச்சியாக எதிர்ப்பாக இருக்கும் என்றோ, கூறமுடியாது என்பதையே காட்டுகின்றன. கதிர்காமரின் பிரச்சாரத்தையும் மீறி புலிகளுக்கான செல்வாக்கும் உலக மட்டத்தில் கடந்த ஆண்டை விட இவ்வாண்டு வளர்ந்து செல்வதாகவே தோன்றுகிறது. அதாவது கதிர்காமருக்கு நிரந்தரமான ஒரு வெற்றி கிடைப்பதற்கு சாத்தியம் குறைந்து கொண்டே போகிறது.

இப்போது இங்கு விதித்துள்ள புலித்தடை, அதனோடு வந்துள்ள பிற சட்டங்கள் எல்லாம் இந்த அரசாங்கத்தின் ஜனநாயக விரோத, பொய்ப் பிரச்சார அரசியலை அம்பலப் படுத்தப் போகின்றன.

இது யாருக்கு சாதகமாக அமையும் என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

www.tamilarangam.net



# “ஆம்.. பிரபாகரன் ஆளுநராக்கப்பட வேண்டும்”

-தொண்டமான்

தமிழில்: எம்.கே.எம். ஷகீப்
நன்றி: சண்டே லீடர்



**வடக்குக் கிழக்குப் பிரதேசம் சுமார் ஐந்து வருடங்களுக்கு விடுதலைப் புலிகளுக்குக் கொடுக்கப்பட்டு, அதன் தலைவர் அப்பிரதேசத்தின் ஆளுநராகவும் நியமிக்கப்பட வேண்டுமென்றும் அண்மையில் தெரிவித்திருந்தீர்கள். இவ்வாறான ஒரு சிந்தனைக்கு அடித்தளமிட்டது எதுவென்று கூறுவீர்களா?**

தற்போதையப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக புலிகளுடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளெல்லாம் தோல்வியடைந்து விட்டன. பண்டா - செல்வா ஒப்பந்தமும் தோல்வியடைந்த ஒன்றாகவே இருந்தது. இவ்வாறான தோல்விகளால் ஜனநாயக சிந்தனை கொண்ட தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் ஏமாற்றமும், அரச தலைமைத்துவத்தில் நம்பிக்கையையும் இழந்தனர். இவ்வாறான நிலை தமிழ்க்கட்சிகளின் வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு இட்டுச் சென்றது. எனினும் அங்கும் இந் நிலை. எதற்கும் தீர்வு காணப்படவில்லை. கடந்த ஐம்பது வருடங்களாக மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசாங்கங்கள் தெற்கிலும், வடக்கிலுமாக இளைஞர் போராட்ட எழுச்சிக்கு வித்திட்டவைகளாகவே உள்ளன. சிங்கள தலைமைத்துவம் இந்த நாட்டை ஆள்கின்ற முறைமை சிறுபான்மையினரிடத்தில் நம்பிக்கையைத் தோற்றுவிக்கவில்லை. இதன் விளைவாக, ஜனநாயகத் தமிழ்க் கட்சிகளிடம் தனியான ராஜ்யமொன்றைக் கோரும் எண்ணம் ஏற்பட்டது.

இப்போது அரசுக்கும், புலிகளுக்குமிடையே யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அரசாங்கம் இந்த நாட்டை பாதியாய்ப் பிரித்து புலிகளுக்குக் கொடுத்து விடவும் மாட்டாது. இந்நிலையில், சமாதானத்தை ஏற்படுத்தக்கூடிய ஏதாவது ஒரு வழிமுறை இருக்க வேண்டும். எனக்கு ஒரு வாக்குக் கூட இல்லாத நிலையில், முன்னாள் ஜனாதிபதி ஜயவர்தன என்னை பாராளுமன்றத்துக்கு அழைத்தார். முழுப்பாராளுமன்றமே எனக்குத்தரப்பட்டதென்று இப்போது யாராவது சொல்லலாமா? இல்லை. சொல்ல முடியாது. ஆனால், இதுதான் அனேக மக்களால் விளங்கிக் கொள்ளப்படுவதில்லை. அவர் என்னை நல்ல மனதுடன் அழைத்தார். நான் ஏற்றுக்கொண்டேன்.

இது எனக்கு ஒரு பொறுப்புணர்ச்சியைத் தந்தது. இதேபோன்று இந்த அரசாங்கம் குறிப்பிட்ட காலத்துக்கு பிரபாகரனை ஆளுநராக்கினால் அவரும் பொறுப்புணர்வுடன் செயல்படுவார். வடக்கு - கிழக்கு மாகாணத்தின் ஆளுனர் பிரபாகரன் தான். இவர் இந்த நாட்டின் ஜனாதிபதியுடைய அனைத்து அதிகாரங்களையும் செயற்படுத்துவார் என்று பிரகடனப்படுத்தப்பட வேண்டும்.

**உங்கள் கருத்தின்படி, வடக்கு கிழக்கைப் புலிகளிடம் ஒப்படைத்த பின் அதற்கடுத்த கட்டம் என்னவாக இருக்கும்?**

ஐக்கிய இராச்சிய அரசாங்கத்துக்கும், சீன அரசாங்கத்துக்கும் இடையே உடன்படிக்கை செய்யப்பட்ட பின் ஹொங்கொங்குக்கு என்ன நடந்தது? அவர்கள் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவில்லையா? ஹொங்கொங்கை சீனாவிடம் மீள ஒப்படைக்கவில்லையா? இங்கேயும் அப்படியான சில விடயங்கள் நடக்கட்டுமே. சில காலங்களின் பின்னர் உடன்படிக்கைக் கேற்ப பிரபாகரனும் வடக்கு கிழக்கை அரசாங்கத்திடம் மீள ஒப்படைக் கட்டும் விடுங்களேன். இது தொடர்பில் கொடுத்து எடுக்கக்கூடிய ஒரு கொள்கை நிலவ வேண்டும். பிரபாகரனின் நிர்வாகக் காலம் முடிவடைந்ததும் வடக்கு கிழக்கு தானாகவே ஆட்சியிலிருக்கும் அரசாங்கத்திடம் வந்து விடவேண்டும்.

**ஜனாதிபதி சந்திரிகா வெளிநாட்டு சஞ்சிகையொன்றுக்கு அளித்த பேட்டியொன்றிலும், நீங்கள் சொன்ன மாதிரி வடக்கு - கிழக்கை பத்து வருடங்களுக்கு பிரபாகரனிடம் ஒப்படைக்க வேண்டும் என்று சொல்லியிருந்தார். பின்னர் அது பற்றி விமர்சனங்கள் வந்தபோது தான் அதை ஒரு ஜோக்காகவே சொன்னதாகக் கூறியுள்ளார். நீங்கள் இதில் எந்த அளவு சீரியசாக இருக்கிறீர்கள்?**



நான் சொன்னேனோ, சொல்கிறேனோ அதில் எப்பவும் சீரியசாகவே இருக்கிறேன். ஜனாதிபதி, தான் சொன்னது ஜோக் என்று சொல்லியதையிட்டு ஒன்று கூற விரும்புகிறேன். இவ்வாறெல்லாம் 'ஜோக்குகள்' கூறுவதால்தான் சிறுபான்மையினர் சிங்கள அரசாங்கங்களை சந்தேகக்கண் கொண்டு நோக்குகிறார்கள். என்னைப் பொறுத்தவரை நான் இதில் சீரியஸாகவே இருக்கிறேன். இன்று வடக்கு கிழக்கு மக்கள் மாத்திரமல்ல முழு நாட்டினருமே அவஸ்தைக்குள்ளாகியிருக்கிறார்கள்.

**தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் புலிகள் தான் என்று தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளாத நிலையில் வடக்கு கிழக்கைப் புலிகளுக்கு கொடுப்பது நியாயமானதாக இருக்குமா?**

இருக்கலாம், இல்லாமலிருக்கலாம். அரசாங்கம் இன்று புலிகளால் தான் பேச்சுவார்த்தைக்கு தயாராகிறதே தவிர தமிழ்க் கட்சிகளாலல்ல. இப்போது எனக்கிருக்கிற கேள்வி, தமிழ்க் கட்சிகள் என்ன செய்தது? என்ன செய்யும்? என்பதே. வட்டுக் கோட்டைத் தீர்மானத்திற்கு வந்த தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற ஜனநாயகக் கட்சிகள் கூட இந்தப் பிரச்சினையிலிருந்து ஒதுங்கியே அல்லது ஒதுக்கியே வைக்கப் பட்டுள்ளார்கள். அத்துடன் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க இந்தத் தமிழ்க் கட்சிகள் ஒன்றுமே செய்யவில்லை.

**ஏனைய தமிழ்க் கட்சிகளை விட புலிகள் ஏதாவது நல்லது செய்வார்கள் என்று நீங்கள் கருதுகிறீர்களா?**

அவர்கள் ஏற்கெனவே மற்ற அரசியல் கட்சிகளை விட அனேகம் செய்திருக்கிறார்கள். வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்குப் பிறகு புலிகள் அளவுக்கு வேறு எந்தக்கட்சிகள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்தனர் என்று சொல்லுங்கள் பார்ப்போம் அரசாங்கத்தை பேச்சுவார்த்தைக்கு இழுத்த ஒரேயொரு தமிழ்க்குழு புலிகள் இயக்கம் தானே தவிர ஏனைய தமிழ்க் கட்சிகள் அல்ல. என்னைப் பொறுத்தளவில், புலிகள் தான் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதியா, இல்லையா என்று தீர்ப்புக் கூறுவது என்னுடைய வேலையல்ல என்று கூறுவேன். எனக்கு வேண்டியதெல்லாம் சமாதானமே.

**நீங்கள், புலிகள் தான் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்று கருதுகிறீர்களா?**

என்னுடைய வகை முறைமைகளை (Formula) நீங்கள் கருத்திற் கொண்டால், இவ்வாறான கேள்வி எழமாட்டாது. அவர்களால் தான் தமிழ் மக்களுக்கு பொருட்களை விநியோகிக்க, வழங்க முடிகிறது

**தற்கால நெருக்கடியை அரசாங்கத்தால் எவ்வாறு தீர்க்க முடியும் என்பதை சுருக்கமாகச் சொல்ல முடியுமா?**

நாம், நாட்டில் இரண்டு பெரிய பிரச்சினைகளை எதிர்நோக்கியிருக்கின்றோம். ஒன்று, இனப்பிரச்சினை. மற்றையது, பிரஜாவுரிமைப் பிரச்சினை. இதை நான் வெற்றிகரமாகக் கையாண்டிருக்கிறேன். நான் ஒரு செயற்பாட்டு மனிதன் (Practical Man) வெறும் கதைஞன் அல்ல.

இந்தப்பிரச்சினைகளில் என்னுடைய நிலைப்பாடு எது என்பது பற்றி இந் நாட்டின் ஜனாதிபதியிடம் சொல்லியிருக்கிறேன். சிங்கள நிர்வாகத்தில் தமிழர்களுக்கு எந்த நம்பிக்கையுமில்லை. மறுபுறம், தமிழர்களுக்கென்று அரசாங்கம் தனியானதொரு அலகை வழங்கி விடுமென்றும் நீங்கள் எதிர்பார்க்க முடியாது. இதன் காரணமாகத்தான் நான் ஹொங்கொங் - சீனா விடயத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று சொல்கிறேன். பல்வேறு அரசியல் சிந்தனைகள் நிலவுகிற ஒரு சிறிய பிரதேசம் ஹொங்கொங். ஆனால் சீனாவைப் பாருங்கள். அது ஒரு பாரிய சோஷலிச நாடு. இப்போது இந்த இரண்டு நாடுகளும் ஓர் ஒன்றிணைந்த சக்தியாக மாறியுள்ளது. இதேமாதிரியான ஒரு முறையை ஏற்கெனவே 1987 இந்திய - இலங்கை

→ 19

## புலித்தடை...

3 →

தாக இருக்கும் பட்சத்தில் நீதிமன்றங்களில் நியாயம் கோரப்படுவதற்கான வாய்ப்பு இருக்க வேண்டும். அப்போது தான் அந்த நிர்வாகியின் வடிவில் சட்டத்தின் ஆட்சி நடப்பதற்கான உத்தரவாதம் நிலவ முடியும். அல்லாவிடில் அங்கு தனி நபர் ஆட்சியே நடக்கும் என்பதே இவ்வாய்ப்பு வழங்கப்படுவதற்கான காரணமாகும். ஆனால் அரசாங்கங்கள் தம்மைப் பாதுகாக்க நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தும் சட்டங்களை இயற்றி வந்துள்ளன. "முடிந்த முடிவாகும்", "இறுதியானதும் முடிவானதும்", "எந்த நீதிமன்றத்திலும் எவ்விதத்திலும் கேள்வி எழுப்பப்பட முடியாததும்" போன்ற வாக்கியங்களால் அவை நீதிமன்றத்தைக் கட்டுப்படுத்த முனைந்துள்ளன.

ஆயினும் நீதிமன்றங்கள் இச்சட்டங்களுக்கு புதிய புதிய வியாக்கியானங்களை ஏற்படுத்தி இச்சட்டங்களையும் கேள்விக்குட்படுத்தி வந்ததுண்டு. இதனால் 1972 அரசியலமைப்புச் சட்டத்தில் கொண்டுவரப்பட்ட வியாக்கியான சட்ட மூலத்துக்கான திருத்தத்தில் எந்த வியாக்கியானத்தையும் செய்ய முடியாதிருக்கும்படியான ஏற்பாடுகளை அன்றைய அரசு புகுத்தியது.

இவையெல்லாம், தான்தோன்றித்தனமான அரசியல் நிர்வாக முடிவுகட்கும், பழிவாங்கல்களுக்குமே இடமளித்தன என்பதை வரலாறு கண்டது. விளைவு, அவர்களை விட மோசமான ஒரு அணியிடம் 1977இல் ஆட்சி யைமாறியது. அவர்களும் தம் பங்குக்கு நீதிமன்றத்துக்கு எதிராகச் செயற்பட்டு வரலாறு படைத்தார்கள். சட்ட இயற்றல் ரீதியாக மட்டுமல்ல, அதற்கு வெளியே காடைத்தனத்தின் மூலமாகவும், அதை கட்டுப்படுத்த முனைந்தார்கள்.

எப்படியோ சந்திரிகா அரசாங்கமும் தான் நினைத்ததைச் செய்வதற்காக எந்த அதிகாரத்தையும் எவ்வளவு மோசமான சட்டத்தையும் கொண்டு வருவதில் தனது முன்னோர்க்கு சற்றும் சளைத்ததல்ல என்று வெளிக்காட்டி விட்டது. முன்னாள் அமைச்சர் விஜயபால மெண்டிஸ் தனக்குச சொந்தமான பெறுமதி குறைந்த காணியொன்றை அரசுக்கு சொந்தமான மிகப் பெறுமதிவாய்ந்த காணியொன்றுடன் கைமாற்றி காணி மோசடி செய்தார் என்ற ஜனாதிபதி விசேட ஆணைக்குழுவின் முடிவிற்கிணங்க அவரது குடியியல் உரிமைகளைப் பறிப்பதற்கான முயற்சியில் இப்போது சந்திரிகா அரசாங்கம் இறங்கியுள்ளது. எந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியியல் உரிமைகளை ஜே.ஆர் ஜெயவர்தன பறித்தாரோ அதே சட்டத்தைப் பயன்படுத்தி இன்று மெண்டிஸ் மீது நடவடிக்கை எடுக்க இறங்கியுள்ளது இன்றைய அரசாங்கம். சாதாரண சட்டங்களின் கீழேயே தண்டிக்கப்படக் கூடிய ஒரு குற்றத்திற்கு இத்தகைய ஒரு தண்டனையை நோக்கிப் போவது ஒன்றும் மக்கள் மீதான அக்கறையினால் அல்ல. மாறாக அன்று ஜே.ஆர் செய்தது போன்ற அரசியல் பழிவாங்கல் நோக்கத்திற்காகவே.

ஆக, இப்படி அரசியல் பழிவாங்கல் இலட்சணம் படைத்த ஒரு அரசாங்கமும் அதன் அமைச்சர் பிரதானியும் இன்றைய புதிய புலித்தடைச் சட்டத்தை எப்படிப் பயன்படுத்துவார்கள் என்பது குறித்து எந்த சந்தேகமும் தேவையில்லை. நீதிமன்றங்களின் வாயைக் கட்டிப் போட்டுவிட்டு தமது தர்பாரை நடாத்த அரசாங்கம் கொண்டுவந்துள்ள இந்தச் சட்டம், புலிகளுக்கல்ல. உண்மையில் தமிழ் மக்களிடம் எஞ்சியிருக்கும் எச்சசொச்ச சுதந்திரத்தின் மீது விதிக்கப்பட்ட ஒரு தடைச்சட்டமாகும்.

நமது "தமிழ் தலைவர்கள்" இதைப் பற்றி என்ன சொல்லப் போகிறார்களோ?

## உண்மையை...

3 →

கள நிலவரம் கூட அரசாங்கம் கூட்டிச் சென்று காட்டும் இடங்களையும், அங்கு அரசாங்கம் சொல்லும் தகவல்களையும், கருத்துக்களையும் மட்டும் தான் தொடர்பூடகங்கள் பயன்படுத்த முடியும். ஆனால் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குப் போய் அவர்களின் பேட்டிகள், புகைப்படங்கள், செய்திகள் என்பனவற்றைப் பிரசுரிக்க முடியாது. இந்த சுதந்தரமாக கருத்தறியும் அடிப்படைச் சுதந்திரம் பறிக்கப்பட்டிருக்கும் இந்தச் சட்ட விதிகளின் அபாயகரமான விளைவுகளை இன்னும் பலர் உணராதுள்ளதன் காரணம் தான் விளங்கவில்லை.

இதில் உள்ள பெரும் வேடிக்கை என்னவென்றால், ஜனவரி 28ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வந்த இவ்விதியின் பின்னர் வாராந்தம் பாதுகாப்பு படையினரால் நடத்தப்பட்டு வந்த பத்திரிகையாளர் மாநாட்டின் போது அவர்களாலேயே மீறப்பட்டுள்ளது தான்.

ஒவ்வொரு வாரமும் பிரிகேடியர் சரத் முனசிங்க பத்திரிகையாளர் மாநாட்டின் போது "புலிகளின் வானொலியை இடைமறித்து கேட்ட போது அவர்களின் வானொலியில் இன்னது கூறப்பட்டது"எனக் கூறி வந்துள்ளார். இந்த விதிகளை முதலில் மீறியிருப்பதே இதனை நடைமுறைக்குக் கொண்டு வந்த அரசாங்கமும், பாதுகாப்பு துறையினருமே என்றால் இதை விட வேடிக்கையும், சட்ட துஷபிரயோகமும் வேறென்ன?

இந்தச் சட்ட விதிகள் இப்படியான துஷ்பிரயோகங்களுக்கு நிச்சயம் இடமளித்துள்ளது. இது மட்டுமன்றி இந்தச் சட்டத்தைப் போட்டவர்களே மீறலாம் என்பது எவ்வளவு பெரிய ஜனநாயக விரோதச் செயல்? எனவே ஒட்டுமொத்த அடக்குமுறைக்கும் பழிவாங்கலுக்கும் பயன்படப் போகும் இந்தச் சட்டம் அரச பயங்கரவாதத்தை தடையின்றி செய்யப் பிறப்பித்துள்ள சட்ட அங்கீகாரமென்றே கூற வேண்டும்.

மேலும் நடைமுறையில் இருக்கும் அரசாங்கக் கட்டுப்பாட்டு தொடர்பு சாதனங்களைப் போலவே ஏனைய தொடர்பு சாதனங்களும் இனிமேல் அரசாங்கம் தரும் செய்திகளை மட்டும் தரப்போகின்ற அபாயம் வந்துள்ளது. அது தான் அரசின் தேவையும் கூட. சகல தொடர்பு ஊடகங்களையும் அரசின் பிரச்சார ஊடகமாக மட்டும் இருக்கச் செய்வதே அதன் தேவை. இந்த தேவையை அடைவதற்கு அரசு கையாண்டுள்ள இந்தப் "பயங்கரவாத" நடவடிக்கையை எதிர்த்து சில பத்திரிகைகள் முடிந்தால் கைது செய்யட்டும் அதன் பின் பார்ப்போம். சட்டத்தை முகம் கொண்டு அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை அம்பலப்படுத்துவோம் எனச் சில நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கின்ற போதும் இது எவ்வளவு தூரம் சாத்தியமாகப் போகிறது? தொடர்ந்து தாக்குப் பிடிக்குமா? என்பதே கேள்வியாக இருக்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விஜய குமாரணதுங்க : மீண்டும் படுகொலை ?



அன்று தோழர் விஜய குமாரணதுங்கவைக் கொன்றவர்கள், தாம் அவரை அரசியல் அரங்கிலிருந்து விலக்கி ஒதுக்கித் தள்ளிவிட்டதாகக் கூறினார்கள். அவரின் ஞாபகார்த்த நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு விஜய குமாரணதுங்கவுக்கு இரண்டாவது முறையும் அதே வேலையைச் செய்கிறார்களோ என்று தோன்றியது. இந்த நிகழ்ச்சியில் அவர்கள், விஜய எதிர்பார்த்தது கூட பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தைப்போன்ற அதிகாரத்துவமொன்றை அமைக்கக்கூடிய வடிவமொன்றையே என்று காட்டினார்கள். இது மிகவும் அநியாயமான ஒரு புனைவாகும்.

விஜயகுமாரணதுங்க பற்றி எனக்கும் விமர்சனங்கள் இருந்தன. அவர் எப்படிப் பார்த்தாலும் ஒரு புரட்சியாளர் அல்லர் தான். ஆனாலும் இதைப் போன்று பச்சை பச்சையாகவே உலக முதலாளித்துவ முறைக்கு எடுபிடி வேலைசெய்யும் அரசாங்கமொன்றை அமைக்க அவர் நினைத்திருந்தார் எனக்கூறுவதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. அப்படிக்கூறுவது அவரை மீண்டும் படுகொலை செய்வது போன்ற ஒரு செயலாகும்.

விஜய எதனைச் செய்யாவிடினும் ஒன்றைச்செய்தார். அன்று இருந்த ஐக்கிய, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய முதலாளித்துவக் கட்சிகள் இரண்டுக்குமே எதிராகவும், அதே போல் இனவாத சக்திகளுக்கு எதிராகவும் இடதுசாரிகளின் பொதுக் கூட்டொன்றை ஏற்படுத்தினார். குறைந்த பட்சம் அதற்கான ஒரு அடித்தளத்தைப் போட்டார். அதன் காரணமாகவே அவர் படுகொலைக்கு ஆளாகி இறக்க வேண்டியும் ஏற்பட்டது.

இலங்கையில் மிகக்குறுகிய காலமே நீடித்த இவ்வாறான இடதுசாரிகளின் கூட்டுக்கள் இதற்கு முன்பும் ஏற்பட்டதுண்டு. அவற்றிலொன்று 1953 ஹர்த்தால் கால கட்டத்தின் போது உருவான இடதுசாரிக் கூட்டாகும். அவ்வேளையில் லங்கா சம சமாஜக் கட்சியும், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும் ஒன்று சேர்ந்தன. வெவ்வேறு இடதுசாரிகளும் அதனைச்சுற்றி அணி திரண்டனர். அவ்வேலையைத் தொடங்கும் போது எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவைப் போலவே தமிழரசுக்கட்சியும் இடதுசாரி அணிக்கு மறைமுகமாக உதவி செய்தது.

அடுத்தது 1962இல் பிலிப் குணவர்தன, என்.எம்.பெரேரா, எஸ்.ஏ.விக்கிரமசிங்ஹ மூவரின் கீழ் இடதுசாரி சக்திகள் ஒன்று சேர்ந்ததாகும். அன்றும் இடதுசாரிகளைச்சுற்றி முழுத் தொழிற்சங்க சக்திகளும் ஒன்று சேர்ந்து 21 கோரிக்கைகளின் மீது போராட்ட இயக்கமொன்றை ஆரம்பித்தன. சிறிமாவோ பண்டாரநாயக்க இவ் இடதுசாரி சக்தியை சூட்சுமமாக நாசகாரம் செய்து ஒரு பகுதியினரைத் தமது அரசாங்கத்தினுள் இணைத்துக் கொண்டார்.
இதேபோல் இடதுசாரிகளின் சுயாதீனமான அணிசேர்க்கை இல்லாத காரணத்தால் பகிரங்கமாகவே இளைஞர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். தமிழ் மக்கள் தனி நாடொன்றை அமைக்க அழைப்பு விடுத்தனர். புத்திஜீவிகள் துணையற்றுப் போயினர். கலைஞர்கள் கனவு ஏதும் இல்லாது பரலோகம் சென்றனர். சந்தர்ப்பவாதம், பொய், மோசடி ஆகியன ஆட்சி செய்தன. நாடே மனச்சாட்சியற்ற, மதிப்பற்ற யார்யாரோவுக்கெல்லாம் கொல்லைப் புறமானது.

நாம் சிரமத்துடன் இந்நிலைமைக்கு முகங்கொடுத்தோம். இதேபோல் சமூகமே கெட்டுப்போய்க்கொண்டிருந்த வேளை விஜயகுமாரணதுங்க ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து விலகி ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி என்ற புதிய இடதுசாரிக்கட்சியொன்றை ஏற்படுத்தினார்.

விஜயகுமாரணதுங்கவின் கட்சியானது, பழைய முறையில் தொழிற் சங்கங்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்ட தொழிலாளர் கட்சியொன்றல்ல. மறுபுறம் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) போன்ற மாணவர் சந்ததியினர் மீது கட்டப்பட்ட கட்சியுமல்ல. ஆனாலும் அது அடித்தளமாக இருந்து பரந்து சென்றது தொழிலாளர் இடங்களிலாகும். நான் அவ்வேளையில் இது கூடாரம் மாதிரியான, சமூக ஜனநாயகத்தொழிலாளர் கட்சியொன்று எனக்கூறியிருந்தேன். விஜயகுமாரணதுங்க இருபதாம் நூற்றாண்டின் லசாலே ஒருவர் போன்றவர் என்றும் கூறியிருந்தேன்.

ஜேர்மனியில் 1848 அளவில் லசாலே ஒரு புத்திஜீவியாகவே வெளிப்பட்டார். விஜய ''புத்திஜீவி'', ''கல்விமான்'' அடித்தளத்தின் மீது தன் அரசியல் பயணத்தை ஆரம்பிக்காவிட்டாலும் கல்விமான்கள் சிலருடன் சேர்ந்தே அரசியல் வேலையில் இறங்கினர். விஜய இடதுசாரி முன்னணியொன்றை அமைப்பாரானால் நாமும் ஒன்றுசேரவே வேண்டுமென நான் வலியுறுத்திக் கூறினேன்.

விஜயகுமாரணதுங்க இடதுசாரிகளை ஒன்று சேர்க்க நடவடிக்கை எடுத்தது மட்டுமல்ல, அதனைச் சுற்றி ''டிசம்பர் 26 இயக்கம்'' எனும் வெகுஜன இயக்கமொன்றையும் கட்டியெழுப்பினார். அதில் நிறையத் தொழிற் சங்கங்கள் அடங்கியிருந்தன. விஜயவுக்கு புரட்சிரக் கண்ணோட்டமொன்று இருக்கவில்லை. ஆனாலும் முதலாளித்துவ வர்க்கத்துக்கும், இனவாதிகளுக்கும் எதிராக சமதர்மத்தை இலக்காகக் கொண்ட இடதுசாரி அரசாங்கமொன்றை அமைக்கும் எண்ணம் இருந்தது.

விஜய குமாரணதுங்கவுக்கு ஜே.ஆர். ஜயவர்தனவையும், இந்திய ஆட்சியாளர்களையும் சமாதானம் செய்து கொண்டு தேசிய இனப்பிரச்சினைக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் தீர்வொன்றைக் கொடுத்து யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரவும், அதன் பின்பு சுதந்திரமான தேர்தலொன்றை வைத்து, அதனூடாக வெற்றிபெற்று அரசாங்கமொன்றை அமைக்கவும் எண்ணியிருந்தார். மார்க்சியக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால் இது மூடத்தனமான ஒரு கருத்தாகும். ஆனாலும் அவ்வேளையில் அவரைச்சுற்றி அணி திரண்டிருந்த இடதுசாரிகளின் பரந்த அணியின் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால் மிகவும் நடைமுறை சார்ந்த ஒரு தயாரிப்பாகும். அதனால் உண்மையிலேயே பாரிய இடதுசாரி அணியொன்று ஒன்று திரண்டிருந்தது. துவண்டு போயிருந்த பழைய இடதுசாரிகள் புத்துணர்ச்சி பெற்று எழுந்து வந்தனர். சிங்களவர்கள் மட்டுமல்ல தமிழ், முஸ்லிம், பறங்கியர் என்று அனைத்து பிரிவினரும் ஒன்று சேர்ந்தனர்.

இவ்வேளையில், சமூகத்தில் ஒடுக்கப்பட்டு, நசுக்கப்படும் புரட்சிகர மக்களை அவதானிக்கும் அரசியல் அணிகளின் கூட்டினுள் இன்னும் இருவர் களத்தில் போட்டிக்கு வந்திருந்தனர். ஒருவர் றணசிங்ஹ பிரேமதாச, மற்றவர் தோழர் றோஹண விஜேவீர ஆனாலும் மூவரது முறைகளும் வித்தியாசமானவை. பிரேமதாச முதலாளித்துவ ஆட்சியின் பங்காளியாவார் ஆனாலும் அவருக்கு முதலாளித்துவ உயர் வர்க்கத்தினருடன் மோதியே முன்னுக்கு வர வேண்டியிருந்தது. அதற்காக ஒடுக்கப்படும் சாதியினரதும், ஒதுக்கப்பட்ட இனப்பிரிவுகளினதும் திட்டமிடப்பட்ட சக்தியொன்று அவருக்குத் தேவைப்பட்டது. அதனை அமைக்க பாதாளலும்பன் கோஷ்டிகளையே அவர் ஈடுபடுத்தினார்.

றோஹண விஜேவீர மார்க்சிய குருகுலத்தில் இருந்து வந்த ஒருவராவார். ஆனாலும் அவர் ஒடுக்கப்பட்ட கிராமிய விவசாய சிங்கள இளைஞர்களைக்கொண்ட விடுதலைப்போராட்ட இயக்கமொன்றை அமைக்கவே முயன்றார். அதற்காக தேசாபிமான (தேஷப்பிரேமி) இனவாதப்பிரிவுகளுடன் உடன்பாடொன்றுக்கும் அவர் சென்றார்.

இவ்வாறு, இம்மூவரும் புரட்சிகர அணிகளுக்காகப்பெரும் போட்டியொன்றில் களத்தில் ஈடுபட்டவர்களாக இருந்தனர். விஜயமென் மேலும் ஒடுக்கப்படும் அணிகளிடையே தனது காலைப் பதித்தார். அதற்காக சம சமாஜ, பழைய, புதிய கம்யூனிஸ்ட்டுக்களை ஒன்று சேர்க்கும் பணியில் தன்னை அர்ப்பணித்தார். அதைப்போலவே தேசாபிமான, இனவாதப் பிரிவுகளுடன் நேரடியாகவே மோதவும் தொடங்கினார்.

இறுதியாக விஜயகுமாரணதுங்க அவர்கள் பிரேமதாச, றோஹண இருவருக்கும் சவாலாகப் புரட்சிகர அணிகளின் தலைவராகத் தொடங்கினார். ஒடுக்கப்படும் வர்க்கத்தின் ஆதரவு கிடைக்குமளவுக்குத் தான் இவ்வாறானதொன்றை தன்னால் வெற்றிகரமாக நிறைவேற்ற முடியுமென அறிந்து கொண்டிருந்தார். அதனால் பெருந்தோட்டப் பகுதிகள் மீதும் அவர் மோப்பம் பிடித்தார்.

மறுபுறம் வடபகுதித்தமிழ் ஒடுக்கப்படும் அணிகளுடன் பெருந்தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார். அவரது வெற்றி அவரது முடிவை வரவழைத்தது. அவ்வாறு பார்க்கையில் எதிராளிகள் இருவரும் விஜயவை விலக்க ஒன்று சேர்ந்தனர் என்ற பேச்சில் அர்த்தம் உள்ளது.

விஜயகுமாரணதுங்க கட்டியெழுப்பிய அணி மார்க்சியத்தின் நோக்கில், சந்தர்ப்பவாதச் சேறு நிறைந்த ஒரு அணியாகும். அதேவேளை மறுபுறத்தில் ஆகக்குறைந்த பட்சம் ஒடுக்கப்பட்டவர்களின் சுயாதீனமான எழுச்சியாகவும் அவ்வணி திகழ்ந்தது. நீண்ட காலத்துக்கு பின்பு ஏற்பட்ட இவ் எழுச்சிக்குச் சவாலாயிருந்த அம் மனிதனைக் கொன்றவுடன் அவ் எழுச்சி குருட்டுக்கொக்கு போல ஆனது. பலருக்கு அவர்களது அனைத்து எதிர்பார்ப்புகளும் சிதறுண்டு போயின. அவ்வாறு கட்டியெழுப்பப்பட்ட அணியை மேலும் முன் கொண்டு செல்லவே நாம் அனைவரும் முயற்சி செய்தோம். ஆனாலும் சந்திரிகா அதனை இழுத்துச்சென்று முதலாளித்துவ முகாமுக்குள் ஒன்று சேர்ப்பதையே செய்தார். அப்பயணச் சக்கரத்தில் சென்று கொண்டிருந்த வேறு பலரையும் அவர் அம்முகாமுக்குள் கொண்டு சென்றார். அதன்படி பார்த்தால், விஜய கட்டியெழுப்பிய அணியை முடிவுக்குக் கொண்டு வந்தது பிரேமதாசவோ, விஜேவீரவோ அல்ல. உண்மையில் விஜயவிற்கு பின்பு மக்கள் கட்சியின் தலைமையை ஏற்றவர்களே அதற்குப் பொறுப்பேற்க வேண்டும்.

இப்போது பத்து வருடங்களின் பின்பு இவர்கள், விஜயவின் விருப்பம் இம் முதலாளித்துவ அரசாங்கத்தினூடாக முன் செல்வதே எனக்கூறும் போது, திரும்பவும் என்ன கதைக்க இருக்கிறது? வட பகுதியின் மக்கள் மீதான படுகொலை யுத்தம் விஜயவின் விருப்பமா? பல்தேசிய சொறி முட்டையர்களுக்கு நாட்டை விற்றுத் தின்பதுதான் விஜயவின் விருப்பமா?

எனக்கு விஜயகுமாரணதுங்கவைக் கடைசியாகச் சந்தித்த நாள் இன்று போல் ஞாபகத்திலுள்ளது. ஐக்கிய சோஷலிச முன்னணியினுள் நாம் வருவது பற்றி முரண்பாடுகள் தோன்றியிருந்தது. விஜய, மருதானையிலுள்ள ஸ்ரீ லங்கா மக்கள் கட்சிக் காரியாலயத்துக்கு அது பற்றிப்பேச எம்மை அழைத்திருந்தார். நான் போனேன். விஜய தனது மகன் விமுக்தியுடன் வந்தார். ''மகன் உங்களைப்போல உள்ளார் ஆனால் தலைமயிர் சுருட்டையாக இல்லை'' என்று சொல்லி நான் சிரித்தேன். ''பெரிதாக வளரும்போது சரியாகிவிடும்'' அவர் கூறினார். அதனுடனேயே பிரச்சினைக்கு இறங்கினார்.

''தோழர் (விக்ரம)பாகு, நீங்கள் சுய நிர்ணய உரிமையைக் கொள்கையாக வைத்திருங்கள். அதனைக் கைவிடத் தேவையில்லை. ஆனாலும் ஐக்கிய சோஷலிச முன்னணியின் கொள்கை சுயாட்சி மட்டுமே; முன்னணி என்ற முறையில் அதற்கு உடன்படுங்கள். உங்களது கருத்தை வேறாக வைத்திருங்கள்'' அப்படியானால் பிரச்சினை இல்லை என நான் சொன்னேன். நாம் அவ்வாறு உடன்பட்டாலும் முன்னணியொன்றாகக் கைச்சாத்திட முன்பே விஜய இறுதிப் பயணம் சென்றார். இதை நான் இப்படித்தான் சொல்வேன்: எம்மை முன்னணியினுள் எடுத்த காரணத்தினாலேயே விஜயவைக் கொலை செய்தனர். நாம் உட்பட அனைத்து ஒடுக்கப்பட்ட அணிகளையும் உள்ளடக்கப்பட்ட இடதுசாரி முன்னணியொன்று பற்றி அவர் எடுத்த முயற்சிகள் வெற்றியடைந்தது தான் அவரது கொலைக்குக் காரணமானது.

விஜயகுமாரணதுங்கவின் பூதவுடல் முன்னிலையில் உறுதிமொழி அளித்த பலருக்கு இப்போது அவ்வுறுதி மொழிகள் எதுவுமே ஞாபகத்தில் இல்லை.

அன்று இறுதிக்கிரியைகளில் எனது பேச்சின் போது நான் கூறினேன். ''ஏகாதிபத்தியத்துக்கும், இனவாதத்துக்கும் எதிராக நாம் இங்கு ஆரம்பித்த பயணத்தை, (துப்பாக்கிக்) குண்டு மாரி பொழிந்தாலும், குண்டு திரும்பத் திரும்ப தொடர்ந்து ஒன்றன் பின் ஒன்றாக வீசப்பட்டாலும் தொடர்ந்தும் மேற்கொண்டு நாம் செல்வோம்'' என்று. அவ் உறுதி மொழியை நாமென்றால் இதுவரை மீறவில்லை. சொல்ல இருப்பது அவ்வளவுமே.

> "தமக்கு ஆபத்து உள்ளதெனத் தெரிந்து கொண்டும் வீதிக்கு அருகேயுள்ள மரமொன்றின் கீழ் மக்களைச் சந்திக்க விஜய குமாரணதுங்க முனைந்தது ,சரியான தேசியவாதி ஒருவராகவே அவரைக் காட்டியது. அதுவே அவரது முடிவைத் துரிதப்படுத்தியது."

**— கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன**

லக்பிம 1998.03.01 இதழில் ''நினவ்வ'' (நினைவு) என்ற பத்தியில், நவ சம சமாஜக் கட்சிப்பொதுச்செயலாளர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன மறைந்த முன்னாள் ஸ்ரீலங்கா மக்கள் கட்சிப் பொதுச்செயலாளர் விஜய குமாரணதுங்க பற்றி எழுதிய பத்தியே இது.

**தமிழில் :சி.செ.ராஜா**

www.tamilarangam.net



# அட்டன் போக்குவரத்துச் சேவை: பேரினவாத ஆக்கிரமிப்பு!

அட்டன் மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சேவை 90 சதவீத மலையக தமிழ் மக்களின் வாழ்விடப் பிரதேசத்தில் அமைந்துள்ள போதும், அதன் சேவையில் தமிழ் மக்கள் ஆடு, மாடுகள் போல நடத்தப்படுவதும், புறக்கணிக்கப் படுவதும் இனவெறியர்களால் துன்புறுத்தப்படுவதும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

அட்டன் மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சேவையில் 85-90 பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. இங்கு மொத்தம் 425 தொழிலாளர்கள் கடமை புரிகின்றனர். இவர்களில் 73 சாரதிகள், 73 நடத்துனர்கள் இருக்கின்றனர். இவர்களில் சாரதிகளில் 7 தமிழரும், ஒரு முஸ்லிமும் இருப்பதோடு நடத்துனரில் 6 தமிழரும், இரண்டு முஸ்லிம்களும் இருக்கின்றனர். தொழிநுட்பவியலாளர்கள் 150 பேரில் ஒருவர் மட்டுமே தமிழர். அலுவலர்களில் சிங்களவர்கள் 2, தமிழர் 3, முஸ்லிம் 5, பரிசோதகர் 7 பேர் காணப்படுகின்றனர்.

மொத்த சாரதிகள் நடத்துனரில் கிட்டத்தட்ட 14% தமிழரே காணப்படுகின்றனர். தொழிநுட்பவியலாளர் 0.6% மட்டுமே தமிழராவர்.

பேருந்து பயண மார்க்கங்களில் தமிழர் அதிகம் வாழும் பகுதிகளுக்கான பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டும், ஒழுங்கின்றியும் நடத்தப்படும் அதேவேளை, சிங்களக் குடியேற்றங்களுக்கு அளவுக்கதிகமாக சேவைகள் நடத்தப்படுகின்றன. பஸ் சேவை நடத்தப்படும் வழிகள் பின்வருமாறு:

வெலிஓயா 1 பேருந்து, புதுகாடுவ 1பேருந்து, பலாங்கொடை 1 பேருந்து, கல்வலதெனிய குடியேற்றம் 1 பேருந்து, மரே 1 பேருந்து, கொத்தன குடியேற்றம் 1 பேருந்து, நோட்டன் 1 பேருந்து, காட்மோர் 1 பேருந்து,கரவனெல்ல 1 பேருந்து, நல்லதண்ணி 1 பேருந்து, கித்துல்கலை 1 பேருந்து, கம்பளை 1 பேருந்து, ராவனங்கொடை 2 பேருந்து, கலபாட்டி 2 பேருந்து, ஏதுவ 1 பேருந்து, விஜயபாடுகந்த 1 பேருந்து, வட்டவளை 1 பேருந்து, நாவலப்பிட்டிய 1 பேருந்து, லக்சபான 10 பேருந்து, போபத்தலாவ 1 பேருந்து, அம்பகமுவ 1 பேருந்து, கினிகத்தேன - போத்தல 1 கிலோமீற்றர் - 1 பேருந்து.

இவற்றில் பெரும்பாலானவை மரே, காட்மோர் தவிர்ந்த பகுதிகள் பெரும்பான்மையின குடியேற்றங்கள் அமைந்துள்ள இடங்களாகவும், பெரும்பான்மையின ஊழியர் அட்டனுக்கு வருகின்ற இடங்களாகவும் இருக்கின்றன. இவற்றால் தமிழ் மக்கள் அதிக நன்மை பெறப்போவதில்லை.

தமிழ்ப் பிரதேசங்களும் தனி தோட்டப் பகுதிகளுமான எல்ஜின், லொய்லோன் போரைஸ், மேபீல்ட், எதன்றுட், டயகம ஈஸ்ட், நோர்வூட், மட்டக்களப்பு, வவுனியா, மாத்தளை, கொட்டகலை, வெலிமடைப் பகுதிகள் பெருமளவு தமிழ் மக்கள் பயன் படுத்தக்கூடியனவாக இருக்கின்றன. இவற்றுக்கு முழுமையாகவே பஸ் சேவைகள் நடத்தப்படுவதில்லை. மேலும் பொகவந்தலாவையில் இருந்து கொழும்புக்கான அதிகாலை பஸ் சேவையும் முழுமையாக நடத்தப்படுவதில்லை.

லக்சபான குடியேற்றப்பகுதிகளுக்கு பத்துச் சேவையும், அம்பகமுவுக்கு 1 சேவையும், கினிகத்தேன பொத்தலைக்கு 1 சேவையும், பொகவந்தலாவவுக்கு 4 சேவைகளும், மஸ்கெலியாவுக்கு இரண்டு சேவைகளும், அக்ரஓயா, டெம்பல்ஸ்டோர் என்பனவற்றுக்கு தலா ஒரு சேவையும் கண்டிக்கு 3, நுவரெலியாவுக்கு 2 சேவையும் நடத்தப்படுகின்றன. சாமிமலைக்கு 2 சேவை, காஞ்சிமலைக்கு 2, சலங்கத்தைக்கு 1, அக்கரபத்தனைக்கு 4, தலவாக்கொலைக்கு ஒரு சேவை வீதம் நடத்தப்படுகின்றன.

அட்டன் மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்து சேவையினரின் இனத்துவேசத்துக்கு பொலிசாரும் துணை போகின்ற சம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

கடந்த நவம்பர் மாதம் வட்டவளை தமிழ், வித்தியாலய மாணவி ஒருவர் கண்டிக்கான பேருந்து ஒன்றில் மோதுண்டமையால் ஆத்திரமுற்ற மாணவர்கள் பேருந்தைத் தாக்கி சேதப்படுத்திய சம்பவத்தின்போது, பொலிசார் அம்மாணவர்களிடம் நஷ்டஈடு கோரியதுடன், மாணவர்களை பொலி ல் ஒப்படைக்கவும் கோரினர். ஆ ால நாட்டின் எப்பகுதியிலும் இவ்வாறான பொது மக்களின் தாக்குதலுக்கு வழக்கு தொடரப்படுவதோ, நஷ்டஈடு கோரப்படுவதோ இல்லை. மேலும் இதுவரை வட்டவளை தமிழ் வித்தியாலய மாணவர்கள் அட்டன் மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சேவை பேருந்துகளில் ஏற்றப்படுவதில்லை. அவர்கள் 10 கி.மீ. - 15 கி.மீ. தூரம் தினசரி நடந்தே பாடசாலை செல்வதைக்காணக் கூடியதாக உள்ளது. பருவசீட்டுப்பெற்ற பாடசாலை மாணவர்களை, சாரதிகளும் நடத்துனரும் ஏற்ற மறுப்பதும், ஆசனத்தில் அமரவிடாமல் மறுப்பதும், உரிய நிறுத்தங்களில் நிறுத்தாமல் விடுவதும் , தூசனத்தில் திட்டுவதும், அடிப்பதும் கூட தினசரி நிகழ்வுகளாகி இருக்கின்றன.

மேலும் குண்டர்களும் கேடிகளும் நிரம்பிவழியும் அட்டன் மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சேவையில் நடைபெறும் காடைத்தனங்களையும், இனவெறித்தனமான நடவடிக்கைகளையும் தட்டிக் கேட்பதற்கு அரசியல்வாதிகள், தொண்டர் நிறுவனங்கள் உட்பட அனைவரும் பயப்படுகின்றனர். பத்திரிகையில் எழுதுவதற்குக் கூட அஞ்சுகின்றனர்.

அட்டன் பொது பஸ் நிலையத்தில் நாளாந்தம் ஆசனங்களை பதிவு செய்தல் என்ற பெயரில் தரகர்கள் கொழும்புக்கு 100/=, 150/= வரை கட்டணங்களை

—▷ 19

# தலித்தியக் குறிப்புகள்

## முரண்பாடுகளின் படிநிலையொழுங்கும் தலித்தியமும்



தலித்தியக் கருத்தாக்கத்தின் சமீபத்திய செல்வாக்கானது பல்வேறு தளங்களிலும் விவாதங்களையும், பலத்த சர்ச்சைகளையும், புதிய தேடல்களையும் இயங்கியல் தத்துவத்தின் மார்க்கத்தில் புதிய சிந்தனையையும் உருவாக்கிவிட்டுள்ளது.

இதே வேளை இலங்கையில் கூட தலித்தியம் குறித்த புரிதலைப் பொறுத்தளவில் அது எதிர்ப்புரட்சிகர விடயமாகவும், மார்க்சிய திரிபுவாதமாகவும், ஏன் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு இடையூறானதாகவும் கூட பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது. இவ்வகையான பிரச்சாரங்களை ஒரு திட்டமிட்ட சதியென முத்திரை குத்திவிட முடியாது. ஆனால் இயங்குவிதியின் இயக்கப் போக்கினை விளங்கிக் கொள்ளும் எவருக்கும் தலித்தியத்தின் தேவையை அடையாளம் காண்பதில் சிரமமிருக்காது என்றே நான் நம்புகிறேன்.

இன்றைய இலங்கையின் சமகால சூழலை கருத்திற் கொள்கையில் சமூகத்தில் நிலவிவரும் முரண்பாடுகள், பிரச்சினைகள் என்பன கொண்டிருக்கும் படிநிலை வரிசையமைப்பையும் கருத்திற்கெடுத்தாக வேண்டியிருக்கிறது. இன்றைய வர்க்க, இன, மத, சாதிய, பால், பிரதேசவாத... பிரச்சினைகள் எல்லாமே ஒன்றையொன்று பின் தள்ளிக் கொண்டு தன்னகத்தே ஒரு படிநிலை வரிசையொன்றை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. எது அடிப்படை பிரச்சினை? எது முதன்மைப் பிரச்சினை? எது அடுத்தடுத்துள்ள பிரச்சினை அல்லது ஒன்றின் மீது இன்னொன்று உடாடியிருக்கின்ற பிரச்சினை(கள்) என துல்லியமாக அடையாளம் காண்பதன் தேவையுள்ளது. எதிரியையும், நண்பனையும் இதனடிப்படையிலேயே வரையறுத்துக் கொள்ள முடிகிறது.

இன, வர்க்க, சாதிய, பிரதேசவாத, பால்வாத, மதவாத, முரண்பாடுகள் என்பன தமக்குள் ஒரு படிநிலையொழுங்கை ஏற்படுத்திக் கொண்டுள்ளன.

இலங்கையின் ஒட்டுமொத்த சூழலைக் கருத்திற் கொள்கையில் இலங்கையில் ஆதிக்கம் செலுத்தி வரும் தரப்பாகவும், ஆதிக்க சித்தாந்தக் கருத்தாக்கங்களை கொண்டியங்கும் அதிகாரத் தரப்பாகவும் நாம் சிங்கள-பௌத்த-கொய்கம-ஆணாதிக்க-சுரண்டும் வர்க்கத்தை அடையாளப்படுத்த முடிகிறது. இந்த ஆதிக்கக் கூட்டு ஏனையவற்றைப் "பிற"வாக நடத்துவதாகவும் அதிகாரத்தை விட்டு தனிமைப்படுத்தும் சக்திகளின் கூட்டாகவும் நடைமுறையில் இருக்கின்றது.

இங்கு ஒட்டு மொத்த சூழலில் சிங்கள பௌத்த ஆதிக்கக் கூட்டிடம் அதிகாரம் தங்கியிருப்பதாலும் அந்த அதிகாரத்தைக் கொண்டே ஏனைய தரப்பினரை ஒடுக்கி வருவதாலும் எதிரி என்பது சிங்கள அரசாக முன்னின்று விடுகிறது.

சிங்கள மையப்பட்ட மேற்படி ஆதிக்க கூட்டில் சாதியமானது கொய்கமவில் தங்கியில்லை என்ற சிங்களத் தரப்பு வாதத்தையும் நடைமுறையில் காணமுடிகிற போதும், "கொய்கம"வின் சாதிய சித்தாந்த ஆதிக்கம் சகல அதிகார மட்டங்களிலும் நிலவுவதை ஏற்றுக் கொள்கின்றனர். பிரதேசவாதத்தைப் பொறுத்தளவில் காலனித்துவத்தின் போதும், கொழும்பை மையப்படுத்திய அதிகாரத்துவத்தின் தோற்றத்திற்கு முன்பும் கண்டிய பிரதேசவாதமே நிலவி வந்தது. கண்டியானது இறுதியாக காலனித்துவத்திற்குப் பலியான பிரதேசமாதலால், இறுதி வரை சிங்களத்துவத்தை பாதுகாத்த பகுதியாக அதனையே குருதியமையினால் இந்த கண்டிய பிரதேசவாதம் நிலையூன்ற தடையிருக்கவில்லை. அதன் பின் வந்த கொழும்பை மையப்படுத்திய அதிகாரத்துவமானது வளர, வளர கரையோரச் சிங்களவர்களின் பங்குபற்றல்

**ஆதிக்க கூட்டை இப்படி நோக்கலாம்**

**(இவை ஒரு படிநிலையை தன்னகத்தே கொண்டுள்ளது.)**

| ஆதிக்க சித்தாந்தம் | ஆதிக்க கருத்தாக்கம் | ஆதிக்கத்துக்குள்ளாகும் /பாதிக்கப்படும் சக்திகள் |
|---|---|---|
| இனவாதம் | சிங்களம் ⇩ | சிங்களமல்லாதர்கள் (தமிழ், முஸ்லிம், பறங்கியர்) |
| மதவாதம் | பௌத்தம் ⇩ | பௌத்தமல்லாதார் (இந்து, இஸ்லாம், கிருஸ்தவ) |
| சாதியம் | கொய்கம ⇩ | ரதல, கராவ, துராவ, சலாகம... |
| பால்வாதம் | ஆணாதிக்கம் ⇩ | பெண்களுக்கெதிராக |
| வர்க்கவாதம் | முதலாளித்துவம் | சுரண்டப்படும் வர்க்கம் |

தோன்றி, வளர்ந்து, விரவி அதுவே இன்று அதிகாரத்துவத்திலிருக்கின்ற சக்தியாக மாறியிருக்கின்றது. எனினும் இன்றைய நிலையில் அரசியலதிகாரத்துக்கூடாக தோன்றிய வசதி படைத்த வர்க்கம் கொழும்பை நோக்கித் தங்களின் குடிபெயர்வை உருவாக்கிக் கொண்டமையினால் கொழும்பானது ஒரு கதம்பமாகவே உள்ளது. எனவே "கொழும்பு பிரதேசவாதம்" என்ற ஒன்று பெரியளவில் மேலெழவில்லையென்றே கூறலாம்.

ஆனால் இந்த சிங்கள மையப்பட்ட ஆதிக்கக் கூட்டானது சிங்களமல்லாத "பிற"வுக்கு எதிரானதாகவும், அதே வேளை சிங்கள சமூகத்தினுள்ளேயே உள்முரண்பாடுகளையும் ஏற்படுத்திக் கொண்டுள்ளது. இந்த ஆதிக்க சித்தாந்தக் கூட்டு பலமாக இருப்பதற்கான காரணம் அவற்றிடமுள்ள அதிகாரமே.

தமிழ் சமூகத்திற்குள் நிலவுகின்ற பிரச்சினைகள் தன்னகத்தே ஏற்படுத்திக் கொண்டுள்ள படிநிலையொழுங்கைக் கவனித்தால் அது, தமிழ்-யாழ்-சைவ-வேளாள-ஆணாதிக்க-சுரண்டும் வர்க்க கூட்டையுடையதாக இருக்கிறது. முஸ்லிம்களுக்கும், சிங்களவர்களுக்கும் எதிராக சில வேளைகளில் போக வைப்பதாக இனவாதம் தலைதூக்கப் பார்ப்பது இதன் காரணமாகவே. அதே போல் யாழ்ப்பாணத்தை மையப்படுத்திய பிரதேசவாதமானது அதுவல்லாத தமிழீழப் பிரதேசங்களை அந்நியமாக நோக்க வைக்கிறது. தமிழ்-யாழைக் கொண்டிருந்தாலும் வேளாள சாதியாக இல்லாது விட்டால் அது இன்னும் ஆதிக்கத் தூய்மைக்கு இடையூறானதாகவே ஆதிக்க சித்தாந்தம் கொள்கிறது. தமிழ்-யாழ்-வேளாள கூட்டாக இருந்தும் சைவமாக (உதாரணத்துக்கு தமிழ்-யாழ்-வேளாளகத்தோலிக்க மதமாக) இல்லாது விட்டால் அது மேலும் இடையூறானதாகவே கொள்ளப்படுகிறது. அதே போல் தான், கூடவே ஆணாதிக்கமும், ஆதிக்க வர்க்கமும் சேர்ந்து ஏற்படுத்தியுள்ள கூட்டுமாகும்.

இதே போல் மலையக மக்கள் மத்தியிலும் உள்ள *தமிழ்-மொட்டை வெள்ளாள-கொழும்பு-ஆணாதிக்க சுரண்டும் வர்க்கம்* ஏற்படுத்திக் கொண்டுள்ள கூட்டையும் நோக்க வேண்டியுள்ளது.

முஸ்லிம்xதமிழ் தேச முறுகல் நடைமுறையில் இருந்த போதும் சிங்கள அதிகாரத்துவத்திற்கெதிரான தமிழ்-முஸ்லிம் மக்களின் எதிரியாகவே சிங்கள அரசு வந்துவிடுகிறது. சிங்கள ஆதிக்க கூட்டை எதிர்ப்பதற்காக ஒன்றிணைகிறார்கள். அல்லது தனித்தனியாக நின்று எதிர்க்கத் தலைப்படுகிறார்கள். அல்லது தனித்துப் போராடுகிறாகள். இங்கு சிங்களமல்லாத தரப்பு அதிகாரமுடைய சிங்களக் ஆதிக்கக் கூட்டுத் தரப்பினால் நேரடியாக பழிவாங்கப்பட்டுக் கொண்டிருப்பதால் தற்காலக் கூட்டை இவர்கள் ஏற்படுத்திக் கொள்கிறார்கள். அல்லது தமக்கிடையேயான சண்டையை தற்காலிகமாக ஒத்திவைக்கிறார்கள். அது போலவே தமிழ்ச் சமூகத்தினுள் நிலவுகின்ற ஏனைய எல்லா அக முரண்பாடுகளும் தற்காலிகமான பின்நிலைக்குத் தள்ளப்படுகின்றன. இதன் அர்த்தம் தமிழ்ச் சமூகத்தில் நிலவுகின்ற பிரச்சினைகள் துருவமயப்பட்ட, ஒன்றிலொன்று தொடர்புறாத பிரச்சினை என்பதல்ல. இவை ஒன்றிலொன்று தங்கியிருக்கின்ற முரண்பாடுகளேதான். சிங்கள, தமிழ்... ஆகிய இரு சமூகங்களுக்கும் உட்பிரச்சினைகள் நிலவினாலும் கூட தமிழ் சமூகத்தைப் பொறுத்தளவில் அகமுரண்பாடோடே இன (புற) முரண்பாட்டுக்கும் முகம் கொடுக்க வேண்டியிருப்பதுடன் அதுவே முதன்மைப் பிரச்சினையாகவும் இருக்கின்றது.

எனவே தான் இன்றைய அடக்குமுறை தமிழ் முஸ்லிம் மக்களின் அக முரண்பாடுகளை பின் தள்ளிவிட்டு பிரதான எதிரிக்கு எதிராக கூட்டுச் சேர வைத்துள்ளது. இதன் மறுபக்கம் ஏனைய உள் முரண்பாடுகளை விட்டுக்கொடுத்து விட்டதாகவோ, அப்படியே சமரசம் செய்து கொண்டு விட்டதாகவோ அர்த்தப்படமாட்டாது. மாறாக ஒடுக்கப்படும் சக்திகள் இம்முரண்பாடுகளை பிரதான முரண்பாடாக்கிவிடாமல் பிரதான முரண்பாட்டை வலுவிழக்கச் செய்யாது நீதிக்கான போராட்டத்தை நடத்துவதற்கு ஒன்றிணைகிறார்கள்.

நம்மில் பலரில் பிரதான-நேரடியான (primary conflict) பிரச்சினை எது? அடுத்தபடியான (secondary conflict) பிரச்சினை எதுவென்பதை வரையறுப்பதில் இன்னும் காணுகின்ற குழப்பம் இங்கு கவனிக்கத்தக்கது. இதன்விளைவாகவே புலிக்கெதிராக அரசுடன் கூட்டுச்சேருவது அதன் போக்கில் அடக்குமுறைக்கும், இன அழிப்புக்கும் துணை போவது என்பனவும் நிகழ்கின்றன. புலிக்கும் அரசுக்குமிடையில் உள்ள பிரச்சினையும் புலிக்கும் மக்களுக்குமிடையில் உள்ள பிரச்சினையும் வெவ்வேறு பண்பானவை என்பதை இங்கு நிர்ணயிக்கத் தவறுபவர்கள் வரலாற்றின் எதிரியாகவே ஆகிவிடுகின்றனர்.

ஆக மொத்தத்தில் ஒவ்வொரு குறிப்பான சூழலிலும் அக முரண்பாடுகள் எவை புற முரண்பாடுகள் எவை இவற்றிலும் நேரடி அல்லது முதன்மை முரண்பாடுகள் என்ன? அடுத்தடுத்த முரண்பாடுகள் என்ன? அவை கொண்டிருக்கின்ற படிநிலைக் கட்டமைவு என்ன என்பதில் திட்டவட்டமான பார்வை அமைந்தால் மாத்திரமே எதிரி யார்? நண்பர் யார் என்பதை வரையறுப்பதில் குழப்பங்களை தவிர்க்கும் என்று கூறலாம்.

இன்றைய தலித்தியத்தின் பாத்திரமும், அதன் முன்னெடுப்பும் இதன் அடிப்படையிலேயே அமைய முடியும் என்பதைக் குறிக்கவே இந்த குறிப்பு இந்த சர்ச்சைக்குரிய இந்த நேரத்தில் எழுதப்படுகின்றது என்பதை வாசகர்கள் கருத்திற் கொள்ளுங்கள்.

புரட்சிகர சமூக மாற்றத்துக்குரிய முயற்சிகளை மேற்கொண்ட பல்வேறு புரட்சிகர இயக்கங்கள் ஒரு கட்டத்துக்கு மேல் நகரமுடியாததற்கான காரணம் அததற்குரிய தனித்துவமான பண்புகளை அடையாளம் கண்டு புரட்சிகர இலக்கை நோக்கி மையப்படுத்தி அதற்கு தலைமை கொடுப்பதை விட்டுவிட்டு அத்தனை முரண்பாடுகளையும் வர்க்க விடுதலையுடன் தீர்ந்துவிடும் என்ற ஒற்றையெதிர்பார்ப்புடன் வேலைத்திட்டத்தை அமைத்து வந்ததே.

இதில் கூறப்படும் கருத்துக்கள் முடிந்த முடிவானதல்ல. ஆரோக்கியமான பரிசீலனைக்கும், விவாதத்துக்கும் திறந்துவிடப்பட்டவையே இவை.எமது தேடல் விமர்சனம், மறுபரிசீலனை என்பவற்றுக்கூடாக மேலும் இதனை செழுமைப்படுத்த முடியும்.

-அருந்ததியன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





'சுதந்திரப்' பொன் விழாவினைக் கொண்டாடுகிறது இலங்கை. 'சுதந்திரம்' பெற்ற 50 ஆண்டுகளில் இலங்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் ஒரு சுயாதீனமான வர்க்க, இன, பால் பேதங்களற்ற அரசைக் கட்டமைப்பதில் வெற்றியடைந்திருக்கிறதா என்ற கேள்விக்கு 'இல்லை' என்பது மிக வெளிப்படையான பதிலாக இருப்பினும் அதற்கான காரணங்கள் ஆழமாக ஆராயப்பட வேண்டியவை.

இலங்கையில் இலவசக் கல்வி நடைமுறையிலிருப்பினும் அது எல்லோரையும் சென்றடைந்ததா? அவ்வாறு அடைவதில் அது எதிர்நோக்கிய தடைகள் எவை? மலையகக் கல்வி பின்னோக்கியிருப்பதற்கான காரணங்கள் எவை என்பவையெல்லாம் ஆராயப்பட வேண்டியவை.

இங்கே சோ. சந்திரசேகரம் அவர்கள் 50 ஆண்டுகளில் கல்வி வளர்ச்சியில் ஏற்பட்ட பிரச்சினைகள் பற்றிய தனது அபிப்பிராயங்களை முன்வைக்கிறார்.

சோ. சந்திரசேகரம் அவர்கள் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கல்வியியல் துறையில் சிறப்புப் பட்டம் பெற்றவர். கொழும்பு பல்லைக்கழகத்தில் சமூக விஞ்ஞானக் கல்வித்துறையில் தலைவராக இருக்கிறார். கடந்த கால் நூற்றாண்டு காலமாக அங்கே பணிபுரிந்து வருபவர். கல்வியியல் பற்றிய பல நூல்களையும், ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியவர்.

# ஐம்பதாண்டு காலக் கல்வி வளர்ச்சி: அதன் மறுபக்கம் !

சோ.சந்திரசேகரம்

இலங்கையின் ஐம்பதாண்டு காலப் பொருளாதார, சமூக, கல்வி பண்பாட்டு வளர்ச்சி பற்றிக் கட்டுரைகள் எழுதும் ஆய்வாளர்கள் பொதுவாக இவ்வளர்ச்சிகளின் ஒரு பக்கத்தை மட்டுமே எடுத்துக் காட்டுகின்றனர். இலங்கையின் கல்வி வளர்ச்சி பற்றி எழுத முற்படுவோர் (நான் உட்பட) அவ்வளர்ச்சியின் சிறப்பான அம்சங்களுக்கே முக்கியத்துவம் கொடுத்து எழுதுகின்றனர். இதற்குக் காரணம் ஆசிய நிலைமைகளுடன் ஒப்பிடும் போது ஒரு வளர்முக நாடென்ற முறையில், இலங்கை கல்வித் துறையில் 1960களிலேயே சாதனை நிகழ்த்திய மையாகும். 1947 -1996 காலப் பகுதிக்குரிய கல்வி முன்னேற்றம் பற்றிய புள்ளி விபரங்கள்- எழுத்தறிவு, மாணவர்களின் பாடசாலைச் சேர்வு வீதம், பெண்களுக்கான கல்வி வாய்ப்புகள், ஆசிரியர் - மாணவர் விகிதம்; பின்தங்கிய பிரதேசங்களில் பாடசாலைகளின் பரம்பல் தொடர்பானவை - முக்கிய முன்னேற்றங்களைக் காட்டுவது உண்மையே! 1960களில் இலங்கையின் பாடசாலைக் கல்வி வளர்ச்சி, ஆசியப் பிராந்தியத்தில் இரண்டாவது இடத்தைப் பெற்றுக் கொடுத்தது. (1980களில் கிழக்காசியாவின் புதிய கைத்தொழில் நாடுகள் கல்வி வளர்ச்சியில் இலங்கையை முந்தி விட்டன என்பது வேறு விடயம்) இலங்கையின் கல்வித்துறை அடைந்த விருத்தியை மீண்டும் பட்டியலிட்டுக் காட்டாது, அவ் விருத்தியின் மறுபக்கத்தை இவ்விடத்து நோக்குவோம்.

கடந்த 50 ஆண்டு காலக் கல்வி வளர்ச்சியின் ஒரு முக்கிய குறைபாடான அம்சம், இந்நாட்டின் கல்வி முறைக்கு அடிப்படையான பொருத்தமான தத்துவார்த்த நோக்கு ஒன்று வழங்கப்படாமையாகும். பல இனங்களையும், மொழிகளையும் கொண்ட ஒரு நாட்டில் கல்வி முறை கொண்டிருக்க வேண்டிய அடிப்படை இலக்குகள், நோக்குகள் - இவையனைத்தையும் உள்ளடக்கிய ஒரு கல்வித் தத்துவம் உருவாக்கப்படாத நிலையில் இந் நாட்டின் கல்விமுறை 42 இலட்சம் மாணவர்களை எங்கே கொண்டு செல்கின்றது என்பதை யாரும் வரையறுக்க முற்படவில்லை. எடுத்துக் காட்டாக, ஒரு பல இன சமூகத்தில் வாழ்வதற்குத் தேவையான தகைமைகள், உளப்பாங்குகள்; ஒரு கிராமிய பொருளாதார முறையுடன் இணைந்து அனுசரித்து வாழத் தேவையான தகைமைகள், உளப்பாங்குகள்; ஒரு நவீனமயப்படுத்தப்பட்ட கைத்தொழில் பொருளாதார முறை அல்லது 21ம் நூற்றாண்டின் தகவல்/ அறிவு மைய சமூகத்தில் வாழ்வதற்கான தகைமைகள், திறன்கள் என்ற இவற்றில் எதனையாவது தொலை நோக்காகவும் தத்துவ வழிகாட்டலாகவும் கொண்டு கல்வி முறை செம்மைப்படுத்தப்படவில்லை. இவற்றையெல்லாம் விடுத்து, க.பொ.த. சாதாரணதரம், உயர் தரம் ஆகிய பரீட்சைகளில் விஞ்ஞான பீடங்களில் அனுமதி என்ற முறையில் 'பரீட்சை ஊக்கத்துடன்' மாணவர்களும், பெற்றோர்களும், ஏனைய கல்வி வளங்களும் செயற்பட்டு வருவது ஒரு பரந்த தத்துவ நோக்கு எமது கல்வி முறைக்கு இல்லாமையைப் பறை சாற்றுகின்றது.

பாடசாலைகளில் காலங்காலமாக வழங்கப்பட்டு வந்த கல்வியைக் கேள்விக்கிடமாக்காது, அதன் அடிப்படைத் தத்துவத்தை நாட்டின் தேவைகளுக்கேற்ப செம்மைப் படுத்தாது, சமூக, நீதி, சமமான கல்வி வாய்ப்பு என்ற பெயரில் வகைதொகையின்றி நாடு பூராவும் விரிவு செய்யவே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கல்விக்கான வள ஒதுக்கீடும் இத்தகைய நோக்கிலேயே நடைபெற்றது.

கல்வியின் நோக்கு, கல்விப்பொருள், பாட ஏற்பாடு, கற்பித்தல் முறை என்னும் அடிப்படை விடயங்களில் கவனம் செலுத்தாது, 'ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த கல்வியைப்' பெறுவோர் தொகை அதிகரிக்கப் பட்டது. ஆனால் கல்விமுறை தொடர்ந்து 'கருத்தியல் அறிவை'ப் (Abstract Knowledge) பெறுவதையே வலியுறுத்தியது. மாணவர்களின் ஆற்றல்களில் காணப்படும் பல்வகைத்தன்மை கருத்திற்கொள்ளப்படாது முறைப்படுத்தப்பட்ட, தரப்படுத்தப்பட்ட ஒரே வகையான கல்வியை வழங்கி சகல மாணவர்களும் ஒருமைப் படுத்தப்பட்ட கலாசார, அறிவுச்சிந்தனை வார்ப்புக்குள் மட்டுப் படுத்தப்பட்டனர். இத்தகைய ஒரு வழிப்போக்கான கல்வி முறை கருத்தியல் அறிவினை வழங்குவதற்கு அப்பால் சென்று தலைமைத்துவ ஆற்றல்கள், தொடர்பாடல் திறன்கள், தொழிற்திறன்கள், அழகியல் உணர்வு என்பவற்றை மேம்படுத்துவதில் அக்கறை செலுத்தவில்லை. சிறந்த சமூக, இன உறவுகளைப் பேணும் வகையில் பன்மைப் பண்பாட்டை மதிக்கும் உணர்வு வளர்வு முக்கியமானதாக இருந்த போதிலும் கல்விக்கொள்கை இவ் அம்சத்தைக் கருத்திற்கொள்ளவில்லை. இவை யாவும் இலங்கையின் கல்விமுறை ஒரு தத்துவார்த்த அடிப்படையைக் கொள்ளத் தவறியதன் விளைவாகும்.

இலங்கை உட்பட பல வளர்முக நாடுகளின் கல்வி முறைகளை (தான்சானியா, கென்யா, கியூபா) ஆராய்ந்தவர்கள் (Ronald Dove) இந்நாடுகளில், காலப்போக்கில் கல்வியின் உயர் இலட்சியங்களும் நோக்கங்களும் மறைந்து, பரீட்சை, கல்விச்சான்றிதழ் என்பன கல்விமுறையை ஆக்கிரமிக்க நேர்ந்தமை பற்றி விரிவாக விளக்கியுள்ளனர். கல்வியின் முக்கிய நோக்கங்கள் என இவர்கள் கருதுவது மாணவர்களின் கல்வித்தேர்ச்சியையும், சிந்தனை விருத்தியையும், சிறந்த பண்புக் கூறுகளின் வளர்ச்சியையும், சுய தொழில் வாய்ப்புகளுக்கான திறன்களின் விருத்தியையும், தொடர் கற்றலுக்கான ஊக்கத்தையும் ஏற்படுத்துவதாகும்.

''உலக வரலாற்றில் பிந்தி நவீன மயமாக்கத்தைத் தொடங்கிய இலங்கை போன்ற நாடுகளில் பாடசாலைக் கல்வியின் இச்சிறந்த அம்சங்கள் கைவிடப்பட்டு தொழில் வாய்ப்புக்களை வழங்கக் கூடிய கல்விச் சான்றிதழ்களுக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டது; அதாவது பிந்திய நவீனமயத்தில் ஈடுபட்ட நாடுகளில் தான் தொழில்களுக்கு ஆட்களைத் தெரிவு செய்யக் கல்விச்சான்றிதழ்கள் பயன்படுத்தப் பட்டன; இதனால் மாணவர்களும் தம்மைப் பரீட்சைக்கு ஆயத்தம் செய்வதையே - மனனம் செய்து சித்தி பெறுவதையே முக்கிய கல்விச் செயற்பாடாகக் கொண்டமையால் கல்வியின் சிறந்த நோக்கங்கள் சிதற அடிக்கப்பட்டன; சான்றிதழ் பெறும் நோக்கு கல்வியில் மந்தநிலையையும் ஆவலின்மையையும் ஏற்படுத்தி சுய சிந்தனைக்கான வாய்ப்புக் களைக் குறைத்து விட்டது; சான்றிதழ் பெறும் நோக்கு கல்வி மேம்பாட்டுக்கு எதிராகச் செயற்பட்டது' (Anti- Educational)

இவ் ஆய்வாளர்களின் நோக்கில் இச்சான்றிதழ்களைப் பெறும் இலக்கு 'டிப்ளோமா நோய்' என வர்ணிக்கப் பட்டது. இலங்கையில் இலவசக் கல்விமுறையில் அரசாங்கத்தின் தலையீடு முழுமை பெற்று, அரசாங்க வேலை வாய்ப்புகளுக்கும், கல்விச் சான்றிதழ் களுக்கும் இணைப்பு ஏற்படுத்தப்பட்ட பின்னர், பாடசாலைக் கல்வி அரசாங்க வேலைவாய்ப்புக்கான கடவுச்சீட்டு என்ற நிலை உருவாயிற்று. இதனால் கல்விக்கென வகுக்கப்பட்ட உயர்தரமான இலட்சியங்கள் திசைமாறிச் செல்ல நேரிட்டது. காலப்போக்கில், 1960களில் கற்றோரின் எண்ணிக்கை வேலைவாய்ப்புகளை விடப் பெரிதும் அதிகரிக்கவே சாதாரண இலிகிதர் பதவிகளுக்கான கல்வித் தகுதிகளும் அதிகரிக்கப்பட்டன. உயர்கல்வித்தகுதியில் பெற்றோரும் ஆர்வம் காட்டத் தொடங்கியமையால் தனியார் போதனா நிலையங்களும் வளர்ச்சி பெறத் தொடங்கின மாணவர்கள் இலவச அரசாங்கப் பாடசாலைகளில் காலையிலும், மாலையில் தனியார் நிலையங்களிலும் கல்வி பெறத் தொடங்கினர் இவை நேரடியாகவே பரீட்சை நோக்குடன் இயங்கி வருகின்றன அண்மைக்கால ஆய்வுகளின் படி,

> பெரும்பாலான மாணவர்கள் பரீட்சைச்சித்தி நோக்கிற்காகவே இந்நிலையங்களை நாடுகின்றனர். பரீட்சைகளில் போட்டியிட்டு வெற்றி பெற தனியாரிடம் போதனை பெறுவது அவசியம் என்பது அவர்கள் கருத்து.
>
> பரீட்சையை எதிர் நோக்கும் சந்தர்ப்பத்திலேயே தனியார் போதனை பெரிதும் நாடப்படுகின்றது
>
> தனியார் போதனையின் உள்ளடக்கம் அல்லது பாடவிடயம் கல்விச் செயற்பாட்டின் அறிவுசார், உணர்வுசார், உளத்திறன் சார்ந்த தேர்ச்சியையும் நோக்கங்களையும் நிறைவு செய்யாது மனன முறைக்கற்றலுக்கே இடமளிக்கின்றது.
>
> தனியாரிடம் இந்த முறையில் போதனை பெறும் மாணவர்கள், பாடசாலை வகுப்பறையில் எதுவித அக்கறையும், ஆர்வமும் அற்று இருப்பதாலும், குழப்பங்களில் ஈடுபடுவதாலும் பாடசாலைக் கல்வியும் ஒழுங்காக செயற்படுவதில்லை; இம்மாணவர்கள் குறிப்பிட்ட பாட விடயத்தை ஏற்கெனவே தனியாரிடம் கற்றுவிட்டதால் இந்நிலை தோன்றுகின்றது.

ஒரு புறம் இவ்வாறு கல்வியின் உயரிய நோக்கங்கள் சிதறடிக்கப்பட மறுபுறம் கல்விமுறையின் திசை மாறிய நோக்காகிய பரீட்சைப் பெறுபேறுகளும் மிகவும் குறைவாகவே உள்ளன. 1991, 1992, 1993 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற 5ம் வகுப்புப் புலமைப்பரீட்சைகளில் 10-17 வீதமான மாணவர்கள் (1991இல் 38,000 பேர்) 100க்குப் 10 புள்ளிகளுக்கும் குறைவாகவே பெற்றனர்; 23-42 வீதமான மாணவர்கள் 20க்கும்' குறைந்த புள்ளிகளையே பெற்றனர். (1991இல் 86,000 பேர்); 58 -73 வீதமான மாணவர்கள் 39க்குக் குறைந்த புள்ளிகளைப் பெற்றனர். (1991இல் 73% 150,000 பேர்) க.பொ.த சா/தரப் பரீட்சைக்கு அமரும் மாணவரில் 10 வீதமானவர்கள் கடந்த 10 ஆண்டுகளாக ஒரு பாடத்திலேனும் சித்தி பெறவில்லை, 70 வீதமானவர்கள் வரை கணிதத்திலும், விஞ்ஞானத்திலும் சித்தி பெறுவதில்லை;

தேசிய கல்வி ஆணைக்குழுவின் புள்ளி விபரங்களின்படி 1995இல் 10 வீதமான மாணவர்கள் க.பொ.த சா/தரப் பரீட்சையில் எல்லாப் பாடங்களிலும் தோல்வி கண்டனர். (50,000பேர்); 15 வீதமானவர் மட்டுமே க.பொ.த உ/த வகுப்புக்குச் செல்லத் தகுதி பெற்றனர்; 1995 க.பொ.த உ/தரம் பரீட்சையில் 12,000 மாணவர்கள் ஒரு பாடத்திலாவது சித்திபெறவில்லை. ஆணைக்குழுவின் ஆய்வின்படி புகழ் பெற்ற நகர்ப்புற தேசிய பாடசாலைகள், 1 ஏ.பி. பாடசாலைகளிலும் இவ்வகையான சித்தியின்மையை அவதானிக்க முடிகின்றது.

தற்போது ஆண்டுக்கு 2000 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும் இலவசக் கல்வியின் பெறுபேறுகள் கல்வியியல் நோக்கிலும், பரீட்சை நோக்கிலும் மிகவும் தரம் குறைந்தனவாய் காணப்படுகின்றன.

மேலும் உயர்கல்வி பெற அனுமதி பெறும் சிறுதொகையான மாணவர்கள் (க.பொ.த. உ/தரப் பரீட்சைக்கு அமரும் 170,000 மாணவரில் 8,000 - 9,000 பேர்) கூட பட்டப்படிப்பு முடிந்தபின் எந்த வேலைக்கும் 'அமர்த்தப்பட முடியாதவர்கள்? (Un-employable), என்ற மற்றொரு பட்டத்தையும் பெறுகின்றனர். 16-17 ஆண்டுப்பாடசாலை - பல்கலைக் கழகக் கல்வியின் பின் தற்போது 15,000 - 20,000 பட்டதாரிகள் வேலையற்று இருக்கின்றனர். வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினை 1960களிலே தொடங்கி விட்டது.

கடந்த 50 ஆண்டு காலப்பகுதியில் தீவிரமான முறையில் வன்முறை அரசியலையும், அமைதியின்மையையும், பாரிய உயிரிழப்பையும் ஏற்படுத்திய காரணிகளில் கல்வி முறைக்கு ஒரு முக்கிய பங்குண்டு. 1971இலும் 1988-89இலும் தென்னிலங்கையில் இடம்பெற்ற இளைஞர் கிளர்ச்சிக்கு கல்வி முறையின் பங்களிப்புப் பற்றி பெரும் கண்டனம் எழுந்தது.

நாட்டில் எழுந்த உயர்கல்வித் தேவையை நிறைவு செய்யும் முறையில் உயர் கல்வி நிறுவனங்கள் விரிவு செய்யப்படாமையினால், இளைஞர் மத்தியில் விரக்தியும், அதிருப்தியும் எழுந்திருந்தன; அத்தோடு கற்றவர்கள், பட்டம் பெறுபவர்கள் கண்ணியமான தொழில்களைப் பெறமுடியாத அளவுக்கு வேலையில்லாப் பிரச்சினை வளர்ந்துள்ள நிலையில் இளைஞர் மத்தியில் விரக்தி காணப்பட்டது; ஒருபுறம் உயர் பதவிகளையும், அந்தஸ்தையும் வருமானத்தையும் பெறக் கல்வி தேவை; மறுபுறம் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் இல்லாத நிலை. இளைஞர் கிளர்ச்சிகளுக்கு அடிப்படைக் காரணி பொருளாதார நிலைமைகளேயாயினும், இக்கிளர்ச்சிகளுக்குப் பின் கல்வி முறையின் 'பொருத்தப்பாடின்மையை அகற்றவே முதலில் முயற்சிகள் செய்யப்பட்டன. 1971இன் பின்னர் தான் 10 ஆண்டுகளுக்குப் பொதுப் பாட ஏற்பாடு, தொழில், முன்னிலைப்பாடம், ஒன்றிணைக்கப்பட்ட விஞ்ஞான, சமூகக்கல்விப் பாடத்திட்டம், பல்கலைக்கழக நிலையில் தொழில் சார் பாடங்கள் போன்ற பல கல்விச் சீர்திருத்தங்கள் அறிமுகம் செய்யப்பட்டன.

1989-90காலப்பகுதியின் இளைஞர் கிளர்ச்சிக்கும் கல்வி முறை தொடர்பான காரணிகள் பொறுப்பு எனக்கண்டனங்கள் எழுந்தமையினாலேயே, உயர்கல்வி வாய்ப்புக்களை விரிவு செய்யும் வகையில் மாகாண ரீதியாகப் பல்கலைக்கழகக் கல்லூரிகள் நிறுவப் பட்டன. இவ்விரு கிளர்ச்சிகளையும் அவற்றின் பின்னணிக் காரணிகளையும் நோக்குமிடத்து கல்வி முறை முன்னர் கூறிய உடன்பாடான உயர் இலட்சியங்களை நிறைவு செய்யாது எதிர்மறை விளைவுகளும், அரசுக்கெதிரான கிளர்ச்சிகளும் எழுவதில் பங்களிப்பைச் செய்திருந்தது. அதன் காரணமாகவே கிளர்ச்சிகளின் பின் கல்வி முறையைச் சீர்திருத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன.

வடபகுதியில் இளைஞர்களின் போராட்ட இயக்கங்கள் முடுக்கி விடப்பட்டமைக்கு, பல்கலைக்கழக அனுமதிக் கொள்கையில் 1970இன் பின்னர் செய்யப்பட்ட மாற்றங்களின் (தரப்படுத்தல், மாவட்டவாரியான அனுமதி முறை) காரணமாகத் தமிழ் மாணவர்களின் விஞ்ஞானம் சார்ந்த துறைகளில் (மருத்துவம், பொறியியல்) பாரதூரமாக வீழ்ச்சி ஏற்பட்டது எனப் பல ஆய்வாளர்கள் கூறி வருகின்றனர். உண்மையில், அனுமதிக் கொள்கை மாற்றங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை ஒரு புறமிருக்க, தமிழ் மக்கள் தாங்கள் இனரீதியாகப் பாரபட்சமாக நடாத்தப்படுவதாக எண்ணத் தலைப்பட்டனர். தமிழ் மக்கள் உயர் இலட்சியமாகக் கருதிய கல்விச் செல்வத்தை அடையும் தமது பாதையில் வேண்டுமென்றே ஏற்படுத்தப்பட்ட தடைக் கற்களாக அனுமதிக் கொள்கைகளை நோக்கினர். இவ்விடத்து, கல்வி முறையின் ஒரு முக்கிய பலவீனமான, செயலற்ற அம்சம், உயர்கல்வி நாடிய தகுதியுடையயோருக்கு வாய்ப்புகளை விரிவு செய்து வழங்காமையாகும்.

50ஆண்டுக் கல்வி வளர்ச்சியில் வலுவாக விமர்சிக்கக் கூடிய ஒரு அம்சம் உயர் கல்விப் பிரிவில் வெவ்வேறு அரசாங்கங்கள் கையாண்ட கட்டுப்பாட்டுக் கொள்கையாகும். பாடசாலைக் கல்வியைத் தீவிரமாக விரிவு செய்தமையால் இறுதியில் இன்று 1,70,000 மாணவர்கள் வரை க.பொ.த. உ/த பரீட்சைக்கு அமரும் நிலை ஏற்பட்டு விட்டது. அனுமானமாகக் கூறுவதாயின் இவர்கள் அனைவருமே பல்கலைக்கழக வளர்ச்சியை நாடுபவர்கள். இவர்களில் இன்று 70,000 பேர் வரை பல்கலைக்கழக அனுமதித் தகுதிகளைப் பெற்றாலும் கூட இறுதியில் அனுமதி பெறுவோர் 8,000 பேர் மட்டுமே. தகுதிபெற்றவர்களில் இறுதி அனுமதி பெறுவோர் வீதம் கடந்த 50ஆண்டுகளில், பெரிய அளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. 1970ஆம் ஆண்டில் தகுதி பெற்றோரில் (10,200பேரில்) 34 வீதமானவர்கள் (3370 பேர்) இறுதியாக அனுமதி பெற்றனர், இவ்விதம் 1975இல் 26 வீதத்தை அடைந்து, 1980இல் 12 வீதம் வரை தொடர்ந்து வீழ்ச்சியடைந்த நிலையிலேயே இருந்து வருகின்றது. (1991இல் 15.5%, 1993இல் 14.6வீதம்). இன்று 33,000 மாணவர்களைக் கொண்டு விளங்கும் பல்கலைக்கழக அமைப்பு அதனை நாடுவோரின் உயர் கல்வி அபிலாஷைகளை நிறைவு செய்வதாய் இல்லை. ஆசியப் பிராந்தியத்திலும், வளர்முக நாடுகள் மத்தியிலும் உயர்கல்வி விடயத்தில் இலங்கை பின் தங்கியே இருக்கின்றது என்பது 50ஆண்டு காலக் கல்வி வளர்ச்சியின் எதிர்மறை அம்சமாகும். உயர்கல்வி வயதெல்லையில் உள்ள இளைஞர்களில் (19-23 வயது) 2 வீதத்துக்கும் குறைவானவர்களே உயர்கல்வி பெறுகின்ற நிலையே காணப்படுகின்றது. பொதுவாக தென்னாசியாவில் இவ்வீதம் 5 ஆகவும் புதிய கைத்தொழில் (தூரகிழக்கு) நாடுகளில் 8 ஆகவும் உள்ளது. மேலை நாடுகளிலும் ஜப்பானிலும் இவ்வீதம் 20-30வரை உள்ளது இலங்கையின் பாடசாலைக் கல்வி வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது, உயர்கல்வியின் வளர்ச்சி பின் தங்கி விட்டது என்பதே உண்மை.

அடுத்த இதழில் முடியும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 1978 அரசியலமைப்பு தொடர்ச்சி...

1978ம் ஆண்டு அரசியல் திட்டம் தமிழ் மக்களின் போராட்ட எழுச்சியை அடக்குவதை நோக்கமாகக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்டது என முன்னர் பார்த்தோம். இவ் அடக்குமுறைகளையும் எதிர்த்து போராட்டம் முன்னே பாய்ந்தது. 1983 இனக்கலவரம் இப்பாய்ச்சலில் ஒரு ஜெட் வேகத்தினை உருவாக்கியது. பல இயக்கங்கள் வளர்ச்சியுற ஆரம்பித்தன. கல்வி கற்றுக் கொண்டிருந்த பல மாணவர்கள் இயக்கங்களில் சேர ஆரம்பித்தனர். யாழ்ப்பாணத்தில் பல கல்லூரிகளில் உயர்தர வகுப்புக்கள் எல்லாம் வெறிச்சோடிக் கிடந்தன. கல்லூரி விடுதிகளில் தங்கியிருந்த, மாணவர்கள் மாணவிகள் பலர் இரவோடு இரவாக விடுதிகளில் இருந்து வெளியேறி இயக்கங்களில் சேரத் தொடங்கினர். கொழும்பு பாடசாலைகளில் இருந்து கூட மாணவர்கள் தலைமறைவாயினர்.

1977இல் ஐ.தே.க. அரசாங்கம் பதவியேற்ற காலம் தொடக்கம் இலங்கை-இந்திய உறவுகளும் சீராக இருக்கவில்லை. இப்பிராந்தியத்தின் புவிசார் அரசியலை மீறி இலங்கை அரசு அமெரிக்காவுடன் நெருங்கிய உறவைக் கொண்டிருந்தமையும், அமெரிக்க நலன்கள் இலங்கையில் பேணப்பட்டமையும் இந்தியாவுக்கு சினத்தையூட்டியது. விளைவு இந்திய அரசு தனது நலன்களைப் பிரதானமாகக் கொண்டு தமிழர் போராட்டத்தினைப் பயன்படுத்தத் தொடங்கியது.

இயக்கங்கள் அனைத்தும் இந்தியாவை பின் தளமாகப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டது. உத்தரப் பிரதேசத்தில் வைத்து அவர்களுக்கு ஆயுதப் பயிற்சியும் வழங்கப்பட்டதோடு குறிப்பிட்டளவு ஆயுதங்களும் கையளிக்கப்பட்டன. இதன் பின்னர் இந்திய உளவுப் பிரிவான "றோ" விற்கு இலங்கைப் பிரச்சினையை கையாளுவதே பிரதானமாகிவிட்டது.

மறு பக்கத்தில் தமிழர் போராட்டத்தினை பணயமாக வைத்து இந்திய அரசு, இலங்கை அரசுடன் பேரம் பேசலில் தொடர்ச்சியாக ஈடுபட்டது. இலங்கை அரசு பல்வேறு சுத்துமாத்துக்களை செய்தபோதும் இறுதியில் அவையெல்லாம் முடியாத நிலையில் இந்திய அரசுக்கு பணிந்தது. இந்திய நலனைப் பேணக் கூடிய வகையில் உருவாக்கப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்கு அது சம்மதத்தினை அளித்தது.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் 1987ம் ஆண்டு யூலை மாதம் 29ம் திகதி கைச்சாத்திடப்பட்டது. இதன் மூலம் தனது நலனில் வெற்றிவாகையைச் சூடிக் கொண்ட இந்திய அரசு பெயருக்கு ஒரு நன்றிக்கடனாக, தமிழர்களுக்கு மாகாண அரசாங்க முறையை ஒப்பந்தத்தில் சிபாரிசு செய்தது.

ஒப்பந்தத்தின் பிரகாரம், 1987ம் ஆண்டு நவம்பர் மாதம் 14ம் திகதி அரசியலமைப்புக்கு கொண்டு வரப்பட்ட 13வது திருத்தத்தின்படி இலங்கையில் மாகாணசபை அரசாங்க முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வரசாங்க முறையை இலங்கை அரசு வழங்கியது என்பதை விட, இந்திய அரசு தமிழர்களுக்கு வழங்கிய பிச்சை என்றே கூற வேண்டும். இந்திய அரசு இல்லாவிட்டால் இப் பிச்சையும் கிடைத்திருக்க மாட்டாது என்பதே உண்மை நிலை.

தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷைகள், இதுவரைகால அவர்களின் போராட்ட இழப்புகள் என்பவற்றுடன் ஒப்பிடும் போது மாகாண சபை அரசாங்க முறை தமிழர்களைப் பொறுத்தவரை யானைப் பசிக்கு சோளப் பொரி வழங்கியது போலவே இருந்தது.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, அவற்றைப் பிரயோகிக்கக் கூடிய அதிகாரங்கள், அவ்வதிகாரங்களுக்கான பாதுகாப்பு, தமிழர் தாயகம் என்கின்ற விடயங்களில் மாகாண அரசாங்க முறை மிகப் பலவீனமான நிலையையே கொண்டிருந்தது.

இனப் பிரச்சினைக்கான தீர்வு இலங்கை அரச கட்டமைப்புக்குள் அமையவேண்டுமானால், அது எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பாக 1949ம் ஆண்டு தமிழரசுக் கட்சி உருவாக்கப்பட்ட போதே தந்தை செல்வா தனது கருத்தினை முன்வைத்திருந்தார். சுயநிர்ணயமுடைய இரு சமஸ்டி அரசுகள், அவை இரண்டையும் இணைத்த மத்திய அரசு என்பதே அவருடைய கொள்கையாக இருந்தது. இதன் அடிப்படையில் இலங்கையில் சிங்கள அரசு தமிழரசு என்கின்ற இரு சுயநிர்ணயமுடைய சமஸ்டி அரசுகள் உருவாக்கப்பட வேண்டும் என்றும், மத்திய அரசு அவை இரண்டையும் இணைத்ததாக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். மாகாண அரசாங்க முறை இவை எவற்றையும் கவனத்தில் கொள்ளவில்லை என்றே கூற வேண்டும். இங்கு பேரின ஆதிக்கத்திற்கு பங்கம் ஏற்படாத வகையில் தீர்வினை முன்வைத்தல் வேண்டும் என்பதிலேயே கூடிய கவனம் செலுத்தப்பட்டது.



## மாகாண சபை:

## போராளிகளை சரணாகதியாக்கிய இந்திய-இலங்கை சதி !

### மாகாண சபைகளின் அமைப்புமுறை

இவ் அரசாங்கமுறையின்படி இலங்கையில் உள்ள எல்லா மாகாணங்களிலும் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன: வடக்கு-கிழக்கு மாகாணங்கள் மட்டும் தற்காலிகமாக இணைக்கப்பட்டு ஒரு சபையாக இயங்குவதற்கு அனுமதிக்கப்பட்டது. சபை இயங்கத் தொடங்கி ஒரு வருடத்தின் பின்னர் கிழக்கு மாகாணத்தில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தி இணைப்பின் எதிர்கால நிலை தீர்மானிக்கப்படும் எனவும் கூறப்பட்டது.

இங்கு நாட்டில் உள்ளது, இனப் பிரச்சினை என்பது மறைக்கப்பட்டு நிர்வாகப்பிரச்சினையே உள்ளது போல, எல்லா மாகாணங்களிலும் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. இனப்பிரச்சினைதான் பிரதான பிரச்சினையானால் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் அல்லவா அதிகாரங்கள் பங்கிடப்பட்டிருக்க வேண்டும். இந்த வகையில் தமிழர் பிரதேசங்கள் ஒன்றாக வரையறுக்கப்பட்டு அதற்கும் சிங்களப் பிரதேசங்கள் ஒன்றாக வரையறுக்கப்பட்டு அதற்கும் அதிகாரங்கள் பங்கிடப்பட்டிருக்க வேண்டும். அவை நடைபெறவில்லை.

மறு பக்கத்தில், வடக்கு-கிழக்கு இணைப்பு கூட தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ளது என்றே கூறப்பட்டுள்ளது. வடக்கு-கிழக்கு தமிழ் மக்கள் இணைந்து தானே போராடினார்கள். 1977 தேர்தலில் இணைந்து தானே தமிழ் ஈழத்துக்கான அங்கீகாரத்தினை தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு வழங்கினார்கள். அவையெல்லாம் இருக்க இணைப்பை நிலை நிறுத்த கிழக்கில் மட்டும் ஏன் சர்வஜன வாக்கெடுப்பைக் கோர வேண்டும். இவ்வாறு கோருபவர்கள் வடக்கு-கிழக்கு மக்கள், சிங்கள அரசுடன் இணைந்திருக்க விரும்புகின்றார்களா? இல்லையா? என ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடாத்த தயாராக உள்ளார்களா? இங்கே அவர்களது கவனம் முழுவதும் தமிழ் தாயகத்தைக் கூறு போடுவதிலேயே தங்கியிருந்தது.

### மாகாண சபைகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள்

அதிகாரங்களைப் பொறுத்தவரை சுயநிர்ணயமுடைய அதிகாரங்களையே தமிழ் மக்கள் கோரியிருந்தார்கள். இவ்வதிகாரங்கள் தமது தாயகத்தின் அனைத்து விடயங்களிலும் அதிகாரங்களைப் பிரயோகிக்கக் கூடியதாக இருந்திருக்க வேண்டும். குறிப்பாக காணி, பாதுகாப்பு, பொருளாதார நடவடிக்கைகள், மற்றும் மக்கள் நலன் பேணும் நடவடிக்கைகள் என்பவற்றில் முழுமையான அதிகாரம் இருந்திருக்க வேண்டும். இவை எவையும் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டிருக்கவில்லை. அதிகாரங்களை போதியளவு கொடுக்காமல் இருத்தல், கொடுத்தவற்றிலும் பிடிகளை வைத்திருத்தல், கொடுத்தவற்றை நடைமுறையில் நிறைவேற்றாது விடுதல் என்பதே இங்கு அதிகளவில் உள்ளது.

### காணி

அரசியல் யாப்பின் பின்னிணைப்பு (2) காணி, காணிக் குடியேற்றம் பற்றி குறிப்பிட்டுள்ளது. இதன்படி அரச காணிகள் அனைத்தும் மத்திய அரசுக்கு உரித்துடையதாக இருக்கும். இந்தவகையில் மாகாணங்களிலுள்ள காணிகளை மத்திய அரசு தனது விருப்பத்திற்கேற்ப பயன்படுத்தலாம். இது விடயத்தில் மத்திய அரசு மாகாண சபையுடன் கலந்தாலோசிக்க வேண்டும் எனக் கூறிய போதும் அது கட்டாயப்படுத்தப்படவில்லை.

மேலும் ஒரு பிரஜைக்கு அல்லது ஒரு அமைப்பிற்கு காணிகளை கையளித்தல் கூட ஜனாதிபதியால் மேற்கொள்ளப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

காணிக் குடியேற்றங்கள் தொடர்பில் அதற்கான செயற்திட்டங்கள் தயாரிக்கும் பொறுப்பு மத்திய அரசிடம் இருக்கும் என்றும் செயற்திட்டங்களின் நிர்வாகமும் முகாமையும் மத்திய அரசினால் மேற்கொள்ளப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

மத்திய அரசிடம் இவ்வதிகாரங்கள் இருக்குமானால் அது எவ்வாறு நடந்துகொள்ளும் என்பதை கூறித் தெரியவேண்டும் என்பதில்லை.

மேலும் குடியேற்றங்களுக்கு ஆட்களைத் தெரிவு செய்யும் போது தேசிய இன விகிதாசாரத்தின்படி மேற்கொள்ளப்படும் என்றும் முதலில் மாவட்டத்தில் உள்ள காணியற்றோருக்கும் பின்னர் மாகாணத்திலுள்ள காணியற்றோருக்கும் அவை வழங்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. இங்கு தேசிய இன விகிதம் என்பது ஒரு போதும் தமிழர்களுக்கு சார்பாக இருக்கப் போவதில்லை. இதன்படி பார்த்தால் தமிழர் பிரதேசத்தில் கூட 74 வீத சிங்களவர் குடியேறுவதற்கு வாய்ப்பு உள்ளது. குறிப்பிட்ட மாவட்டத்தின் இன வீதாசாரத்தைக் கூட கவனத்தில் எடுக்க தயாரில்லை என்பதே இங்கு தெரிகின்றது.

இது விடயத்தில் 1965இல் கைச்சாத்திடப்பட்ட டட்லி செல்வா ஒப்பந்தம் இதைவிட தெளிவாக உள்ளது என்றே கூற வேண்டும்.

டட்லி- செல்வா ஒப்பந்தம் குடியேற்றம் தொடர்பாக வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கீழ்வரும் விடயங்கள் முதன்மையாக கவனிக்கப்படும் என குறிப்பிட்டுள்ளது.

அ) முதலாவதாக, வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள காணிகள் அம்மாகாணங்களில் உள்ள காணியற்றவர்களுக்கே முதலில் வழங்கப்படல் வேண்டும்.

ஆ) இரண்டாவதாக, வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் பேசும் மக்களுக்கே வழங்கப்படல் வேண்டும்.

இ) மூன்றாவதாக இலங்கையில் உள்ள ஏனைய பகுதிகளில் உள்ள தமிழ் பேசும் இனத்தவர்களுக்கே முதலிடம் கொடுத்து ஏனையவர்களுக்கும் வழங்கலாம்.

### பாதுகாப்பு

பாதுகாப்பு விடயத்தில் மாகாணத்துக்கென மாகாண பொலிஸ் பிரிவு ஒன்று அமைக்கப்படும் என்றும், இதற்கு மாகாண முதலமைச்சரின் ஆலோசனையின் பெயரில் பொலிஸ் மா அதிகாரினால் நியமிக்கப்பட்ட மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் பொறுப்பாக இருப்பார் எனவும் கூறப்பட்டுள்ளது.

இப்பொலிஸ் பிரிவில், தேசியப் பொலிஸ் பிரிவில் இருந்து கடமை வழி அனுப்பப்பட்ட பல்வேறு தர பொலிஸ் உத்தியோகத்தர்களும், மாகாணத்தில் திரட்டப்பட்ட பல்வேறு தர பொலிஸ் உத்தியோகத்தர்களும் அங்கம் வகிப்பர் என்றும் கூறப்பட்டுள்ளது. மாகாணப் பொலிஸ் பிரிவுக்கான நியமனம், இடமாற்றம், பதவி உயர்வு மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்காக மாகாண பொலிஸ் ஆணைக்குழு ஒன்று உருவாக்கப்படும் என்றும் இவ்வாணைக்குழுவில் மாகாணத்தின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜனாதிபதியின் ஆலோசனையுடன், பொதுச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் ஒருவர், மாகாண முதலமைச்சரினால் நியமிக்கப்படும் ஒருவர் உட்பட மூவர் அங்கம் வகிப்பர் எனவும் கூறப்பட்டுள்ளது.

மேலும் மாகாணப் பொலிசுக்கான சுடுபடைக்கலங்கள், வெடிமருந்துகள் வேறு சாதனங்கள் என்பவற்றின் தன்மை, வகை, அளவு என்பன பற்றி மாகாண பொலிஸ் ஆணைக்குழுவின் கலந்தாலோசனையின் பின்னர் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

மேலும், மாகாணப் பொலிஸ் பிரிவு உட்பட அனைத்துப் பொலிஸ் பிரிவினதும் பயிற்சிக்கு மத்திய அரசே பொறுப்பாக இருக்கும் எனவும் கூறப்பட்டது.

இங்கு மாகாண பொலிஸ் பிரிவு முழுமையாக மாகாண அரசின் அதிகாரத்திற்குள் இல்லாத நிலை தெளிவாக உள்ளது. மாகாண பொலிஸின் தலைவரான பிரதிப் பொலிஸ் மா அதிபரை நியமிக்கும் அதிகாரம் முதலமைச்சருக்கு வழங்கப்படவில்லை. அவரின் ஆலோசனை மட்டும் பெறப்படும் என கூறப்பட்டுள்ளது. மாகாண ஆட்திரட்டலை மேற்கொள்ளும் மாகாண பொலிஸ் ஆணைக்குழுவிலும் மத்திய அரசின் கையே மேலோங்கியுள்ளது. அங்கு முதலமைச்சரால் நியமிக்கப்பட்டவர் ஒருவரேயாவார். ஏனைய இருவரும் மத்திய அரசால் நியமிக்கப்பட்டவர்களாக உள்ளனர். அதைவிட மாகாண பொலிஸ் பிரிவில் தேசிய பொலிஸ் பிரிவிலிருந்து கடமை வழி அனுப்பப்பட்டவர்களும் உள்ளனர். ஏன் இது விடயத்தில் அனைவரையும் மாகாண மட்டத்தில் திரட்டக் கூடாது என்பதற்கு பதில் இல்லை.

மேலும் படைக்கலங்கள் பற்றியும் பயிற்சி பற்றியும் தீர்மானங்களை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும் அதிகாரங்களும் மாகாண அரசுக்கு வழங்கப்படவில்லை. அவை மத்திய அரசின் கைகளிலேயே உள்ளன.

எனவே நுணுக்கமாகப் பார்க்கும் போது தமிழ் மக்களின் பாதுகாப்பு அதிகாரத்தை தமிழ் மக்களினால் தேர்ந்தெடுத்த சக்திகளிடம் கொடுக்க அரசு தயாரில்லை என்பதையே இது காட்டுகிறது. அதாவது பிரதான அழுத்தி, மத்திய அரசிடம் இருக்க வேண்டும் என்பதிலேயே கவனமாக உள்ளது. இங்கு மத்திய அரசு என்பது பேரினமயப்பட்ட சிங்கள அரசே என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு மத்திய அரசின் மேலாதிக்க நிலை மாகாண பொலிஸ் பிரிவில் இருந்தும் மாகாண சபை அறிமுகமாகி இன்று 11 வருடங்கள் ஆன பின்னரும் கூட மாகாண பொலிஸ் பிரிவு உருவாக்கப்படவில்லை. இருக்கின்ற சொற்ப அதிகாரங்களே தனக்கு ஆபத்தாகி விடலாம் என அரசு கருதுகின்றமையே இதற்குக் காரணமாகும். மாகாண அரசாங்கத்திற்கு காவலனாக இருந்த இந்திய அரசு கூட இதில் போதியளவு அக்கறை காட்டவில்லை. இந்திய இராணுவம் இங்கிருந்தபோது உருவாக்கப்பட்ட தொண்டர் பொலிஸ் பிரிவோடு தனது கடமைகளை அது முடித்துக் கொண்டது. இந்திய இராணுவம் சென்றவுடன் அதுவும் இல்லாமல் போய்விட்டது.

வரும்..

**-செம்பாட்டான்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண்களும் வீட்

# குடும்ப நிறுவனத்தை




உலகின் பல நாடுகளில் பெண்களின் நலனில் அக்கறையுள்ள பெண்ணிலைவாத குழுக்கள் (அமைப்புக்கள்) சமவாய்ப்பு சம உரிமை, சமஅந்தஸ்து என்னும் கோரிக்கைகளை முன்வைத்து போராடி வெற்றியீட்டியுள்ளபோதும் குடும்பத்தினுள் வரும் வீட்டு வேலை என்பது என்றென்றும் பெண்ணுக்குரியவையாகவே ஆணாதிக்க கருத்தியல்கள் வலியுறுத்துகின்றன. இன்றும் அதுவே நடைமுறையில் இருந்தும் வருகின்றது. இவ்வாறு குறிப்பிட்ட பாலினருக்கே உரியது என ஒதுக்கப்படுவது போல் வேறு எந்தத் தொழிலிலும் குறிப்பிட்ட பாலினரே செய்யவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. இந்த வீட்டு வேலைகள் பெண்ணிலைவாதிகளால் விவாதிக்கப்பட்டுள்ள போதும் இன்றுவரை தீர்வு காணப்படாத விடயமாகவே உள்ளது. அதிலும் தமிழ்ச் சூழலில் வீட்டு வேலைகள் பெண்ணுக்குரியது என நிர்பந்திப்பது மிகையாக இருப்பதுடன் அது ஓர் வேலை என்ற உணர்வே அற்றுக் காணப்படுகின்றது. வீட்டுவேலைகள் பெண்ணுக்குரியதாகவும் மதிப்பற்றதாகவும் நிர்ப்பந்திப்பதன் பின் புலத்தில் ஏதோ நலன்கள் இருந்தாக வேண்டும்.அதனை

1) வீட்டுவேலைகளை எவ்வாறு மதிப்பிடுவது?
2) வீட்டுவேலைகளினால் யார் நேரடியாக பயனடைகிறார்கள்? கணவன்மார்களா? முதலாளிமார்களா?
3) வீட்டுவேலைகளுக்கு தீர்வு என்ன ?
4) சமூகமயப்படுத்தலாமா? அல்லது ஊதியமளிக்கலாமா ?

என பரிசீலிப்பதன் மூலம் வீட்டு வேலைகள் குறித்து ஓர் அறிமுகத்தைச் செய்யலாம் நினைக்கிறேன்.

வீட்டுவேலைகள் எனும்போது உணவு தயாரித்தல், வீட்டை சுத்தப்படுத்தல், உடைகளை கழுவுதல், குழந்தைகளை பராமரித்தல், வீட்டிலுள்ள ஏனைய அங்கத்தவர்களை (கணவனின் தாய் தந்தை) பராமரித்தல் என்பவற்றை குறிப்பிடலாம். ஏனைய தொழில்களைப் போலல்லாமல் வீட்டுவேலைகள் என்பவை திட்டவட்டமான வேலைநேரம், செய்யப்பட வேண்டிய வேலைகள், வேலை நிலைமைகள் போன்ற எந்த விதமான வரையறைகளும் இன்றி காலையில் எழுந்தது முதல் இரவு நித்திரைக்கு போகும் வரையில் மட்டுமல்லால் இரவில் குழந்தை விழித்துக் கொண்டாலோ, குடும்பத்தில் யாராவதொருவர் சுகயீனமுற்றாலோ, விருந்தினர் சிலர் திடீரென வந்து விட்டாலோ சரி எந்த நேரத்திலும் எல்லாவிதமான வேலைகளையும் பெண்கள் செய்தாக வேண்டியுள்ளது. அத்துடன் வீட்டுவேலைகள் என்பவை பொதுவாக ஒரேவிதமான வேலைகளை திரும்பத் திரும்ப செய்வதைக் குறிப்பதுடன் இந்த வேலைகள் சமூகத்துடன் தொடர்புறாமல் வீட்டிற்குள்ளும் சமையலறையினுள்ளும் நடைபெறுகின்றன. இதனால் பெண்கள் களைப்பும், சலிப்பும் அடைவதுடன் தனிமைப்பட்டுப் போவதையும் உணர்கிறார்கள். இத்தனைக்கு பின்பும் பெண்ணின் உழைப்பு உரிய மதிப்பையும் வெகுமதியையும் பெறாமல் போய் விடுகிறது.

குடும்பத்தில் வீட்டுவேலைகள் அனைத்தையும் மனைவி தானே பொறுப்பேற்பதன் மூலம் கணவனுக்கு சௌகரியமான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்கிறார். இதனால் ஆண் (கணவன்) தனது தொழில் முயற்சி, பொழுதுபோக்குகளுக்கு சாதகமாக இருப்பதோடு இவற்றில் முழுக் கவனத்தைக் குவிப்பதும் சாத்தியமாகிறது. ஒரு ஆணைப் பொறுத்தவரையில் ஒரு நாளிற்குரிய சாதாரண வேலை என்பது தன்னுடைய வீட்டுவேலைகள் எதனையும் செய்யத் தேவையில்லாத நிலையிலுள்ள ஒருவரது வேலைகளையே குறிக்கிறது. பெண்கள், வீட்டு வேலைகளை தொடர்ந்து கவனித்து வருவதால் ஆண்கள் தமது தொழிலில் முன்னேற்றப்பாதையில் முழு ஈடுபாட்டையும் காட்ட உதவியளிக்கின்றது. உதாரணமாக உயர் நிர்வாகிகள் பன்னிரண்டு மணித்தியாலம் வேலை செய்வதும், குறுகிய நேர இடைவெளியில் வெளிநாடு செல்வதும், தொழிலாளர்கள் மேலதிக (Over time) வேலைக்கு செல்வதும், ஆசிரியர்கள் மாலைநேர வார விடுமுறை வகுப்புக்களில் கலந்து கொண்டு தமது கல்வித்தரத்தை உயர்த்திக் கொள்வதும் சாத்தியமாகிறது. இத்தோடு கணவர்மார்கள் பொழுது போக்கு நிகழ்சிகளில் முழுமையாக ஈடுபடவும் முடிகிறது. விளையாட்டுகளில் கலந்து கொள்வதற்காக தூர இடங்களுக்கு செல்வதும் ஒரு முழுநாளை விளையாட்டு நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு ஒதுக்குவதும் சாத்தியமாகிறது.

இவ்வாறு பெண்கள் நாளாந்தம் வீட்டு வேலைகளை தொடர்ந்து கவனித்து வருவதால் ஆண்கள் வேலையில்லாத அல்லது ஓய்வுபெற்ற காலத்திலும் கூட வீட்டுவேலைகள் செய்யாமல் இருப்பது சாத்தியமாகிறது. பிரான்சில் செய்த ஓர் ஆய்வுப்படி கணவன் மனைவி இருவரும் வேலைக்கு செல்லும் குடும்பங்களில் ஆண்கள் சராசரியாக இரண்டு மணி நாற்பத்தியொரு நிமிடமும் பெண்கள் சராசரியாக நான்கு மணி முப்பத்தியெட்டு நிமிடமும் வீட்டு வேலைகளில் செலவிடப்படுவது கண்டறியப்பட்டுள்ளது. ஆனால் ஆண்கள் ஓய்வுபெறும்போது இந்த இடைவெளி மேலும் அதிகரிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. 65 வயதில் பெண்கள் தமது கணவரை விட 3 மணித்தியாலங்கள் அதிகளவு வேலையில் செலவிட நேருகிறது. இந்த ஆய்வினை தமில் சூழலில் செய்திருந்தால் அதிர்ச்சியான முடிவே கிடைத்திருக்கும். ஏனெனில் அங்கு முழு வீட்டு வேலைகளையும் அனேகமாக பெண்களே செய்வார்கள். இதனாலேயே பெண்கள் ஓய்வு நேரமின்றி ஒரு நாளில் முழு நேரத்தையும் தொடர்ச்சியாக வீட்டு வேலைகளிலும் வெளி வேலைகளிலும் செலவிட நேருகிறது. இதனால் குடும்ப நிறுவனத்தினுள் சென்ற பெண்கள் பொதுவாக பட்டப்படிப்பிற்கு பிற்பாடு தமது கல்வித்தரத்தை உயர்த்துவதற்காக செலவிடுவதோ, பதவி உயர் பரீட்சைகளில் தோன்றுவதோ அரிதாகவே உள்ளது.

பொதுவாகவே கைத்தொழில் மயப்பட்ட நாடுகளில் மின்சாரம் குழாய்நீர், சமையல் வாயு போன்றவை இலகுவாக கிடைப்பதும் ஆ) வீட்டுவேலைக்கு உதவும் சாதனங்களான (gass cooker, washing machine, fridges, Microwave oven, Rice cooker, Blender) போன்றவை கிடைப்பதனாலும்,) தயார் நிலையிலுள்ள நுகர் பண்டங்கள் கிடைப்பதனாலும் வீட்டு வேலைகள் இலகுவாக்கப் பட்டுள்ளதாக கருதப்படுகின்றது. இது ஓரளவே உண்மையாகும் . ஏனெனில் இந்த சாதனங்களின் வருகையானது வீட்டுவேலைகளின் கடுமையினை குறைத்துள்ளதே ஒழிய வீட்டுவேலை நேரத்தை குறைக்கவில்லையென்றே கூறலாம். புதிய சாதனங்களின் வருகையானது முன்பு செய்த வேலைகளை இன்னும் தரமாகவும் அடிக்கடியும் செய்யும்படி நிர்பந்திக்கிறது. உதாரணம் சமையல், வீட்டின் சுத்தம் குழந்தையின் கவனிப்பு என்பவற்றை குறிப்பிடலாம் அத்தோடு முன்பு வீட்டுக்குவெளியே செய்யப்பட்ட சில வேலைகள் மீண்டும் வீட்டிற்கே கொண்டு வந்து சேர்த்துள்ளது. உதாரணமாக ஆடைகள் சுத்தப் படுத்தலைக் குறிப்பிடலாம். எப்படியிருப்பினும் எமது தமிழ்ச் சூழலைப் பொறுத்தவரையில் மேற்கூறப்பட்ட வீட்டுவேலைக்கான இலகு பொருட்கள் மக்களின் வாழ்க்கைத் தரத்திற்கேற்பவே கிடைக்கின்றன. மத்தியதர வர்க்கத்திற்கே மேற்கூறப்பட்ட வீட்டு வேலைக்கான இலகுபொருட்கள் யாவும் கிடைப்பது அரிதாகவே உள்ளது. பொதுவாக விலை கூடிய பொருட்கள் வைத்திருப்பது சாத்தியமற்றதாகவே உள்ளது. எனவே எல்லா வசதியும் கிடைக்கப் பெற்றவர்கள் மிகக்குறைந்த வீதத்தவர்களேயாகும்.இவர்களுக்கு வீட்டுவேலை என்பது கடுமையானதும் அதிக நேரத்தை செலவிடுவதுமாகவே உள்ளது.இவர்களின் குடும்பங்களில் தலைவன் எனப்படுபவர் தனது வசதிக்கு மோட்டார் துவிச்சக்கரவண்டி வேண்டுவதில் காட்டும் அக்கறை வீட்டுவேலைக்கு உதவும் 'காயடிப்பு' (Gass cooker) போன்ற அடிப்படை பொருட்கள் வேண்டுவதில் காட்டுவதில்லை.

20ம் நூற்றாண்டிலும்கூட பெண்களின் வீட்டுவேலை நேரம் குறைவடையாது இருப்பதுடன் இவர்கள் தொழில் செய்தாலும்கூட ஆண்களைவிட பெண்கள் இரண்டுமடங்கு வேலைகளை செய்ய வேண்டியுள்ளது. தொடர்ச்சியான வேலைகள் பெண்களை அடிக்கடி மன அழுத்தத்திற்கும் உள்ளாக நேரிடுகிறது.

சில சந்தப்பங்களில் பெண்கள் வீட்டு வேலைகளை தனியாக சமாளிக்க முடியாத நிலமை ஏதாவது காரணத்தால் ஏற்படுகையில் வீட்டு வேலைகளுக்கென உதவியாளரை- வேலைக்காரர் பகுதி நேர துப்பரவாக்குபவர்கயள், குழந்தை பராமரிப்பவர்கள் - வைத்துக்கொள்ள அனுமதிக்கப் படுகிறார்கள். ஆனால் வேலைக்காரரை தேடிப் பிடிப்பது, பயிற்றுவிப்பது, முறையாக நிர்வகிப்பது போன்றவையே பெண்களுக்கு இன்னுமொரு வேலை போல் ஆகிவிடுகிறது. இதனால் குடும்பத்தில் இன்னொருவுரையும் வைத்துப் பராமரிப்பதுபோல பெண்ணுக்கு இந்த செயற்பாடு ஆகிவிடுகிறது. பொதுவில் வீட்டுவேலைகளை தனித்து ஒரு பெண்ணால் சமாளிக்கவே முடியாது என்ற நிலமை தோன்றும்போதுதான் இப்படிப்பட்ட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றது. பிரசவம், அதிக குழந்தைகள், பராமரிக்கப்பட வேண்டிய நோயாளிகள், அடிக்கடியும் அதிகரித்தளவு விருந்தினர்கள் வருகை போன்றறை இப்படிப்பட்ட நிலமைகளில் குறிப்பிடத் தக்கவை. குடும்பத்தினுள் இன்னுமொரு விதமான நிலமைகளிலும் வீட்டு வேலைகளுக்கு உதவியாளர்கள் வைத்திருக்க அனுமதிக்கப்படுகிறார்கள். வீட்டு வேலைகளில் செலுத்தப்படும் மனைவியின் உழைப்பானது வேறு ஏதாவது ஒருதுறையில் செலுத்தப்படுவது அதிக இலாபகரமானதாக இருக்கும் என கணவர் கருதும் பட்சத்தில், அதாவது குடும்பத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தக் கூடிய அதிக் வருமானத்தைத் தரக்கூடிய ஒரு தொழிலுக்கு மனைவி போவதை கணவன் விரும்பும் பட்சத்தில் அல்லது குறிப்பான சமூக கலாச்சார நடவடிக்கைகளில் மனைவியர் பங்குபற்றுவது, அழகுக்கலைகளில் ஈடுபாடு காட்டுவது போன்றவை கணவரது செல்வச் செழிப்பின் அடையாளங்களாக வெளிப்படும் நிலமைகளிலும் வீட்டு வேலைகளுக்கு உதவியாட்கள் வைத்திருத்தல் அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் தமிழ் நடுத்தர வர்க்க பெண்களைப் பொறுத்தவரையில் தொழிலுடன் வீட்டு வேலைகளையும் சேர்த்து இரண்டு வேலைகளையும் தனியே செய்தாக வேண்டும் என்பதே நியதியாக உள்ளது. இவர்கள் இரண்டு வேலைகளையும் தனியே சமாளிக்க முடியாத நிலைமை உருவாகும் போது பெண்கள் தொழிலுக்கு முழுக்கு போட்டுவிட்டு வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கொள்கிறார்சள். வேலைக்காரரை வைத்திருக்கும் பெண்களை சோம்பேரிகளாகவும், ஒட்டுண்ணிகளாகவும் சித்தரிக்கக்கூட இந்த ஆணாதிக்க சமுதாயம் தயங்குவதில்லை.

### வீட்டுவேலைகளை எவ்வாறு மதிப்பிடுவது ?

சமூகளவில் நடைபெறும் செயற்பாடுகள் அனைத்துமே பால்மயப்பட்டதாகவே (Gendered) ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. முதலில் சமூக செயற்பாடுகள் அனைத்துமே பொதுவானவை, தனிப்பட்டவை (Public-Private) என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் அதிகாரத்தையும் செல்வத்தையும் மதிப்பையும் வழங்கக் கூடிய பொது அரங்கானது ஆணுக்குரியதாகவும் சலிப்பூட்டும், தனிமைப்படுத்தும், கீழ்ப்படுத்தும் தனிப்பட்ட அரங்கானது பெண்ணுக்குரியதாகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வகைப்படுத்தலானது குடும்பத்தினுள்ளும் ஆணின் கையில் அதிகாரம் குவிவதற்கும் இட்டுச் செல்கின்றது. பொதுவாக திருமணம் என்பது சமத்துவமான உறவு என்று கூறப்பட்டாலும் இந்த உறவுக்குள் ஆணுக்கும் பெண்ணுக்கும் என ஒதுக்கப்பட்டுள்ள பாத்திரங்களும் வேலைப்பங்கீடும் ஆணை அதிகாரத்திலும் பெண்ணை கீழ்படிவான நிலையிலும் வைத்திருப்பதாகவே அமைந்துள்ளது. அத்தோடு கணவன் மனைவி இருவருமே தொழில் செய்யும் நிலையில் இருந்தாலும் கூ
கணவனுக்கு அவரது தொழில் சார்ந்த முயற்சிகளி
மனைவி உதவுவது போல் மனைவியின் தொழி
சார்ந்த முயற்சிகளில் கணவன் உதவுவது குறைவ
கவே உள்ளது. அப்படி எப்போதாவது நடைபெ
மாயின் கணவனுக்கு உதவி செய்யும் போதுகூ
மனைவி கீழ் படிவான நிலையிலேயே தொடர்ந்
செயற்படுகிறார். ஆனால் மனைவிக்கு கணவ
உதவ முன்வருவாரேயானால் இயல்பாகவே
கணவன் அதிகார நிலைக்கு சென்று விடுவா
இப்படியாக சமூகளவிலும் குடும்பளவிலும் நிலவு
வேலைப் பிரிவினையானது கணவன் மனை
ஆகியோரிடையே நிலவும் தொழில் சார்ந்
உறவுகளிலும்கூட ஏற்றத்தாழ்வை அதிகார
படிநிலையை (Hierarchy) தோற்று வித்துவிடுகிற

தமிழ்ச் சூழலில் இன்று திருமணம் என்ப
சந்தையில் வாங்கும் பொருளாகவே உள்ளது
அதாவது பல இலட்சங்களை இனாமாகவும்
நகையும் கொடுத்தால் மாப்பிள்ளையை
விடலாம். இவ்வாறு விலை கொடுத்து வாங்கு
திருமண உறவு என்பது அசமத்துவ உறவாகவு
பால்ரீதியான வேலைப் பிரிவினையயும் கொண்
தாகவுமே உள்ளது. குடும்பத்தில் பெண்களா
செய்யப்படும் வீட்டு வேலைகள் என்றென்
கீழ்படிவானதாகவும், மதிப்பற்றதாகவும் ஊதியம
றதாகவும் உள்ளது. குடும்ப நிறுவனத்தினுள் பெ
வருவதினால் கணவர் குழந்தைகள் மட்டுமல்
கணவரின் பெற்றோர் என பல அங்கத்தவர்களுக்
சேவை செய்ய வேண்டியுள்ளது. பொதுவாகவே
பொருளை சந்தையில் வாங்கினால் வாங்கிய
ருக்கே அப்பொருள் உடமை என்பதே வழமையாகு
ஆனால் திருமணம் என்ற சந்தையில் விசித்தி
என்னவென்றால் பொருளுக்குத்தான் (ஆண்
வாங்கியவர் ( பெண் ) உடமையாகும். பெண்க
அதனை அனுசரித்தே நடக்கிறார்கள். இவ்வ
பெண்கள் கணவர், குழந்தைகள், ஏனைய அங்க
வர் யாவருக்குமே சேவை செய்வது தமது கட
என்பதுபோலவும், அவர்களின் சேவை
பெறுவது வீட்டு அங்கத்தவர்களின் உரிமை
போலவும் உணரும் நிலை காணப்படுகி
பெண்கள் ஒருபுறம் இந்த வீட்டுவேலைச்சுமை
சலிப்புற்று, களைப்புற்று, தனிமைப்படுத்
செய்கிறார்கள். மறுபுறம் இந்த சேவையினால்
கணவர், எனது குழந்தை என பெருமிதமும் ம
யும் அடைகிறார்கள். இந்த மாதிரியான பெண்க
இருமுகத் தன்மையினால் வீட்டுவேலைகள் குறி
சரியான மதிப்பீட்டிற்கு வரமுடிவதில்லை. ஆனா
இன்று பெண்கள் தொழில் புரிபவராக இருப்பாரா
வீட்டுவேலைகள், வெளிவேலைகள் என இரட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# ...் வேலைகளும்
# ...நோக்கி சில கேள்விகள்!

**தற்போதைய முதலாளித்துவ ஆணாதிக்க சமூக அமைப்பு இப்படியே நீடிக்கும் வரை ஆண் உற்பத்தியாளனாகவும், பொது அரங்கிற்குரிய அந்தஸ்தினை உடையவராகவும் (Public work place) பெண் மறு உற்பத்தியாளராகவும், தனிப்பட்ட குடும்பத்திற்குரிய (Private Family) தாழ்அந்தஸ்தினை உடையவராகவும் கருதும் நிலை இருக்கும் வரை பெண்ணொடுக்குமுறைக்கு தீர்வு என்பது இந்த ஆணாதிக்க முதலாளித்துவத்தின் அழிவுடனே சாத்தியப்படும்.**

...மையினால் பல கஸ்டங்களை அனுபவிப்பதுடன் ...ட்டுவேலைகள் குறித்து விவாதித்துக் கொண்டி...க்கிறார்கள் என்றால் மறுப்பதற்கில்லை. இவ்வாறு ...ருமணத்தின் மூலம் குடும்ப நிறுவனத்தினுள் வரும் ...ண்கள் எப்படி மதிப்பற்ற, ஊதியமற்ற, கீழ்படிவான, ...லிப்பூட்டும் களைப்பூட்டும் தனிமைப்படுத்துவதுமான ...ட்டுவேலைகளினால் மகிழ்ச்சியடைய முடியும்? ...ச்சயமாக பெண்கள் பல சந்தர்ப்பத்தில் தமக்குள்...ளயே இந்த வாழ்கையை வெறுத்துக்கொண்டும் ...வளியில் சமாளித்துக் கொண்டும்தான் உள்ளார்...ள் என்பதே உண்மையாகும்.

இவ்வாறான பெண்களின் நடத்தைக்கு காரணம் ...ன்ன என ஆராய்ந்தால் ஆணாதிக்க கருத்தியல்...ள் பெண்களின் ஆழ்மனிதில் வேரூன்றியுள்ளதே ...ன்றால் மிகையாகாது. ஆம் பெண் என்றால் ...னைக்கு உரியவள் என்றும் அதனால் அவளை ...னைவி, இல்லாள் என அழைப்பதும் அவள் குடும்ப ...று...தினுள் வரும்போது கணவன் குழந்தைகள் ...ட்டி...ள ஏனைய முதியவர்கள் போன்ற ...வருக்கும் சேவை செய்ய வேண்டும் எனவும், முகம் ...காணாமல் என்றும் சிரித்த முகத்துடனும், ...பொறுமையுடனும் இருத்தல் வேண்டும் எனவும் ...திர்பார்க்கப்படுகின்றது. "சிரித்த முகம் வேணுமடி ...ண்களுக்கு" என்ற சினிமாப்பாடல் வரிகளும் ...தனையே சித்தரிக்கின்றது. இப்படியான பெண்...ளே வீட்டுக்குரிய குலமகள் எனவும் அல்லாத...டத்து அவள் நல்ல குடும்பத்திற்கு ஏற்ற பெண் ...ல்ல எனவும் வசை மொழியிற்கு ஆளாவாள். இந்த ...கையான ஆணாதிக்க கருத்தியல்களை அடிமன...தில் கொண்டதினாலேயே பெண்கள் வீட்டு ...வலைகள் குறித்து சரியான மதிப்பீட்டிற்கு ...முடியாதுள்ளது. சினிமாபடம் சினிமாபாடல்கள், ...த்திரிகைகள், கதைகள் போன்ற வெகுசன ...தொடர்பு சாதனங்களும் இந்தமாதிரியான ஆணா...க்க கருத்தியல்களையே வலியுறுத்துகின்றன. ...தனையே ஒளவையாரின் பழைய வெண்பாவொன்...ன் வரி கூறுகிறது. "சற்றேனும் ஏறுமாறாய் ...ப்பாளேயாகில் கூறாமல் சன்னியாசம் கொள்" ...ன (ஒளவையாரும் ஒரு பெண்ணியற் புலவர் ...ன்பதும் இங்கு கவனிக்கத்தது). எனவே இவ்வா...ன ஆணாதிக்க கருத்தியல்கள் பால்ரீதியான ...வலைப் பிரிவினையை வலியுறுத்துவதனாலேயே ...டும்பத்தினுள் அசமத்துவமான உறவு நீடிக்கிறது ...னலாம். இரண்டு நண்பர்கள் சேர்ந்து இருக்கும் ...ாது வீட்டு வேலைகளை எவ்வாறு பங்கு போடுகி...ர்களோ அதே போலத்தான் குடும்பம் என்ற ...றுவனத்தினுள் வரும் இரு பங்காளரும் வீட்டு வேலைகளை பங்குபோட்டுக்கொள்வதே சரியான அணுகுமுறையாகும். ஆனால் நடைமுறையில் அவ்வாறு இன்றி வீட்டுவேலைகள் யாவும் பெண்களின் தலையில் சுமத்தப் படுகிறது. இந்த வீட்டு வேலைகள் தாழ் அந்தஸ்தினை பெறுவதினாலேயே பெண்கள்தான் இதனை செய்தாக வேண்டும் என கருத்தியல்கள் வலியுறுத்துகின்றன. எனவே வீட்டுவேலைக்கான அந்தஸ்தினை வழங்குவதன் மூலம் இந்த ஆணாதிக்க கருத்தில்களை சிதறடிக்க வேண்டும். எவ்வாறு வீட்டு வேலைகளுக்கு அந்தஸ்தினை அளிப்பது எனின்

அ) வீட்டுவேலைகளை சமூகமயப்படுத்தலாம்.
அல்லது
ஆ) வீட்டுவேலைகளுக்கு ஊதியம் அளிக்கலாம்.

## வீட்டுவேலைகளை எவ்வாறு சமூகமயப்படுத்தலாம் ?

வீட்டுவேலைகளை சமூக மயப்படுத்தல் என்பது இன்று வீட்டில் பெண்களால் தனிப்பட்ட முறையில் செய்யப்படும் வேலைகள் பலவற்றை பொது நிறுவனங்களில் தொழில்முறைப்படி(Profession) செய்வதைக் குறிக்கிறது. பொது உணவகம் பொதுசலவைக்கூடம், சிறுவர் பராமரிப்பு நிலையம், வயோதிபர் நிலையம், நோயாளிகளை பராமரிக்கும் பொது வசதிகள்.... போன்றவற்றை குறிப்பிடலாம். இவ்வாறு செய்வதினால் பெண்கள் பெருமளவில் வீட்டு வேலைகளின் சுமைகளில் இருந்து விடுவிக்கப் படுவார்கள். அத்தோடு பெருவீத அளவில் இயந்திரமயப்படுத்தியும், சிறப்பு தேர்ச்சி பெற்ற தொழிலாள்களால் இவை செய்யப்படும்போது இந்த சேவைகள் இன்னும் தரமாக அமைவதுடன் மலிவானதாகவும் கிடைப்பதாக இருக்கும். ஆனால் இதனை செய்வதற்கு பெண்விடுதலையை தனது நிகழ்ச்சி நிரலில் (Agenda) வைத்துள்ள ஒரு அரசும் இந்த விதமான பொது வசதிகளை உருவாக்குமளவிற்கு உயர்ந்த உற்பத்தி வளர்ச்சி மட்டமும் அவசியமர்னதாகிறது. ஆதலால் இது புரட்சிகர அரசதிகாரம், சமூகமாற்றம் போன்றவற்றுடன் நெருங்கிப் பிணைந்துள்ளது.

பொதுவாக சமூகத்தில் ஆண்களே உழைப்பாளர்கள் எனவும் அவர்களது ஊதியத்தை செலவு செய்யும் நுகர்வாளர்களே பெண்கள் எனவும் கூறப் படுகின்றது. ஆனால் பெண்கள் முதலில் உழைப்பாளர்கள் பின்புதான் நுகர்வாளர்கள், மார்கிரட் பென்சன்ட்ஸி (Margaret Benston) என்பவர் கூறுகிறார். குடும்பத்துடனும் வீட்டுடனும் சம்பத்தப்பட்ட எளிமையான பயன்மதிப்புக்களை உருவாக்குவதற்கு பொறுப்பானவர்கள் என்ற வகையில் பெண்களை ஒரு வர்க்கமாக அமைக்கலாம் என்கிறார். இங்கு எளிமையான பயன்மதிப்பு என்பது உணவு சமைப்பது, ஆடைகள் வீடு என்பவற்றை சுத்திகரிப்பது, குழந்தைகள் முதியோர் நோயாளர் என்பவர்களை பராமரித்தல் போன்றவற்றை உள்ளடக்கும். பெண்கள் குடும்பநிறுவனத்தினுள் தமது உழைப்பை ஊதியத்திற்காக செய்யவில்லை என்பதற்காக மதிப்பற்றது எளிமையானது என்று அர்த்தப்படாது. உதாரணமாக வீட்டு வேலைகளில் உணவுசமைப்பது என்பது ஒரு தொழிலே அதனையே ஆண்கள் உணவகங்களில் செய்யும் போது மிகவும் மதிப்பாகவும் உயர்ந்தளவு ஊதியமும் அளிக்கப்படுகின்றது. நல்ல உணவுத் தயாரிப்பாளருக்கு இலங்கையில் 10,000-15,000 வரை ஊதியம் அளிக்கப்படுகின்றது. நட்சத்திர உணவு விடுதிகளிலுள்ள அதாவது இன்று உயர்கல்வி கற்ற டாக்டர், இஞ்சினியர் போன்றோருக்கும் இதேயளவுதான் ஊதியம் அளிக்கப்படுகின்றது. ஆனால் ஆண்களினால் செய்யப்படும் அதேவேலைகள் வீட்டில் தனிப்பட்ட அங்கத்தவர்களுக்காக செய்யப்படுகையில் ஊதியமும் இன்றி மதிப்பும் அற்றும் காணப்படுவ்து ஆச்சரியத்திற்குரியதே. இதே போன்று சலவை செய்யதலையும் குறிப்பிடலாம்.

பெண்கள் தமது வீட்டு வேலைகளில் இருந்து விடுவிக்கப்படாத வரை அவள் சமூக உற்பத்தியில் ஈடுபடுவது என்பது தொலைதூரத்திலேயே இருக்கும். திருமணமான தாய்மையெய்திய பெண்கள் சமூக உற்பத்தில் ஈடுபடும்போது இரண்டு வேலைகளை (வீட்டுவேலைகள்-வெளிவேலைகள்) செய்ய வேண்டியுள்ளது. சமூக உற்பத்தியில் ஈடுபடுவது பெண் விடுதலையின் முன்நிபந்தனை என்ற போதிலும் அது மட்டுமே விடுதலையைக் கொண்டு வந்து விடாது. வீட்டுவேலைகளை பெண்ணுகே உரியதாகவும், தனிப்பட்ட நடவடிக்கையாகவும் கருதும் வரையில் இது பெண்ணிற்கு இரட்டிப்பு வேலைச் சுமையினையே ஏற்படுத்தும். ஆதலால் வீட்டு வேலைகளை சமூக மயப்படுத்துவதன் மூலம் பெண்களை வீட்டுவேலைகளில் இருந்து விடுவிப்பது இன்றியமையாத ஒன்றேயாகும். அதுவே பெண்கள் சமூகஉற்பத்தியில் முழுமனத்துடன் ஈடுபட வழியமைத்துக் கொடுப்பதுடன், பெண்களுக்கு உயர்பதவியினையும், உயர் அந்தஸ்தினையும் அளித்து அவர்களது ஆளுமையினை செழிப்பாகவும், வளமாகவும் வளர்த்துக் கொள்ள வாய்ப்பளிக்கும் என்றால் மறுப்பதற்கில்லை.

## வீட்டுவேலைகளுக்கு ஊதியம் அளிக்கலாமா ?

குடும்பநிறுவனத்தினுள் நடைபெறும் வீட்டு வேலையினை சில பெண்ணிலைவாதிகள் பின்வருமாறு குறிப்பிடுவர். அதாவது பெண்கள் சமூக உற்பத்தியில் புகவேண்டுமென்பதில்லை. ஏனெனில் அவர்கள் ஏற்கனவே அங்குதான் உள்ளார்கள். அதாவது தற்கால எதிர்கால தொழிலாளர்களுக்கு உணவும் உடையும் வழங்குவதுடன் வீட்டில் ஓர் ஆரோக்கியமான உளவியல் சூழலை உருவாக்குவதன் மூலம் உதவுகின்றாள். ஆனால் நடை முறையில் இவ்வாறு அர்த்தப்படுவதில்லை. மேற்கூறிய அர்த்தத்தில் பெண்கள் ஆண்களின் உழைப்பை உருவாக்குபவர்கள் எனப் பார்க்கின் அவர்களுக்கு ஊதியம் அளிப்பது வரவேற்கத்தக்கதாகும். அதாவது சமூக உற்பத்தியில் ஈடுபடும் பெண்கள் தொழிற்சாலையில் ஊதியத்திற்காகவும் வீட்டில் ஊதியம் இல்லாமலும் உழைக்க வேண்டியுள்ளது. இதனை முடிவிற்கு கொண்டுவர வீட்டுவேலைகளுக்கு ஊதியம் அளிப்பதே பொருத்தமானது என பெண்ணிலைவாதிகள் கூறுகிறார்கள். இவ்வாறு வீட்டு வேலைகளுக்கு ஊதியம் அளிப்பதால் பெண்கள் பெண் தொழிலாளர் நலன் கருதி அமைப்பாக ஒன்று திரள்வதும் இலகுவாக இருக்கும். வீட்டு வேலைகளின் உழைப்பு இறுதியில் மூலதனத்திற்கே இலாபமாக அமைவதால் அரசே பெண்களுக்கான ஊதியத்தை வழங்க வேண்டும் எனவும் கூறப்படுகின்றது. இது வழங்கப்படாத போது அல்லது கூட்டிக்கேட்க வேண்டி ஏற்படும்போது பெண்கள் வீட்டுவேலைகளை செய்யாது வேலைநிறுத்தம் செய்யலாம். இதன் மூலம் ஆண்களுக்கும் மூலதனத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தலாம் எனவும் கூறுவர். ஆனால் இவ்வாறு பெண்களின் வீட்டுவேலைகளுக்கு ஊதியம் அளிப்பதை வேறு சில பெண்ணிலைவாதிகள் விமர்சிக்கிறார்கள். அதாவது இவ்வாறு ஊதியம் அளிப்பதானது பால்ரீதியான வேலைப்பிரிவினையை ஊக்குவிப்பதுடன் அவர்களை ஒடுக்கவும் செய்யும் என்பதாகும்.

## வீட்டுவேலைக்கு தீர்வாக....

தற்போதைய ஆணாதிக்க குடும்ப அமைப்பு முறை தொடர்ந்து இப்படியே நீடிக்கும் வரை பெண்கள் சமூக உற்பத்தியில் ஈடுபடுவது மட்டும் பெண் விடுதலையை முடிவுக்கு கொண்டு வந்து விடாது. பெண்கள் சமூக உற்பத்தியில் ஈடுபட்டாலும் சரி இல்லாவிட்டாலும் சரி ஒவ்வொரு பெண்ணையும் கட்டுப்பட்டவளாகவே இந்த ஆணாதிக்க குடும்ப அமைப்பு காண்கிறது. இதனை மாற்றுவதாயின் குடும்பளவில் ஆண் பெண்ணுக்கென பாகுபடுத்தப் பட்டு ஒதுக்கப்பட்ட வேலைப் பாகுபாடுகளை முடிவிற்கு கொண்டு வருதல் வேண்டும். அதாவது பெண்ணின் வேலைகள் உற்பத்தி சார்ந்த வேலைகளாக மதிக்கப்பட்டு, அதற்குரிய அந்தஸ்தினை வழங்குதல் வேண்டும். எவ்வாறு கணவனின் ஊதியமளிக்கும் உழைப்பு அந்தஸ்தினை பெறுகின்றதோ அதேபோல் மனைவியின் உழைப்பும் (வீட்டு வேலைகளிலும் கூட) சமூக அந்தஸ்தினை பெறுமானால் குடும்பளவில் காணப்படும் பால் ரீதியான வேலைப்பாகுபாடுகள் அறவே நீக்கப்படும். ஆனால் தற்போதைய முதலாளித்துவ ஆணாதிக்க சமூக அமைப்பு இப்படியே நீடிக்கும் வரை ஆண் உற்பத்தியாளனாகவும், பொது அரங்கிற்குரிய அந்தஸ்தினை உடையவராகவும் (Public work place) பெண் மறு உற்பத்தியாளராகவும், தனிப்பட்ட குடும்பத்திற்குரிய (Private Family) தாழ்அந்தஸ்தினை உடையவராகவும் கருதும் நிலை இருக்கும் வரை பெண்ணொடுக்குமுறைக்கு தீர்வு என்பது இந்த ஆணாதிக்க முதலாளித்துவத்தின் அழிவுடனே சாத்தியப்படும்.

ஆயினும் வெறுமனே முதலாளித்துவத்தின் வீழ்ச்சியும் சமூகமாற்றத்தின் வெற்றியுமான சோசலிஷமும் பெண்ணொடுக்கு முறைக்கு தீர்வினை கொண்டு வந்துவிடாது. ஏனெனில் இந்த சமூகஅமைப்பில் புரையோடிப்போயுள்ள ஆணாதிக்க கருத்தியல்கள் அவ்வளவு இலகுவாக மாற்றத்திற்கு கொண்டு வந்துவிட முடியாதளவு பலமாகவுள்ளது. ஆதலால் சமூகமாற்றம் வேண்டப்படும் பட்சத்தில் மக்களின் மறுபாதியாகவுள்ள பெண்களும் அமைப்பாதலும் ஆயுதந்தாங்குவதும் இன்றியமையாததாகும். இவ்வாறு பெண்கள் அமைப்பாகி சமூகமாற்றத்திற்கான பங்களிப்பை செய்யும் அதேவேளை தம்முடைய தாழ்அந்தஸ்தினை மாற்றுவதற்கான தனியான வேலைத் திட்டத்தையும் கொண்டிருத்தல் வேண்டும். இந்த வேலைத் திட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் வீட்டு வேலைகள் என்ற விடயத்தையும் சேர்த்துக் கொண்டு செயற்படுதல் வேண்டும். இந்த வகையில் அமைப்பாக்கப்பட்ட பெண்கள் பெண் விடுதலையினை தமது குறிக்கோள்களில் ஒன்றாக ஏற்றுக் கொண்டுள்ள புரட்சிகர அமைப்புடன் இணைந்து செயற்படுவதும் இன்றியமையாததாகும். இவ்வாறு புரட்சிகர அமைப்புடன் பெண்கள் சரிநிகராக நின்று முழுமையான பங்களிப்பு செலுத்தி போராடி வெற்றியீட்டும் சமூகமாற்று ஒன்றே பெண்ணொடுக்குமுறைக்கு உண்மையான தீர்வினை வழங்கும் என்றால் மறுப்பதற்கில்லை. ஆனால் வரலாற்று ரீதியாக பெண்கள் சில படிப்பினைகளை பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியமும் உண்டு. அதாவது சோவியப் புரட்சி சீனப் புரட்சி, கியூபப் புரட்சி, வியட்நாமியப் புரட்சி ஆகியவற்றின் போது பெண்கள் முழுமையான பங்களிப்பினை செலுத்தி வீரம்மிகு சாதனைகளை நிலைநாட்டி சமூகமாற்றத்திற்கு வித்திட்டவர்கள் என்பது யாராலும் மறுக்கமுடியாத உண்மையாகும். ஆனால் அங்கு சோசலிசம் வந்த பின்பும்கூட பெண்ணொடுக்குமுறை தொடர்வதேன்? என்ற ஐயம் பெண்களிடையே தோன்றாமலில்லை. ஆயினும், இதனால் பெண்ணொடுக்கு முறை என்பது என்றென்றைக்குமே வெற்றியீட்ட முடியாத ஒன்று என்ற முடிவினை எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. அதற்குமேலாக அமைப்பாக்கப்பட்ட பெண்கள் தம்மால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாடு, நடைமுறை அணுகுமுறைகளில் உள்ள தவறுகளையும், தோல்விகளையும் இனங்கண்டு மிகவும் உறுதியாக கற்றறிதல் அனுபவம் போராடுதல் ஆகியவற்றின் துணையுடன் வரலாற்று ரீதியான படிப்பினைகளை மனதிலிருத்தி மிகுந்த விழிப்புணர்வுடனும் செயலுறுதியுடனும் தம்முடைய சொந்த விடுதலைக்காகவும், புரட்சியின் இலட்சியத்திற்காகவும் போராடி வெற்றியீட்டும் போதே பெண்ணொடுக்கு முறைக்கும் சாவுமணி அடிக்கும் எனலாம். இவ்வாறு வென்றெடுக்கப்படும் சமூகமாற்றே (அரசே) பெண்களால் குடும்ப நிறுவனத்தினுள் மேற்கொள்ளப்படும் வீட்டு வேலைகளுக்கும் தீர்வினை கொண்டு வரும். அதாவது வீட்டு வேலைகளுக்கு மதிப்பளிப்பதும் பெண்களுக்கு உயர் அந்தஸ்தினை வழங்குவதும் சாத்தியப்படும். தனிப்பட்ட அரங்கில் நடைபெறும் உழைப்பை பொது அரங்கிற்கு கொண்டு வருவதாகிய சமூகமயப்படுத்தலை, உயர்மட்ட வளர்ச்சிக்கு எடுத்துச் செல்வதனை அரசு மேற் கொள்ளும்போதே பெண்கள் வீட்டு வேலைகளில் இருந்து விடுவிக்கப்படுவதும் சாத்தியப்படும். இந்தவகையில் குடும்பமானது, ஒரு பொருளாதார அலகாக (Economic unit) இல்லாமல் உணர்ச்சி பூர்வமான அலகாக (Emotional unit) இருக்கும் போதே உண்மையான சமத்துவமான உறவாக நீடிக்க முடியும். இங்கு பெண் தன்னை பயனுள்ள மானுடப் பிறவியாக இனங்காண்பதும் அவளது உழைப்பு சமூதாயத்திற்கு பயன்மிக்கது என்பதை உணர்வதும் மிகவும் அவசியமாகும்.

குறிப்பு - இவ்வாறு நடப்பு குடும்ப நிறுவனத்தையே தொடர்ந்தும் கட்டிக் காப்பது எவ்வளவு தூரம் சாத்தியப்படும் என்பது ஐயத்திற்கிடமானதே. ஏனென்றால் தொடர்ந்து வரும் மாற்றங்களுக்கும் வளர்ச்சிகளுக்கும் ஏற்ப இன்றைய குடும்பநிறுவனம் ஒரு காலகட்டத்தில் கேள்விக்குள்ளாக்கப்படுவதும் தகர்க்கப்படுவதும் நாம் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் நடந்தேயாகும் என்பது வரலாறு காணப்போகும் உண்மையாகும்.

இந்த முழுமையானசமூகமாற்று என்பது நடந்தேற பல வருடங்கள் செல்லலாம். எனவே தற்காலிகத் தீர்வாக முற்போக்காளர்கள் பெண்ணொடுக்கு முறையினை ஏற்றுக்கொள்பவராயின், இந்தக் கணத்தில் இருந்து தமது சொந்த வாழ்கையில் வீட்டுவேலைகளுக்கு தாமும் பங்களிப்பு செலுத்துவதே பொருத்தமானதாகும். இவ்வாறு வீட்டுவேலைகளில் பங்கெடுப்பதால் தாம் பொதுஅரங்கில் பின்நிற்க வேண்டிவரும் என தட்டிக் கழிப்பதெல்லாம் ஆழ வேரூன்றியுள்ள ஆணாதிக்க செயற்பாடே அன்றி வேறில்லை. இவ்வாறு சொந்தவாழ்கையில் செயற் படுத்துப்படாத எந்தக் கருத்துக்களுமே என்றென்றைக்குமே தீர்வு காணப்பட முடியாத ஒன்றேயாகும்.இதனையே பெண்முற்போக்காளர் ஒருவர் முன்வைப்பாரேயானால் அதனை எவ்வாறு அர்த்தப்படுத்துவது?

இ.ராசம்மா - அநாமிகா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



# குழந்தைகளின் தவறுகளுக்கான காரணங்கள் எவை?

தமிழில் : அபிண்

ஒரு குழந்தையை அந்த அடி எவ்வளவு தூரம் தாக்குகிறது என்பது, அந்தக் கணத்தில் பெற்றோருக்கு இருக்கும் மன விரக்தியின் அளவைப் பொறுத்த ஒன்றாகும். மிகவும் மெதுவான அடிகளைக் கூட நாம் ஒப்புக் கொள்வோமானால், நாம் அதிகளவு விரக்தியடைந்திருக்கும் பெற்றோர் தாம் விரும்பும் அளவை விடக் கடினமாகத் தம் பிள்ளைகளை அடிப்பதற்கான வாய்ப்பை அதிகரித்தவர்களாவோம். மெதுவாக அடிப்பதற்கும், துஷ்பிரயோகம் செய்வதற்கும் இடையில் த்டம் மாறிப் போய்விடுவது மிகவும் இலகுவான ஒருவிடயம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

அடித்தலில் தங்கியிருக்கும் பெற்றோர், அடிக்கடி கையிலே கொடுக்கப்படும் ஒரு தட்டு குழந்தையின் இயல்பை நிறுத்தி விடுவதில்லை என்பதை அடிக்கடி அவதானித்திருப்பார்கள். அவர்கள் தமது குழந்தையைத் தாம் போதியளவு கடுமையாக அடிக்கவில்லை என்பதுதான் இந்தப் பிரச்சினைக்குக் காரணம் என்று அவர்கள் நினைக்கக்கூடும். இதனால் அவர்கள் கடுமையாக அடிக்கத் தொடங்குகிறார்கள். அதுவும் சரிவராத போது இன்னும் கோபமடைந்து அதைவிடவும் கடுமையாக அடிக்கிறார்கள். துஷ்பிரயோகத்திற்காகக் குற்றம் சாட்டப்பட்ட பெரும்பாலான பெற்றோர் மிகச் சாதாரணமானவர்களாகவே உள்ளனர். அவர்களின் தட்டு; அடியாக மாறுகிறது. அடி அறையாக மாறி அது பின் பலத்த அடியாக (வெளுவை) யாக மாறுகிறது.

ஆனால் இங்கே முக்கியமானது என்னவென்றால், மெல்லிய அடியாக வழங்கப்படும் உடற் தண்டனை கூட பலத்த உடற்காயத்தை ஏற்படுத்தக் கூடும் என்பதுதான். ஒரு குழந்தையைக் குலுக்குதல், நாடி உடைவதற்கும், மூளை கலங்குவதற்கும், ஏன் இறப்புக்கும் கூடக் காரணமாக அமைந்து விடலாம். ஒரு வளர்ந்த பிள்ளையைக் குலுக்குவது மூளைப் பாதிப்புக்கு ஏதுவாகலாம். குழந்தையின் கன்னப்பகுதியில் அடித்தல் அதற்கு செவிட்டை ஏற்படுத்தக் கூடும். அதன் பிட்டப்பகுதியில் அடித்தலால் அதன் சமநிலை குலைந்து விழக்கூடும். அது தன் தலையை உடைத்துக் கொள்ளக் காரணமாக அமையலாம்.

குழந்தைகள் மிகவும் சிறியவர்கள் என்பதையும், அவர்கள் வளர்ந்தவர்களை விட உடல் ரீதியாகப் பலவீனமானவர்கள் என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். நாம் எம்மைக் கட்டுப்படுத்த வேண்டும். குழந்தைகளைக் காயத்திலிருந்து பாதுகாப்பது எமது தேவை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அண்மைக் காலமாக, குழந்தைகள் தமது உடல் சம்பந்தமான கட்டுப்பாடு பற்றிய ஒரு உணர்வைக் கொண்டிருப்பது முக்கியமானது என்று நாம் உணரத் தலைப்பட்டிருக்கிறோம்.

குழந்தைகளது உடல் மதிக்கப்படவும் பாதுகாக்கப்படவும் வேண்டும் என்பதை அவர்களுக்கு நாம் போதிப்போமானால், அவர்கள் மிகவும் சிறப்பாகத் தம்மை உடலியல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளக் கூடியவர்களாக வளர்வார்கள். தாம் தாக்குதலுக்குள்ளாகும் போது அவர்கள் தமது உடம்பைப் பாதுகாக்கலாம் என்றோ, அல்லது தனது உடலுக்கு நடப்பதை தாம் கட்டுப்படுத்த முடியும் என்றோ அவர்கள் உணரமுடியாது போய் விடுகிறது. அவர்களது 'தம்மைப் பற்றிய' உணர்வு பாதிப்புக்குள்ளாக்கப்படுகிறது.

### ஆக, இதற்காக நான் என்ன செய்யலாம்?

அடித்தலுக்குப்பதிலான பல மாற்றீடுகள் இருக்கின்றன. தவறான நடத்தைக்காகப் பின்னர் தண்டிப்பதை விட, அவ்வாறான நடத்தைகள் ஏற்படாமல் தவிர்ப்பது வரவேற்கத்தக்கதாகும். ஆனால் அப்படி ஒரு தவறான நடத்தையினைக் காணும் போது நீங்கள் உங்கள் கோபத்தைக் கட்டுப்படுத்தி, அந்தப் பிள்ளை எப்படி நடக்கவேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம் என்பதைப் போதிக்கும் விதத்தில் நாம் அச்சம்பவத்தை எதிர்கொள்ள வேண்டும்.

### குழந்தைகளுடன்....

இப்போது தான் ஊர்ந்து செல்லப் பழகிய குழந்தைகள் இந்த உலகம் முழுவதுமே தமக்குக் கிடைத்திருப்பதாகக் காண்கின்றன. ஒரு வயதுடைய தீவிர 'செயற்பாட்டாளர்' ஒருவருடன் சமாளிப்பது என்பது இலேசான காரியம் அல்ல. உண்மையில் தாம் தம்மைச் சூழ இருக்கும் பொருட்களை ஆராய்வதினூடாக அவை பற்றிக் கற்றுக் கொள்வதற்குத் தாம் அனுமதிக்கப் படுகிறோமா இல்லையா என்பது அவர்களுக்கு ஒரு முக்கியமான விடயமாகும்.

உங்கள் உணர்ச்சி வேகத்தைக் கட்டுப் படுத்துங்கள். நீங்கள் விரக்தியாக அல்லது எரிச்சலாக இருக்கும்போது குழந்தையைத் தொட்டிலுக்குள்ளே விட்டுவிட்டு நீங்கள் அமைதியாகும் வரை அறையை விட்டு வெளியேறி விடுங்கள்.

குழந்தைகள் அழுவதன் மூலமாகத் தான் அது தொடர்பாடலைச் செய்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அது அழுவதெல்லாம் தனது தேவையொன்றை வெளிப்படுத்தவே அன்றி எம்மைக் கஷ்டப்படுத்தவல்ல. குழந்தை அழும் போது அந்த அழுகைக்கு நாம் காது கொடுக்கவேண்டும். அப்போது தான் அது தனது தேவைகளைப் பெற்றுக் கொள்ளுவதற்காக உங்களை நம்பத் தொடங்கும்.

### சிறுபிள்ளைகள், ஆரம்பப்பாடசாலை மாணவர்களுடன்...

குழந்தைகள் நடக்கும் பருவத்துக்கு வரும்போது, அவர்கள் மேலும் மேலும் சுதந்திரமானவர்களாகிறார்கள். அவர்கள் அடிக்கடி தம் பெற்றோர் எதிர்பார்க்கும் விதத்தில் வேலைகளைச் செய்ய மறுக்கிறார்கள். பெற்றோர் எதிர்பார்க்கும் அளவுக்கு உணவுண்ண மறுக்கிறார்கள். பெற்றோர் விரும்பும் இடத்திற்குப் போக மறுக்கிறார்கள். சிலவேளைகளில் இத்தகைய நடவடிக்கைகள் ஒத்துப்போகாத, சொன்னபடி கேட்காத இயல்பாகத் தோன்றக் கூடும். ஆனால் உண்மை அது அல்ல. இது மிகவும் சாதாரணமான, ஒரு சுதந்திரமான அடையாளத்தைத் தனக்கு உருவாக்கிக்கொள்வதற்கான நடவடிக்கையில் ஒரு முக்கியமான பகுதி தான்.

உங்கள் வீடு குழந்தைகட்குப் பாதகமற்றதாக ஒழுங்காக்கப்பட வேண்டும். தொலைக்காட்சி, வீடியோ இயக்கி வீட்டில் வைக்கப்பட்டிருக்கும் இடம் எட்டாததாக இருந்தால் குழந்தைகளால் அவற்றைத் தொட முடியாது.

* பாத்திரங்களின் கைபிடிகளை மேசையின் நடுப்பகுதியை நோக்கி தள்ளி வைத்தல்.
* உடையக் கூடிய பொருட்களைப் பூட்டிவைத்தல் அல்லது உயரமான தட்டுகளில் அடுக்கி வைத்தல்.
* நச்சுத்தனமான, ஆபத்தான பொருட்களைப் பூட்டிவைத்தல்.
* மின்சார சொருகித் துவாரங்களை மூடிவிடல்.

### உங்கள் குழந்தைக்குத் தெரிவுகளை வழங்குங்கள்:

குழந்தையிடம், இதை அல்லது அதை நீங்கள் சாப்பிடலாம்; இரண்டில் ஒன்றைத் தெரிவு செய்யுங்கள் என்று கூறுதல். இது குழந்தை சுதந்திரமாகத் தனது தெரிவைச் செய்துகொள்ளப் பயிற்றுவிக்கும் அதேவேளை மறுப்பதற்கான வாய்ப்பையும் இல்லாமல் செய்கிறது!

குழந்தைக்கு அலுப்பு ஏற்படாத விதத்தில் ஏதாவது செயற்பாடுகளை வழங்க வேண்டும். விசேடமாக நீண்ட நேரமாகக் காத்திருக்க வேண்டிய ஒரு சூழலில் இது அவசியமாகும். வைத்தியருக்காகக் காத்திருத்தலின்போது, பயணம் செய்யும்போது, விமான நிலையங்களில் இருக்கும் போதெல்லாம் இந்நிலைமை ஏற்படும்.

குழந்தைகளை நீண்ட நேரம் தீவிரமாக ஈர்த்து வைத்திருக்கக் கூடிய பொருட்களில் சில: கடதாசித்தாள், கட்டிகள், கரும்பலகை, புத்தகங்கள், பொம்மை வீடுகள், விளையாட்டுக்கார்கள், விளையாட்டுக்கள். குழந்தைக்கு எதில் நாட்டம் இருக்கிறது என்று தெரிந்து கொண்டு அது அதற்குக் கிடைப்பதற்கு நாம் வகை செய்ய வேண்டும்.

### மாறுதல் நேரத்தைத் திட்டமிடல்

பெரும்பாலான பெற்றோர்கள் குழந்தைகளை ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு மாற்றுவதில் பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். குழந்தைகள் தமது வேலைகளில் திடீர் மாற்றம் ஏற்படுவதையோ, தமது வேலை குழப்பப்படுவதையோ விரும்புவதில்லை. ஆனால் பிரச்சினைகளைத் தவிர்க்கும் விதத்தில் செயற்பட முடியும். குழந்தைக்கு என்ன நடக்கப் போகிறது என்று குழந்தைக்குப்புரிய வைப்பதன் மூலம் இது சாத்தியமாகும்.

இப்போது தான் தவழத்தொடங்கியுள்ள குழந்தைகள் திடீரென்று இந்த முழு உலகமுமே தமக்காகத்தான் இருப்பதாக உணர்கின்றன. ஒரு வயதுக் குழந்தை ஒன்றின் செயற்பாடுகளைச் சமாளிப்பது என்பது ஒன்றும் இலகுவான விடயம் அல்ல. ஆனால் அதேவேளை அவர்கள் தமது சூழலில் உள்ள பொருட்களை ஆராய நாம் அனுமதிக்க வேண்டும் என்பது முக்கியமானதாகும். அப்போதுதான் அவர்களுக்கு அவை பற்றிக் கற்றுக் கொள்ள முடிகிறது.

### குழந்தைக்குச் சாதகமான ஒரு சூழலை உருவாக்குதல்:

உங்கள் குழந்தைகள் தம்மைச் சூழவுள்ள பொருட்களை, நீங்கள் அதுபற்றி கவலைப்படாத விதத்தில் ஆராயக் கூடியதாக இருக்க வேண்டும்.

இதற்காக நாம் உடைக்கப்படக்கூடிய, கூர்மையான, விழக்கூடிய மற்றும் மின்சாரப் பொருட்களை அகற்றிவிட வேண்டும்.

* எல்லா மின்சார சொருகித் துவாரங்களையும் (Plug Outlets) மூடி விட வேண்டும்.
* மின்சார வயர்களைக் குழந்தைக்கு எட்டாத இடத்தில் வைத்துவிட வேண்டும்.
* கத்திகள் நச்சுப் பொருட்கள் என்பவை உள்ள அலுமாரிகளைப் பூட்டி வைத்திருத்தல் வேண்டும்.

குழந்தைகள் ஆபத்தான பொருட்களைத் தொடும்போது அவற்றின் கைகளைத் தட்டிவிடாதீர்கள். பதிலாகக் கைகளைப் பிடியுங்கள். இது காயமேற்படுதலை மிகவும் வினைத்திறனுள்ள விதத்தில் தவிர்க்க உதவும்.

ஆபத்தினை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கையிலிருந்து குழந்தையின் கவனத்தை ஈர்த்தல் வேண்டும். ஒரு குழந்தையை இன்னொரு நடவடிக்கையை நோக்கிக் கவர்வது இலகுவானதாகும். நாம் செய்யும் செயல் குழந்தைக்கு ஆர்வமூட்டுவதாக இருப்பின் அதன் கவனம் இலகுவில் திருப்பப் பட முடியும்.

ஏன் உங்கள் குழந்தை தவறாக நடந்து கொள்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். உதாரணமாகச் சின்னப்பிள்ளைகளை இலகுவில் பயமுறுத்திவிடலாம். சிலவேளைகளில் அவர்கள் படுக்கை அறைக்குப்போகத் தயங்குவார்கள். அங்கே ஒரு பூதம் இருப்பதாக அவர்கள் நம்புவதால், செல்ல மறுக்கக் கூடும். குழந்தை பயந்திருக்கலாம், அதனால் தான் அது போக மறுக்கிறது என்ற சாத்தியக்கூறும் உள்ளது என்று எமக்குத் தெரிந்திருக்க வேண்டும். நீங்கள் குழந்தையைப் படுக்க வைக்க முன் தலையணை, கட்டில் மூலை, போர்வை மற்றும் கட்டிலின் கீழ் எல்லாம் பார்த்து எதுவும் இல்லை என்று உறுதி செய்வது போன்ற ஒரு நடவடிக்கை மூலமாகக் குழந்தையின் பயத்தைப் போக்க முடியும்.

குழந்தைகள் களைத்துப்போய் இருக்கையில், சுகயீனமாக இருக்கையில், பசியாக இருக்கையில், அதிகமாக திகைப்புக்குள்ளாகியிருக்கையில் எதையாவது பற்றிணுக் கவலைப் பட்டுக் கொண்டிருக்கையில் தவறாக நடந்து கொள்ளுவார்கள். இதற்கான காரணத்தைப் புரிந்து கொண்டு உடனடியாகத் தீர்வுகாண உதவ வேண்டும்.

### உங்கள் ஏமாற்றத்தை அல்லது அச்சத்தைக் காட்டல்:

உங்கள் குழந்தை வீதிக்கு ஓடினால் அதை அடிப்பதற்குப் பதில் பிடியுங்கள். அதன் கணமட்டத்திற்குக் குந்திக் கொண்டு, அதனை நேராகப்பார்த்தபடி, நீங்கள் எவ்வளவு பயந்து விட்டீர்கள் என்பதைத் தெரியப் படுத்துங்கள். இது அடிப்பதால் வருவது போன்ற ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகின்ற அதேநேரம், அதை விடவும் அதிகமான விடயங்களையும் கொண்டு செல்கிறது.

குழந்தை உங்களுக்குச் சந்தோசமூட்டும் ஏதாவது வேலையைச் செய்தால் உடனே உங்கள் சந்தோசத்தைக் காட்டுங்கள். அவர்கள் தமது பெற்றோர்களது உறுதிப்படுத்தலை எதிர்பார்க்கிறார்கள். அத்துடன் அதைப் பெற்றுக் கொள்ள அவசியமானது எது என்று அவர்கள் அறியவும் வேண்டும்.

உங்கள் குழந்தை மீது கவனம் செலுத்துங்கள். அதனுடன் விளையாடுவதால், தூக்கி வைத்திருப்பதால், படித்துக் காட்டுவதால், பேசிக் கொண்டிருப்பதால் எல்லாம் குழந்தைகள் பழுதாகிப் போய்விடுவதில்லை. குழந்தைகளுக்கு தம்மைக் குறித்து தமது பெற்றோர்கள் அக்கறையாக இருக்கிறார்கள் என்று தெரிந்திருக்க வேண்டும்...

வரும்..

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பேசப்படாத ஞாபகங்கள் :



## சனாதனனின் ஓவியப் பரப்பு பற்றிய அறிமுகம்

குரு.விநாயக சுப்பிரமணியன்



காணாமல் போதல்

1980களில் குறிப்பாக 1983ஜுலைக் குப்பின் முன்னெப்போதும் இல்லாதள விற்கு இலங்கைத் தீவில், தமிழர்கள் இருத்தல் நெருக்கடிக்குள்ளாகினர். அவர்க ளது நகரங்களும், கிராமங்களும் காணா மற் போயின. வயலிலும், தெருவிலும், வீட்டிலும், கடலிலும் அவர்கள் கொல்லப் பட்டனர்; தேசங்களின் தாழ்வாரங்களில் அகதிகளாயினர். வாழ்க்கைப்பெறுமா னங்கள் தலை கீழாகப் புரண்டன. தமிழர்க ளைப் பொறுத்த வரை போராட்டம் தவிர்க் கப்பட முடியாத தலைவிதி ஆகியது.

இதுவரைகால வாழ்க்கையின் லயம் திட்டவட்டமாக மாறியது. மரணத்திற்கு நடுவில் நிர்ப்பந்திக்கப்பட்ட வாழ்க்கை யின், உடன் நிகழ்காலத்துக் கதியினைக் காவவும், வெளியீடு செய்யவும் மரபார்ந்த அல்லது அதுவரை பின்பற்றப்பட்ட கலைவடிவங்களின் சொல்லும் முறை போதாமையோடு இருந்தது. ஒவ்வொரு கலைவடிவமும், தன் சமகாலத்திற்கான வலிமையான தொடர்பாடல் முறையை அல்லது மொழியைக் கண்டுபிடிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகின.

இலக்கியத்தில் 'புதுக்கவிதையின்' முதன்மை, ஆற்றுகைக் கலைகளில் 'நவீன நாடகத்தின்' பரவலாக்கம், கட்புலக் கலைகளில் 'நவீன ஓவியத்தின்' எழுச்சி என்பனவெல்லாம் மேற்படி பின்புலத்தில் நிகழ்ந்த முதன்மைப்பாடுகள் தாம்.

இக்காலகட்டத்தில் ஈழத் தமிழ்ப்பண்பாட் டில் முதன்மையுற்ற இளைஞர் முதன்மைப் பாடு (Youth Promiance) அரசியல் போராட்டத்தில் மட்டுமன்றி கலையிலும் பிரதிபலித்தது. சனாதனன் '1987ன் அமைதிக் காலத்தைத்' தொடர்ந்து பரவலான அறிமுகத்தைப் பெற்ற மேற்படி பரம்பரையைச் சேர்ந்த ஒருவர். டெல்கிப் பல்கலைக்கழகத்தில் நுண்கலையில் (ஓவியம்) பட்டம் (B.FA.) பெற்றவர். தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழ நுண்கலைத்துறையில் உதவி விரிவுரை யாளராகப் பணியாற்றி வருகிறார்.

இக்கட்டுரை 1980 களிற்குப் பிற்பட்ட (1990களைச் சேர்ந்த) அவரது ஓவியப் புலம் சார்ந்த வெளிப்பாடுகள் மீதாகவே தன் பார்வையை முன்வைக்கிறது.

2

சனாதனனின் மனிதவுருக்கள் மிகவும் வலிமையானவை. வார்ந்தெடுக்கப்பட் டது போன்ற திட்டவட்டமான தன்மையு டையவை. ஆனால் அவற்றிற்குத் தலைக ளில்லை; அவற்றின் தலைகள் வெட்டி வீசப்பட்டு விட்டன. (இந்த Headless தொடருக்கு முந்திய Poet தொடரில் தலையாளிகள் உண்டாயினும் தலைகள் விடைபெறுதற்கான முன்னாயத்தங்கள் அங்கேயே உண்டு. உதாரணம் Inner Court Yard.) பலியிடப்படுகின்ற தமிழருக்கு தெருத்தெருவாய்ச் சோதனைச் சாவடிகள் தோறும் மந்தையாய் நடத்தப்படுகின்ற, வெற்றிக் கூச்சல்களால் அவமதிக்கப் படுகின்ற, தாய்நிலத்தில் வாழ்கின்ற அவர்களுக்கு, தேசங்களின் தாழ்வாரங் களில், பெயரறியாத் தெருக்களில் அன்னியராகிப் போன தமிழருக்கு முகம் எவ்வாறிருக்க முடியும்? அடையாள அட்டைகள் ஆகிப்போன தமிழர்கள் முகத்தோடு இருப்பதென்பது சுத்த அபத்தமாகத்தான் இருக்க முடியும்!



குருதியும், சிலுவையும்,
ஊளையிடும் நாயும்,
நெருப்பும்,
கல்லறைகளும்,
தலையிலிகளும்,
அம்மாக்களின் துயரமும்,
வீடுகளும்,
'சமாதானத்தின்
பெயரால்'
ஒடுக்கப்படும்
தமிழரின் வாழ்வைப்
பேசுகின்றன.

இன்னொரு வகையில், சனாதனன் தலைக்குப் பதிலீடுகளை (Substitutes) விட்டு வைத்திருக்கிறார். 'Madona and the Child' என்ற ஓவியத்தில் குருசுமரம், 'Home' என்ற ஓவியத்தில் கொழுந்து விட்டெறியும் நெருப்பு, Sons of the Soilsல் காற்றாடும் சிவப்புக்கொடி, இரந்து கும்பிடும் கைகள், Unspoken Memoriesல் நெருப்பிலிடப்பட்ட வீடுகள் போன்றன முகமாகியுள்ளன.

இந்த உருவங்களின் திண்மை திட்ட வட்டமான தூரிகையின் அசைவுகளாலும், உடலில் ஏற்படும் மேடுபள்ளங்களாலும், தோலில் ஏற்படும் நிறத்தின் தொனிநிலை களாலும் கொண்டு வரப்படுகின்றன. அவரது உருவங்களுக்கு ஆடையில்லை; அவை நிர்வாணிகள். பொத்தி மறைக்க அவற்றிடம் எதுவுமில்லை. சந்திக்குச் சந்தி எல்லாவற்றையும் அவிழ்த்துக் காட்டும் தமிழர்களுக்கு அந்தரங்கமாகவும், இரகசியமாகவும் வைத்துக் கொள்ள என்ன இருக்கிறது? பிறந்தமேனி ஆக்கப் பட்டு, அடையாளம் அழிக்கப்பட்ட தமிழர்கள் அவ்வாறு தான் இருக்க முடியும்.

அவர்கள் மனிதர்கள் கூட இல்லை. பாறைகள் - (Jaffna - I). பாறிச்சரிந்து வேர் நீட்டிக் கிடக்கும் மரங்கள். தவளை அல்லது ஏதோவொரு ஊரும் ஜந்து போல மாறிவிட்டவர்கள் - (Inner search of identity - I). ஆடை போல கொடியில் காயவிடப் பட்டவர்கள். Inner search of identity - IIல் கொய்தெறியப்பட்ட தலையொன்று வானத்திலிருந்து இந்த முண்ட மனிதர் களை எட்டிப் பார்க்கிறது. பொதுவாகவே இந்த வகைப்பட்ட Surrealistic தன்மையான படிம உருவாக்கங்களை இவற்றில் அவதானிக்க முடிகிறது.

சனாதனனின் மனிதர்கள் பச்சை - நிறமான வர்கள்; நீலம், மஞ்சள், கபிலம், ஊதா எனப் பலவர்ணங்களில் பிரசன்னமானவர் கள், நிறப்பிரயோகத்தில் எல்லையற்ற சுதந்திரத்தை அவர் எடுத்துக்கொள்கிறார். அவரது Poet தொடரில் மஞ்சள், மஞ்சளின் தொனி நிலைகளிலேயே அவர் அதிக பயணஞ் செய்கிறார். Headless தொடரில் அந்த கவித்துவமான மஞ்சள் குறைந்து முரண்படும் பலவர்ணங்களின் திடீர்ச் சாலை விபத்துக்கள் போன்ற வர்ணச் சந்திப்புகள் நிகழ்கின்றன. அதிகபட்சம் இந்தத்தொடர் வெப்பு வர்ணங்களுடன் உறவு வைத்துள்ளது. சில வேளை அவை அரூப ஓவிய முன்னோடிகளின் நிறங் களை நினைக்க வைக்கின்றன. இதே நேரம் ஒளிரும் வர்ணவிளைவுகளையும் (Radium Colour effects) அவர் ஏற்படுத்துகிறார்.

அவரது மனிதர்கள் மட்டுமல்ல, அனைத்து இயற்கைப் பொருட்களும் தமது இயல்பு வர்ணத்திலிருந்து பாய்ந்து வெளியேறி, வேறு வர்ணங்களைக் காவி நிற்கின்றன. நீலநிறமண், மஞ்சள், வானம், மரம் என்பனவெல்லாம் அவரது ஓவிய வெளியில் உயிர்வாழ்கின்றன.

பல பொருட்களுக்கு இரட்டை அல்லது பல்வடிவ இடை மாறு நிலைத்தோற்றங்கள் உள்ளன. Home ஓவியத்திலுள்ள மரம் - எரியும் தீயின் கற்றையாகக் காணப்படுகி றது. நிலம் குளம் போலவும் ஆறு போல வும் நிற்கிறது. ஒன்றால் பலவற்றை அருட்டி விடும் இந்த நேரில் தன்மைகள் ஓவியங்களிலே அதிகமாகவுள்ளன.

உருவமற்ற அவரது ஓவியவெளி நிலவுருக்களாலானது. இந்த நிலங்கள் முக்கியமானவை. அவை உணர்ச்சிக் கொதிப்பின் தூரிகை நகர்வால் ஆனவை. அதில் தூரிகை நகர்வின் திசைகள் சிலவேளை ஒன்றுக்கொன்று முரணான திசையில் கூடப்பயணஞ் செய்கின்றன. அவை நிலத்திட்டுப்போல, தனித்தீவு போல (குருதி கொப்பளிக்கும், தீவுகளின் இராஜகுமாரி?) குளம்போல நகரும் ஆறு போல, காற்றுவீசும் திடல்வெளி போல வெல்லாம் வெளிப்பட்டுள்ளது. Inner search of indentity - Iல் குருதியாற்றின் நடுவில் இருக்கும் பச்சைநிறக் குட்டைக் குள் இருந்து ஒரு மனிதன் தனது தலையைக் கண்டெடுக்கிறான். Homeல் நிலம், குளம் போலாகியிருக்கிறது. Inner search of indetity - IIல் கடும்பச்சையான திடலின் கீழ்க்கோடியில் தீ சூழ்ந்தெரியும் சுடுநீர்க்குளத்துள் மனிதன் தீய்கிறான். வான்கோவை ஓரளவிற்கு நினைவூட்டு கின்ற தூரிகை அசைவுகள் இவற்றில் எதிர்ப்படுகின்றன.

வானமும், நிலமும் தனித்தெடுக்கப் படுகின்றன. அதேநேரம் இரண்டும் ஒன்றாகியுமுள்ளன. தொடுவானத்திற்கு அப்பாலிருந்து ஜனிக்கின்ற அவரது நிலங்கள் ஓவிய வெளியின் பெரும்ப ரப்பை தம்வசப்படுத்தியுள்ளன. அவரது பல ஓவியங்களில் வானத்தை நோக்கிப் பயணஞ் செய்யும் தெருக்கள் உள்ளன. முடிவின்மை நோக்கிய நெடிய பயணத் தின் குறிகாட்டிகளாக அவை இடம்பெறு கின்றன போலும். சிலவேளை மண்ணின் வெளிப்பாடுகள், வானத்தினுள்ளும் போய்ப்படர்கின்றன. Homeல் நெருப்பு வானத்தில் படர்ந்து எரிகிறது. அவரது Missing, Day under seige என்பவற்றி லெல்லாம் சூரியன் துண்டுபட்டு வீழ்கிறது. Poet தொடரிலுள்ள Studing Historyல் பிறை நிலவு வானத்தில் நிற்கிறது. வானத்திற்கும், பூமிக்குமிடையான ஒரு பயணம் ஓவிய வெளிதோறும் சதா நிகழ்கிறது. பொதுவாக அவரது ஓவியங்களின் ஸ்தாயிபாவம் சார்ந்த சஞ்சாரி பாவங்கள் பல்வகைப் பிரயாணங்களை ஓவியப் பரப்பில் மேற்கொண்டுள்ளன.

ஒவ்வொரு காலமும், ஒவ்வொரு பண்பா டும், ஒவ்வொரு மனிதனும் தமக்கான அசைவுக் கூட்டத்தை வைத்துள்ளனர். சனாதனனின் மனிதர்கள் தமது உடன் நிகழ்கால வாழ்வு சார்ந்த அசைவுகளா லும், லயத்தினாலும் உருவாகியுள்ளனர். மண்டியிட்டுள்ளார்கள்; முழந்தாளிட்டு தமது அடையாளத்தைத்தேடுகிறார்கள்; வீட்டை முதுகில் காவியபடி விரைவாக நகருகிறார்கள்; தீயை அணைத்தபடியும், நெருப்பு நீருள் தீய்ந்தபடியும், நாய் முகர மரணித்தும், வேரோடி நீண்ட பாரச் சிலுவையை இழுத்துக் கொண்டும் நடக்கி றார்கள். அவை எவ்வாறு இருந்தாலும் அவற்றுள் உள்ளுறைந்த உறுதிப்பாடு காணப்படுகிறது. அது மிகத்தெளிவானது. கண்ணீருள்ளும், காயத்துள்ளும் மரணத் துள்ளும் பயணம் செய்து இறுகிய உள்ளு றைந்த எதையும் எதிர்கொள்ள எக்கண மும் சித்தமான மனிதர்களாக அவர்கள் உள்ளார்கள்.

அவரது சமீபத்திய ஓவியங்களில் நான்கு கைகள் உடைய தலையிலிகள் அல்லது அடையாள அட்டைக்காரர்கள் வருகிறார் கள். இந்த நான்கு கைகள் என்ற வெளிப் பாட்டு முறையை அவர் இந்துக் கடவுளர் களிடம் இருந்து பெற்றுக்கொள்கிறார். Jaffna - I லும் இவ்வாறு இந்து மதம் சார்ந்த திட்டவட்டமான மூலக்கூறொன்றின் எடுப்பனவைக் காணலாம். தாயகம் விடுத்து, தேசாந்திரிகளாகப்பயணம் புறப்படுகின்ற தமிழர்களைக்குறிகாட்ட பறக்கும் தேவலோக உயிரினங்களின் வடிவத்தை, தன் தேவைக்கேற்ப தலையை வீசிவிட்டு எடுத்தாள்கிறார். அவற்றின் கால்கள் செட்டைகள் இன்றியே பறத்தலை வெளியீடு செய்கின்றன.

ஆழம் காட்டுவதில் அதிக கவனம் அவர் எடுப்பதில்லை, இதனால் ஓரளவு தட்டைத் தன்மை உண்டு. ஆனால் அவரது கருப் பொருள், வரைதல்பாணி ஆகியன ஆழங் காட்டலில் இறங்கினால் இன்னும் மேலதிக பரிமாணங்களை திறந்து விடக்கூடியன என நினைக்கிறேன். இதே போல வர்ணத் தின் தொனிநிலைகள் பற்றிய அக்கறை மேற்பரப்பாக்கத்தில் (Texture) அவரால் எடுக்கப்படாதிருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

1990ன் ஆரம்ப வருடத்தில் செய்யப்பட்ட Poet தொடரிலுள்ள மென்னய உணர்வு சார்ந்த தன்மை (Sentimented Fliaver), Headless தொடரில் இல்லை. அங்குள்ளதான ஏக்கமும், தனிமையுணர்வும் இங்குண்டாயினும் இங்கே நசிக்கப்படும் மனிதனின் தூரிகையே நகர்கிறது. குருதியும், சிலுவையும், ஊளையிடும் நாயும், நெருப்பும், கல்லறைகளும், தலையிலிகளும், அம்மாக்களின் துயரமும் (Madonas), வீடுகளும் 'சமாதானத்தின் பெயரால்' ஒடுக்கப்படும் தமிழரின் வாழ்வினைப் பேசுகின்றன. ஆனால் அவரிடம் நம்பிக்கையுண்டு. குருதியாற்றில் கைவிளக்கோடு தலையை தேடும் மனிதர்களும், சிலுவைக் காட்டில் அடையாளம் தேடி நடக்கும் மனிதர்களும் அவரிடமுண்டு. எல்லாவற்றுள்ளும் அவ ரது வண்ணத்துப்பூச்சிகளுக்கான வீடுக ளும் (Home For my Butter Flies), வர்ணமீன் களும் (Colour Fish) உயிர்வாழ வேண்டும்; அவை உயிர் வாழவே செய்கின்றன.



அடையாள அட்டைகள்
ஆகிப்போன
தமிழர்கள்
முகத்தோடு
இருப்பதென்பது
சுத்த
அபத்தமாகத்தான்
இருக்க முடியும்


இந்த Headless தொடர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான இராணுவ நடவ டிக்கையின் போது இடம் பெற்ற யாழ்ப் பாண வெளியேற்ற காலத்தில் ஆரம்பித்து இன்று வரைக்கும் தொடருகின்றது. தமிழர்கள் மீதான ஒடுக்குமுறையை ஓவியத்தில் கணிசமானளவு பதிந்தவர் களுள் சனாதனன் மிகவும் முக்கியமான வர். தம்முள் முழுமையுறும் episodes உடைய கதைசொல்லும் (Story telling) பாணியில் அவை பெருமளவிற்கு வெளிப் படுகின்றன.

சந்தேகமில்லாமல் இளைய தலைமுறை யில் எம்மிடம் வந்தேறிய மிக அருந்தலான ஓவியர்களுள் சனாதனனும் ஒருவர். அவரது ஓவியங்களுள் ஊடுபாவி நிற்கும் அடையாளம் பற்றிய தேடுதலே, அவரது அடையாளமாகும். வாழுதல் என்பது அடையாளம் பற்றிய இடைவிடாத தேடுதலாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





எனக்கும் அங்கிளுக்கும் நல்ல வெறி.

'அங்கிள் ரோட்டு நீட்டுக்கு ஆடி ஆடி பாட்டு படிச்சுக்கொண்டு வந்தார். ஆனால் நான் 'ஸ்ரெடி'. நேரம் இப்ப இரவு பன்னிரெண்டு மணியிருக்கும். என்ர 'றூமு'க்கு போக இன்னும் பத்து நிமிசம் நடக்க வேணும்.

இப்ப எங்களுக்கு குறுக்கால இரண்டு வெள்ளைக்கார பொம்பிள்ப்பிள்ளையள் வந்திச்சினம். வந்து எங்களட்ட சிகரெட் கேட்டிச்சினம். அங்கிள் ரெண்டு சிகரெட் குடுத்தேர். அவையள் நாலுதரம் ''மெசி'' சொல்லிச்சினம். அதில ஒரு பிள்ளை ரெண்டு கையையும் நெஞ்சில வைச்சு நிமிர்ந்து நிண்டு கும்பிட்டு மெசி சொல்லிச்சு. அங்கிள் இன்னம் ரெண்டு சிகரெட் குடுத்தேர்.

வெறி எண்டு இல்ல... அதுகள் கும்பிட்டு போட்டுதுகள் எண்டு இல்ல... அதுகள் பொம்பிளப்பிள்ளையள் எண்டு இல்ல... அங்கிளின்ர குணமே இதுதான். ஆருக்கும் ஒரு பிரச்சினையெண்டா அங்கிள் துடிச்சுப் போயிடுவேர். உயிரைக் குடுத்து உதவி செய்யக்கூடிய மனுசன்.

நான் முன்னம் முன்னம் ரெஸ்ரோடண்டுக்கு வேலைக்கு போறன். அங்க அங்கிளோட சேர்த்து எல்லாமா நாலு தமிழ் ஆக்கள் வேலை செய்யினம். குசினிக்குள்ள பெரியவனும் ஒரு தமிழ் பெடியன்தான். வெறும் விசரன்... தேவையில்லாம எங்களை எல்லாம் தூசணத்தால ஏசுவான். போன அண்டு பின்னேரமே எனக்கு ஏச்சு விழுந்தது.

எனக்கு கை கால் எல்லாம் நடுங்குது. 'கண்ணெல்லாம் கலங்கிப்போச்சு. வேலையை விட்டிட்டு போவமோ எண்டு கூட யோசிச்சன். எனக்கு பக்கத்தில் நிண்டு கிழங்கு சீவிக்கொண்டிருந்த அங்கிள் முன்னுக்கு கூட்டிக்கொண்டு போய் ஒரு கஃபே அடிச்சுத் தந்தேர். அப்பதான் அவரை வடிவா கவனிச்சன். நாப்பத்தைஞ்சு, அம்பது வயசிருக்கும். வலு ஸ்மாட்டான ஆள்.

''கோப்பிய குடியும்'' எண்டு சொல்லிப் போட்டு என்னைக் கடகடவெண்டு இன்ரவியூ செய்ய வெளிக்கிட்டார்.

''தம்பி சிலோனில எவ்விடம்?''

''மண்டைதீவு' எண்டு சொன்னன். எனக்குத் தெரியும். அடுத்த கேள்வியா அப்ப மண்டதீவெண்டா சபாரத்தினம் போஸ்மாஸ்டரையோ இல்லாட்டி பொன்ராசா சம்மாட்டியையோ, இல்லாட்டி பாம்பு பரியாரியையோ இப்பிடி இன்ன இன்ன ஆக்களை கேப்பினம். ஆனால் இவர் வேற கேள்வி கேட்டார்.

''அம்மா அப்பா எல்லாம் எங்க?''
''இப்ப பூநகரியில இருக்கினம்''
''இஞ்ச வந்து கன காலமோ?''
''நாலு வரியம்''

''முந்தி எங்க வேலை செய்தனீர்?''
''முந்தி பேப்பர் போடுற வேலை செய்தனான். பிறகு கனகாலம் வேலையில்லாம இருந்து இப்பதான் வேலை கிடைச்சிருக்கு''

எனக்கு குரல் எல்லாம் நடுங்குது ''நெர்வஸ்'' ஆயிற்றன். ஏனெண்டா இந்த வேலையிலயும் கனநாளைக்கு நிண்டு பிடிக்க ஏலாது போல கிடந்தது.

அவர் என்ர கையைப் பிடிச்சு அனுசரனையா சிரிச்சேர். ''தம்பி இஞ்ச கொஞ்ச நாளைக்கு வேலை கஷ்டமாதானிருக்கும். பல்லைக் கடிச்சுக் கொண்டு நில்லும். பிறகு பழகிப் போயிரும்'' எண்டேர். அண்டைக்கு வேலை முடிய நானும் அவரும் தான் ரெயின் பிடிக்க நடந்து வந்தனாங்கள். வாற வழியில ஒரு அரைப்போத்தல் விஸ்கி வேண்டினேர். ரோட்டிலையே பச்சையா குடிக்கத் தொடங்கிற்றேர். என்னையும் ''குடிக்கிறீரோ'' எண்டு கேட்டேர். நான் குடிக்கிறது இல்ல எண்டு பொய் சொல்லிப்போட்டன். நானும் நல்லாக் குடிப்பன். மொஸ்கோவில நிக்கேக்க பழகினது. ஆனால் வயசுக்கு மூத்த ஆளொட குடிக்கிறது மரியாதை இல்லையெண்டு வேணாம் எண்டிட்டன்.

இது நடந்து இப்ப ரெண்டு மாசமாகுது. இப்ப ரெண்டு பேரும் சேர்ந்து தண்ணியடிக்கிற அளவுக்கு நெருங்கிற்றம். என்னை அவருக்கு எந்தளவுக்கு பிடிச்சிருக்கோ தெரியாது. ஆனால் என்க்கு அங்கிளளை நல்ல விருப்பம்.

போன மாசம் ஐயா வவனியாவில வந்து நிண்டு கொண்டு ரெலிபோன் எடுத்து ''உடன ஒரு லெச்சம் ரூபா அனுப்பு இல்லாட்டி கொம்மாவையும் குமரையும் பிடிச்சு கிணத்துக்குள்ள தள்ளிப்போட்டு நானும் சாவன்'' 'எண்டு பிளாக்மெயில் பண்ணுரேர். எனக்கெண்டால் என்ன செய்யிறதெண்டு தெரியேல்ல. அங்கிளிட்ட விசயத்தைச் சொன்னன். உடனே அங்கிள் அங்கமாறி இஞ்சமாறி ஐயாயிரம் பிராங் தந்தேர். நேற்று சம்பளமெடுத்து அப்படியே கடன் காசைக் குடுத்திற்று மிஞ்சி இருநூறு பிராங்கிலதான் இப்ப போத்தில் வேண்டி அடிச்சிற்று வாறம்.

அங்கிளுக்கு நல்ல ஏறிற்றுது. ''சக்தி உமக்கு தெரியுமா, என்ர மகள்தான் வகுப்பிலேயே முதலாம் பிள்ளையாம் எண்டு மனிசி கடிதம் போட்டிருக்கா'' எண்டு ஒருக்கா சொல்லுவேர். பிறகு அப்படியே ''ரூட்மாறி'', ''செப்''புக்கு ஒரு நாளைக்கு மீன் வெட்டுற கத்தியால ஏத்தி இழுக்கிறனோ இல்லையா பாரும்'' எண்டு பல்லை நெரிப்பார். அப்படியே ''ரக்''மாறி அர்த்தமுள்ள இந்து மதத்தில கண்ணதாசன் சொன்னது 'ஹண்ரெட் பெர்சன்ட் கரக்ட்'' எண்டு சிரிப்பேர்.

அங்கிள இப்படியே அவர் தங்கியிருக்கிற றூமுக்கு அனுப்ப ஏலாது. ஒரு ''பமிலி''காரர் வீட்டிலதான் தங்கியிருக்கிறேர். அவையள் அங்கிளின்ர சொந்தக்காரர் தானாம். ஆனால் அவையளுக்கும் ஒரு நாளைக்கு அடியிருக்கெண்டு கொஞ்சத்துக்கு முந்தியும் சொன்னவர். இந்தக்கொண்டிசனில அங்க போனேர் எண்டால் பரிசு கெட்டுப்போயிரும். அதுதான் என்ர றூமுக்கு இண்டைக்கு கூட்டிக்கொண்டு போறன். இன்னும் ஒரு மூண்டு நிமிசம் நடந்தால் என்ற றூமும் வந்திடும். அங்கிள் உரக்க பாட்டுப் படிச்சுக் கொண்டு வாறார்.

விறுக்கெண்டு ஒரு கார் எங்கிட காலுக்குள்ள ''சடன்பிரேக்'' போட்டு நிண்டுது நாலு பக்க கதவையும் திறந்து கொண்டு இங்கிலிஸ் படங்கள் கணக்கா நாலு உருவங்கள் பொத்து பொத்து எண்டு குதிச்சுதுகள். கணணை ஒருக்கா வெட்டி முழிச்சுப் பாத்தன். ஏறக்குறைய எனக்கு வெறி முறிஞ்சு போச்சு. பொலிஸ்....

அவையள் எங்களை மறிச்சுப் பிடிச்சுக் கொண்டு எங்கட விசாவையும் கேட்டிச்சினம். நான் உடன என்ர விசாவை எடுத்து குடுத்திற்றன். அங்கிள் அவையளைப் பாத்து சிரிச்சுக்கொண்டு நிக்கிறர். நான் அங்கிளிட்ட ''விசாவை'' குடுக்கச் சொல்லி சொன்னன். அங்கிள் என்னைப்பாத்து கண்ணடிச்சு சிரிச்சேர். அம்மாளாச்சி இதென்ன வெள்ளிடி எண்டு போட்டு நான் அங்கிளின்ர ''ஜக்கட்'' பொக்கற்றுக்குள்ள கையை விட்டு விசாவை எடுக்கப்போனன். அங்கிள் பொக்கற்றை பொத்திப்பிடிச்சுக்கொண்டு சிரிக்கிறேர். படாரெண்டு ஒரு பொலிஸ்காரன் பாய்ஞ்சு அங்கிளைப் பிடிச்சு ரோட்டுக்கரை மதிலோடு சாத்தி வைச்சுப்பிடிக்க இன்னொருத்தவன் ஆளை கொம்பிளீட்டா செக் பண்ணி விசாவை எடுத்துப்போட்டான்.

இவ்வளவு அமளிக்கு இடையிலேயும் நான் பத்து பதினைஞ்சு தரம் அவையளிட்ட ''எக்ஸ்கியூசே நூ, எக்ஸ்யூசே நூ....'' எண்டு மன்னிப்பு கேட்டுப் போட்டன். அதுக்கு மேல ஒண்டும் கதைக்க வருகுதில்லை. ஆனால் சும்மா நிண்ட என்னையும் ஒருக்கா கொம்பிளீற்றா செக்கப் செய்திச்சினம். ஒரு பொலிஸ்காரன் எங்கட விசாவை பார்த்து பார்த்து வோக்கி டோக்கியில எங்கையோ கதைக்கிறான்.

அங்கிள் அந்த பொலிஸ்காரனை பார்த்து முழிய பிரட்டி பல்ல நெறுமினேர். ''எனக்கு பத்து வரியம் விசா இருக்குது. ஏழு வரியம் முடிஞ்சுது... இன்னும் மூண்டு வரியம் இந்த நாட்டில இருக்க எனக்கு உரிமை இருக்குது'' எண்டு மல்லுக்கு நிக்கிறேர். அவன் எங்களைப் பார்த்து சிரிச்சுக்கொண்டே வோக்கியில கதைச்சு முடிச்சான். பிறகு சொன்னான், ''உண்மைதான். உங்களுக்கு இன்னும் மூண்டு வரியம் இஞ்ச இருக்க உரிமை இருக்குது. மூண்டு வரியம் முடிய நீங்கள் உடுப்பு, சாமான்களை கட்டி வையுங்கோ நாங்கள் ஸ்ரீலங்காவுக்கு பெரிய கப்பல் ''ரெடி பண்ணி வைக்கிறம்.'' அவ்வளவுதான் ''டக்பக்'' எண்டு அவையள் காரில ஏறிப்போயிற்றினம்.

பெரிய மழை பெஞ்சு நிண்டமாதிரி கிடந்தது. விறுவிறுவெண்டு அங்கிளையும் இழுத்துக்கொண்டு என்ர றூமுக்கு வந்திற்றன். அங்கிள் இவ்வளவு கூத்து காட்டினாப்பிறகும் எனக்கு அங்கிளில கோபம் வரயில்லை. அவ்வளவு அன்பா பழகிப்போட்டம். ஒரு தேப்பன் மாதிரி எனக்கு எவ்வளவு 'ஹெல்ப்'' செய்திருக்கிறார். அங்கிள் என்ர றூமுக்கு இண்டைக்கு தான் முன்னம் முன்னம் வாறேர். என்ர றூமை வடிவா பார்க்கிறேர். றூம் எந்த நிமிசமும் இடிஞ்சு விழுகிற நிலையிலதான் கிடக்கு. சரியான குப்பையாயும் கிடந்தது.

நான் சாப்பாட்டை அடுப்பில வைச்சு சூடு காட்டினன். அங்கிள் கட்டிலில் ஏறி சம்மணம் கட்டி இருந்து கொண்டு ''எனக்கு வேணாம்... என்னால சாப்பிட ஏலாது... நீர் சாப்பிடும் வெறும் வயித்தில படுக்காதையும்'' எண்டு திரும்ப திரும்ப சொல்லிக்கொண்டிருந்தவர் அப்பிடியே சரிஞ்சு நித்திரையாப்போனார். எனக்கும் சாடையா சத்திவாற மாதிரி கிடந்தது. சாப்பாட்டை மூடிவைச்சுப் போட்டு அங்கிளின்ர சப்பாத்தை கழட்டி விட்டன். பெட்சீட்டை எடுத்து நிலத்தில் விரிச்சுப் போட்டு அதில படுத்திற்றன்.

நேரம் ரெண்டு மணியாப்போச்சுது. எனக்கு நித்திரை வருகுதில்ல. சாடையான காய்ச்சல் குணமா இருக்குது. தேகமெல்லாம் குத்தி முறியுது. சரியான வெக்கையா கிடக்கு. அப்படியே மெள்ள மெள்ள நித்திரையாப் போனன்.

திடீரெண்டு என்ர முகத்துக்கு குளிர் காத்து அடிக்குது. உடம்பெல்லாம் காத்தில் பறக்கிற மாதிரி கிடக்கு. கைகாலுக்க உள்ள நரம்புகள் எல்லாம் தங்கட பாட்டுக்கு வயலின் வாசிக்கினம். நித்திரை குழம்பிப்போக கண்ண உன்னி திறந்து பார்த்தன். அங்கிள் எனக்கு பக்கத்தில் படுத்துக்கிடக்கிறேர். ஒரு கையால் என்னை தன்ர நெஞ்சோட சேர்த்து கட்டி பிடிச்சுக் கொண்டு அடுத்த கையால என் உடம்பு முழுவதும் தடவுறேர். என்ர கால் ரெண்டும் அவற்ற காலுக்குள்ள சிக்குப்பட்டு கிடக்க என்ர முகத்தில கொஞ்சுறேர்.

ஒரு ''செக்கன்'' ஏங்கிப்போனன்.

''அங்கிள் விடுங்கோ''எண்டன் அவர் இன்னும் பிடியை இறுக்கினார். இரண்டு உள்ளங்கையையும் அவற்ற நெஞ்சில குடுத்து தள்ளினன். கொஞ்சம் பிடி இளகிச்சுது. அப்படியே பாய்ஞ்சு எழும்பி ஓடிப்போய், ''பாத்றூமுக்குள்ள'' உள்ளிட்டு கதவை சாததிப்போட்டு நிண்டிட்டன்.

இந்த மனிசன் இப்படிப்பட்ட காவாலி நாயா! ஐயோ அம்மாளாச்சி எனக்கு ஏன் இப்படியொரு கிலிசுகெட்ட சினேகிதத்தை தந்தாய்? நான் இந்த கிழடோட சினேகிதம் கொண்டாடேக்க ரெஸ்ரோரண்டில வேலை செய்யிற மற்றப்பெடியள் நக்கலா சிரிக்கிறவங்கள். அவங்களோடும் சேட்டை விட்டிருக்குமோ? அவங்கள் என்னையும் பிழையான ஆள் எண்டு கணக்குப் பண்ணியிருப்பாங்களோ?

இப்படியே யோசிச்சுக்கொண்டு அரை மணித்தியாலமா பாத்ரூமுக்குள்ளையே நிண்டன். கதவைத்திறந்து கொண்டு றூமுக்க போக பயமாக் கிடந்தது. என்னத்துக்கு பயப்படவேணும்? மசிர்... இனி ஏதும் சேட்டை விட்டேரெண்டா அடிச்சு மூஞ்சிகீஞ்சி எல்லாம் உடைச்சுத்தான் அனுப்புவன்.

அவக்'கெண்டு கதவைத்திறந்து கொண்டு றூமுக்குள்ள வந்தன். பெரிய ஜென்டில்மென் கணக்கா கட்டில்ல இழுத்துப் போத்துக்கொண்டு படுத்துக் கிடக்கிறேர். இண்டையோட இவற்ற சிநேகிதம் ''கட்'' எண்டு முடிவெடுத்துக்கொண்டு பெற்சீட்டை →

www.tamilarangam.net



ஒருக்கா உதறிப்போட்டு நிலத்தில் விரிச்சுப் படுத்தன்.

காலம்பிற ஏழுமணிக்கு ''அலாம்'' அடிச்சுது. அவர் எனக்கு முதலே எழும்பி தேத்தண்ணி போட்டுக் கொண்டு நிக்கிறேர். நான் முகம் கழுவிற்று வர எனக்கு தேத்தண்ணி தந்தேர். நான் ''வேணாம்'' எண்டு சொல்லிப் போட்டன். காய்ச்சல் சாடையா காயுது.

''ரெயினி''ல வேலைக்கு போய்க்கொண்டிருக்குறோம். ரெண்டு மூண்டு தரம் என்னோட கதைக்க ''ட்றை'' பண்ணினேர். நான் கேட்ட கேள்விக்கு மட்டும் மறுமொழி சொல்லிப் போட்டு என்பாட்டுக்கு இருந்திற்றன். ராத்திரி நடந்ததை நினைக்க ரத்தம் கொதிக்குது. இவரோட எனக்கென்ன கதை.

பகல் பன்னிரெண்டு மணியிருக்கும்.... வேலை செய்து கொண்டு நிக்கிறன். தலையெல்லாம் சுத்துது. நிலத்தில நிக்க ஏலாம கிடந்துது. ஓடிப்போய் சத்தி எடுத்தன். 'பத்துரோனிட்ட போய் எனக்கு சுகமில்லாம கிடக்குது வீட்டை போகப்போறன் எண்டன். சனம் வாற நேரமாக் கிடக்கு நிண்டு வேலை செய்து போட்டு பின்னேரமா போகச்சொன்னான். இல்ல நான் போகத்தான் வேணும் எண்டு விடாப்பிடியா நிண்டன். என்னால கதைக்க கூட ஏலாம கிடந்தது. பத்துரோனுக்கு முகம் சரியில்ல. ''சரி சரி போ'' எண்டு சொன்னான். குசினிக்குள்ள ஒருத்தருக்கும் சொல்லயில்ல வெளிக்கிட்டு வந்திற்றன். எப்படித்தான் ரெயின் பிடிச்சு மாடிப்படியேறி என்ர கட்டிலில வந்து படுத்தனோ தெரியாது.

உடம்பெல்லாம் வேர்த்துக் கொட்டுது. இந்தா உள்ளங்கால் கூட வேர்க்குது. முகம் முழுக்க எரியுது. தண்ணி தண்ணியா விடாய்க்குது... தொண்டை நெஞ்சு எல்லாம் அடைச்சுப் போச்சு! ஆயிரம் பேர் என்ர தலையில ஏறிநிண்டு ''டான்ஸ்'' பண்ணுற மாதிரி நோகுது. தேகம் குத்தி முறியுது. எனக்கு திரும்பியும் காய்ச்சல் வந்திற்று. நாலு வரியத்துக்கு பிறகு காயுது.

எனக்கு என்ர பத்து வயசில முன்னம் முன்னம் இந்த காய்ச்சல் பிடிச்சுது. அண்டைக்கு நடுச்சாமம் இருக்கும். அம்மா வந்து என்னை எழுப்பினா. ''சக்தி பெரியம்மா வீட்டை போயிட்டு வருவம் வா'' எண்டா. ஏன் இந்த சாமத்தில பெரியம்மா வீட்ட போகவேணும் எண்டு எனக்கு விளங்கேயில்ல. அதோட பெரியப்பா செத்து இன்னும் ஆறு மாசம் முடியேல்ல. எப்படியும் வீட்டைச்சுத்தி பேயாய் திரிவார் எண்டும் சாடையாப் பயந்தன். எண்டாலும் அம்மா கூடவாறா ஐயாவும் வருவேர். பயப்பிட தேவையில்ல எண்டு போட்டு உசாரா சாறத்த தூக்கி சண்டிக்கட்டு கட்டிக்கொண்டு விறாந்தைக்கு வந்து ஐயாவைத் தேடினேன். ஐயாவைக் காணயில்லை. ''எணை ஐயா எங்கையணை'' எண்டு அம்மாவிட்ட கேட்டன். அம்மா ஒண்டும் பறையாம என்ர கையைப் பிடிச்சுக் கொண்டு மற்றக்கையால தங்கச்சியை தூக்கிக்கொண்டு ஒழுங்கையில இறங்கினா. தங்கச்சி அப்ப கைக்குழந்த.

பெரியம்மா வீட்டுக்கு கிட்ட வந்ததும் அவ்விடத்திலேயே நிண்டம். உள்ளுக்க போகயில்லை அம்மா. ''சக்தி ஐயாவை கூப்பிடு'' எண்டா. எனக்கு ஒண்டும் விளங்கேயில்ல. எண்டாலும் அம்மா சொல்லுறா எண்டு போட்டு ''ஐயா... ஐயா..!'' எண்டு கத்திக் கூப்பிட்டன். ஒரு அசுமாத்தமும் இல்லை! நானும் விடயில்லை. படலையில ஏறிநிண்டு ''ஐயா... ஐயா..'' எண்டு கூப்பிட்டன்.

திடீரெண்டு ஐயா பெரியம்மா வீட்டுக்கையிருந்து ஓடிவந்தார். பெரியம்மா வீட்டுக்குள்ள இருந்து எங்கட ஐயா ஏன் வாறார் எண்டு அந்த ''ரைமில'' எனக்கு விளங்கயில்ல. ஓடிவந்த வீச்சுக்கு கையாலும், காலாலும் அம்மாவுக்கு அடிச்சார். அம்மாவின்ர தலைமயிர சுருட்டி கையில பிடிச்சுக் கொண்டு. வயித்தைப் பொத்தி உதைஞ்சார். ''வேச. வீட்டை போடி... வேச வீட்டை போடி..... எண்டு சொல்லிச் சொல்லி அடிச்சார். அம்மா மரம் மாதிரி நிக்கிறா. ஒரு சத்தம் போடயும் இல்ல. ஒரு சொல்லு பறையவும் இல்ல. நான் ''என்ர ஐயா அம்மாவுக்கு அடிக்காதையுங்கோ, அடிக்காதையுங்கோ'' எண்டு குளறினன். அடுத்தநாள் விடிய எனக்கு காய்ச்சல் பிடிச்சிற்று. கடுமையா காய்ஞ்சுது. சாகிற கட்டம்!

நான் பத்தாம் வகுப்பு படிக்கேக்க எனக்கு ரெண்டாம் தரம் இந்த காய்ச்சல் வந்தது. மேரி ஜஸ்மின் அப்ப இளவாலை கொன்மென்டில தங்கியிருந்து படிச்சுக்கொண்டிருந்தவ. லீவிலதான் ஊருக்கு வருவா. அந்த முறை அவ லீவுக்கு வந்து நிக்கேக்க வாசிகசாலைக்காரர் விளையாட்டுப்போட்டி நடத்திச்சினம். அவவும் ''நூறுமீற்றர்'' ஓடினவ. நான் தான் ''பினிஸிங்''கில கயிறு பிடிச்சுக்கொண்டு நிக்கிறன். மேரி ஜஸ்மின் தான் முதலாவதா வந்தவ. அது மட்டும் அவவ நான் பெரிசா ''நோட்'' பண்ணயில்ல. அவ கயிறு முட்டி அறுத்த அந்த செக்கனும் அவவின்ர ஹிப்பி தலை காத்தில பறந்த ''பிளானும்'' சாடையா ''லெவலடிக்கிற'' அவவின்ர சிரிப்பும் என்ர மைன்டில பதிஞ்சிற்று.

இரவு பகலா அவவின்ர நினைப்புத்தான். அவ தனிய ரோட்டால சைக்கிளில போகேக்க ரெண்டு தரம் பின்னாலேயே நானும் போய் கதைக்க ட்றை பண்ணிப் பார்த்தன். அவவின்ர சைக்கிளை நான் ''ஓவர்டேக்'' பண்ணேக்க வாய் திறக்காமல் சிரிப்பா நானும் சிரிப்பேன். அவ்வளவுதான். ஆனால் மூண்டாம் தரம் துணிஞ்சிற்றன். அவ ''சைற்'' எடுக்கிற நேரத்தில இன்ன இன்ன மாதிரி நான் உங்களை ''லவ்'' பண்ணுறன் எனக்கொரு முடிவு சொல்லுங்கோ எண்டன். அவ்வளவுதான்.... மேரி ஜஸ்மின் சைக்கிள் பிறேக் அடிச்சு நிப்பாட்டிப்போட்டு ''பொறும் கடாபி அண்ணாவிட்ட சொல்லுறன்'' எண்டா. நான் சைக்கிளை உழக்கிக்கொண்டு பறந்திற்றன். கடாபி எண்டவர் அப்ப ஏதோ ஒரு இயக்கத்தில் எதோ ஒரு பொறுப்பாளர். ஐயோர் காம்பில கொண்டே போட்டு பெட்டையோட சேட்டைவிட்டனான் எண்டு சொல்லி உழக்கப்போயினமே எண்டு நினைச்சு நினைச்சு அழுதன். காய்ச்சல் பிடிச்சிற்று... சாகிற கட்டம். இதுக்கு பிறகு நான் ஊரில நிக்கு மட்டும் எனக்கு அடிக்கடி காய்ச்சல் வந்திச்சு. ஆனால் பிரான்சுக்கு வந்தாப்பிறகு ஒருக்காலும் வரயில்லை. இனி வராதெண்டுதான் நினைச்சன். ஆனால் வந்திற்றுது.

வேலைக்குப் போகாம விட்டு இண்டையோட மூண்டு நாள் முடியுது. காய்ச்சலும் வர வர கூடுது. பாண்தான் சாப்பாடு. அதைக்கூட சாப்பிட மனமில்லாமல் கிடக்கு. இப்ப ஒரு தேத்தண்ணி வைச்சுக் குடிச்சா கொஞ்சம் உசாராயிருக்கும். ஆனால் என்னால எழும்பி அடுப்படிக்குப் போய் தேத்தண்ணி வைக்க ஏலாது. நடக்கவே தஞ்சக்கேடா இருக்கு.

நேற்று முரளிக்கு ரெலிபோன் அடிச்சு சரியான வருத்தமா கிடக்கு ஒருக்கா வந்து டொக்டரிட்ட கூட்டிக்கொண்டு போவெண்டு கேட்டன் தனக்கு நேரமில்லையெண்டு சொல்லிப் போட்டான்.

இப்படியே இந்த றூமுக்குள்ள கிடந்து செத்துப்போயிருவன் போல கிடக்கு. இந்த முறை தப்பமாட்டன். ரெண்டு மூண்டு நாளால தான் பிரேதம் மணக்கத்துவங்கும். அதுக்கு பிறகு தான் பக்கத்து றூம் ஆப்கானிஸ்தான்காரி பொலிசுக்கு ரெலிபோன் அடிப்பா. அதுக்கு பிறகு பொலிஸ் வந்து கதவை உடைச்சுத்தான் பிரேதத்தை எடுக்க வேண்டிவரும். அம்மா ஐயாவுக்கு அறிவிப்பாங்களா?

கதவு தட்டிக்கேக்குது. ஆராயிருக்கும் முரளியா இல்லை, ஆப்கானிஸ்தான்காரியா? எழும்ப ஏலாமக் கிடந்தது. ''தம்'' கட்டி எழும்பினன். சுவரை பிடிச்சுக் கொண்டு மெள்ள நடந்து போய் கதவை திறந்தன். அங்கிள் நிக்கிறார்!

நான் ஒண்டும் பறையாமல் மெள்ள நடந்து வந்து கட்டில்ல ஏறிப் படுத்திற்றன். அவர் வந்து கதிரையில இருந்து தலையைக் குனிஞ்சு கொண்டு இருந்தார். பிறகு மெல்ல எழும்பி எனக்கு கிட்ட வந்தார். என்னை நிமிர்ந்து பார்க்கிறார் இல்லை.

எனக்கு முகமெல்லாம் பத்தி எரியுது. தேகம் குத்தி முறியுது. தாங்க ஏலாம கிடக்கு. அங்கிள் மெல்ல என்னை நிமிர்ந்து பார்த்து ''சக்தி என்னப்பு செய்யுது. தேத்தண்ணி போட்டுத் தரவா?'' எண்டு கேட்டார். எனக்கு எப்படித்தான் அழுகை வந்ததோ தெரியாது! அழுது கொண்டே எழும்பி அங்கிள இறுக்கி என்ர ரெண்டு கையாலும் கட்டிப்பிடிச்சு அவற்ற முகத்தில கொஞ்சினன்.

**நன்றி: 'அம்மா'**

# புலப்பாடு...

கொலையும்
கொலைச் சிரிப்பில் கும்மாளமும்.

ஆணுறுப்பு அறுந்த வலி எனக்கு.

ஒவ்வொரு வெடித் தீர்விலும்
இறந்து கொண்டிருக்கிறேன்.

மௌனம் பொத்த
எனக்குள் சித்திரவதை
காயம் பட்டு
உடல்
சீழ் வடிய நாறுகிறது.

சாவு மணம்.

நுண்ணிய உணர்வுக் கனதி
நிச்சயம்
நாலு நாளாய்ப் புழுத்தெறிக்க
மணத்த சாவு எனக்கு.

ஒரு இரவில்
அறுதலிகளாய்ப் போன
எனது பயல்களுடன் போய்ச் சேர
ஏதாவதொரு தெருவில்
சாவு வரின் சுகம்.

இந்த மண்ணை விட .

**தேவி கணேசன்**
23.12.97

தொல்லை பண்ணாதிரு
யாரையும்
புரிந்துணர முடியவில்லை

தேனீ துரத்திக் கொட்டியிருக்கிறது.
கல்லொன்று
பெரு விரல் நகத்தை சப்பியிருக்கிறது,
இதெல்லாம் கடந்து
வாய் கசந்து கிடக்கிறது.

நெருங்கி வந்து கொண்டிருந்த ஒருத்தி
"நில் வருகிறேன் " என்று போயிருக்கிறாள்
வரலாம்
சில வேளை கழிய
அம்மாவைப் போலவும்
சோதரங்களைப் போலவும்
தூரத்தே நின்று கையசைக்கலாம்.
ஒரு
மலர் வளையம் கட்டி வைத்துவிட்டு.

கொஞ்சம்
தொல்லை பண்ணாதிரு

**ச.தியாகசேகரன்**


அலைகளின் ஆங்காரங்கள்
ஆழ் கடலில் அடங்கி விடுகின்றன.
இளமையின் இடர்பாடுகளும்
இப்படியே.-

கரையைத் தழுவிப்
பின் காணாது போகும் நீரென
கனவுகளும் காணாது போகிறபோது
வாரிவிட்டதாக காலத்தில்
பழிபோட்டு ஆறுவர் .

கடலோரத்தே
கற்கள் திடங்கொண்டு
அலைகளை எதிர்த்துப் போரிட்டு
ஜெயிக்கும்-

வாழ்தலுக்காய்
கற்களே போரிடும்.

**காண்டீபன்**



## எல்லாம் எமக்கே

எமதூர் பச்சைவயல்களூடே
பற் சக்கரங்கள் பதிய டாங்கிகள்
ஊர்வலம் போக நாம்
பாழ்நில வாசியானோம்.


எமது வீடுகளின்
கதவு , யன்னல்கள்
காவலரண்களுக்குக் காவலாயின.

வனிதையர்க்கு
வல்லுறவே வாழ்வான அவலம்
இங்கு அரற்கேறுகிறது.

பற்களைப் பிடுங்குதற்காய்
வருந்தாதே-சூத்தையுனக்கு
வந்திடல் ஆகாதென்ற
கரிசனையே என்பதாய்
எல்லாமே நடக்கின்றன.

எதிர்காலமேது மற்ற
ஏதிலிகளாய் நாமலைய
"எல்லாமே எமக்காகத்தானாம் "
சொல்வது - அவர்கள்.
எங்கள்
உடலையும், உள்ளத்தையும்
மேலும் மேலும் ரணமாக்குவது கூடவா ?

இளவரசு



www.tamilarangam.net



# ஜான் ஆபிரகாம்: பித்தமும், இயக்கமும்

வெங்கட் சாமிநாதன்

இறுதிப் பகுதி..

நான் ஒரு ஸிமெண்ட் பெஞ்சில் உட்கார்ந்து கொண்டேன். முந்திய நாள் மாலை, கும்பகோண்ம் ரயில் நிலையத்தில் தொடங்கியது. இங்கு திருவனந்தபுரம் பஸ் நிலையத்திலும் தொடர்ந்தது. அடிக்கடி 1/2 மணிக்கு ஒரு தடவை எங்கோ இருட்டில் போய் வருவார். இம்மாதிரி மூன்று தடவைகள் ஆகிவிட்டது என்று நினைக்கின்றேன். ஒரு புதிய ஜான் அங்கு உருவெடுத்தார். நான் உட்கார்ந்த பெஞ்சின் மறுமூலையில் ஒருவர் மலையாளி. ஒரு மலையாளப் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தார். ஒரு தடித்த வழுக்கைத் தலை மனிதர். ஜான் அவரை நோக்கி விரல் நீட்டிசுட்டி என் பக்கம் முகம்திருப்பி அவரது அத்தகைய நிலையில் பேசக் கூடிய ஆங்கிலத்தில் உரத்த குரலில் பேச ஆரம்பித்தார். இந்த அசிங்கத்தைப்பாருங்கள் பத்திரிகை படிச்சிண்டிருக்கு. என்ன படிக்கிறது? இந்த வழுக்கத்தல, இந்த அசமந்தம் என்ன நினைக்கிறது தெரியுமா? இது ஒரு புரட்சியையே கொண்டு வரப்போகிறதா நினைக்கிறது. இது எப்படி புரட்சியைக்கொண்டு வரப் போகிறது? நியூஸ்பேப்பர் ஹெட்டிங் படிச்சு. அப்புறம் என்ன பண்ணும்இது. அப்புறம் இவங்க எல்லாம் சேர்ந்து இதைபத்தி அரட்டை அடிப்பாங்க. உடனே புரட்சி வந்துடும். நான் பார்க்கிறேன் பேப்பர் படிச்சிட்டு அரட்டை அடிக்கிறதைத்தவிர வேறே ஒண்ணும் தெரியாத இந்த மாதிரி வழுக்கத் தலைகள் இருக்கிறப்போ புரட்சி எங்கேயிருந்து வரும்? இது ஏன் வீட்டுக்குப் போய் பேசாமல் பொண்டாட்டியோடு படுத்திருக்க மாட்டேங்கிறது. அதைச் செய்யலாமே! ஒருவேளை அதுவும் கூட இந்த வழுக்கத் தலையாலே முடியறதில்லையோ என்னமோ. இல்லாட்டா இந்த அர்த்த ராத்திரிலே பஸ் ஸ்டாண்டிலே பேப்பர் படிக்கிறன் என்று உட்கார்ந்திண்டிருக்குமா? இது என்னைத் திடுக்கிட வைத்தது. இது நம்மை எங்கே கொண்டுவிடும் என்று பயப்பட வைத்தது. அதிர்ஷ்டவசமாக அந்த மனிதர் இந்த இடத்தைவிட்டு, இந்த இரண்டு ரவுடிகளையும் விட்டு ஒதுங்கிச்செல்வதே இந்த அர்த்த ராத்திரியில் விவேகமான செயல் என்று எண்ணித்தானோ என்னமோ, எங்கள் பார்வையிலிருந்து தூரத்தள்ளி அகன்றார். கொஞ்ச நேரம் அமைதி. மறுபடியும் நான், 'இதோ வந்து விட்டேன்' என்று சொல்லி வெளியே சென்றார்.

கொஞ்ச நேரம் கழித்து திரும்பி வந்தபோதே சற்றுத்தொலைவிலிருந்தே உரத்து சப்தம் இட்டுக் கொண்டே வந்தார். 'சாமிநாதன் என்னாலே இனிமே பொறுக்க முடியாது. எனக்கு எல்லாம் வெறுத்து வருகிறது. கோபம்கோபமாக வருகிறது. நான் ஏதாவது செய்தாக வேண்டும். இந்த மாதிரி என்னால் சும்மா இருக்க முடியாது.'' என்று கையைக் காலை ஆட்டிக்கொண்டு சப்தமிட்டுக் கொண்டு அங்குமிங்குமாக நடந்தார். ''என்ன செய்யப் போகிறேன் தெரியுமா? ஏதாவது செய்யணும். என்னுடைய கண்டனத்தை உலகறியச் செய்யணும்'' என்று சொல்லிக்கொண்டே கொஞ்ச தூரம் தள்ளி நடந்தார். வேகமாக பின் ஓரிடத்தில் நின்று ''இந்த இடத்தில் நான் ஒண்ணுக்குப்போகப்போறேன். ஆமாம் இப்படித்தான் என் கண்டனத்தைச் சொல்ல முடியும். இப்போதைக்கு என்னால் செய்ய முடிவது இதுதான்'' என்று சொல்லிக் கொண்டே. காலை அகட்டி நின்றார். என்னை நோக்கி பின் சட்டையைத்தூக்கி பேண்ட் பித்தான்களைக் கழற்ற ஆரம்பித்தார். எனக்குப் பயமாக இருந்தது. இந்த ஆளை எப்படிச் சமாளிப்பது என்று தெரியவில்லை. அதிர்ஷ்டவசமாக ஒன்றிரண்டு பித்தான்களை கழற்றியவாறு அதோடு நிறுத்திக்கொண்டு என்னை நோக்கி வேகமாக நடந்து என் அருகில் வந்ததும், ''ஆமாம் நான் வேறென்ன என்ன செய்ய முடியும்'' என்று கேள்வி கேட்டு நின்றார். அவரை இழுத்து அருகில் உட்கார வைத்துக்கொண்டேன்.

இவையெல்லாம் ஏதோ எப்பவோ நிகழ்ந்த சம்பவங்களைப்பொறுக்கி எடுத்ததல்ல. இவையெல்லாம் படிக்க ஒரு ரக ஸ்வாரஸ்யத்தைத்தரும் என்ற எண்ணத்தோடு தேர்ந்தெடுக்கப் பட்டவை அல்ல. திருவனந்தபுரம் போவது என்று கும்பகோணத்திலிருந்து கிளம்பிய கணத்திலிருந்து நிகழ்ந்த சம்பவங்களின் சங்கிலித் தொடரில் இரண்டு இவை. நாகர் கோயிலில் இருந்த இரண்டு நாட்களில், ஜான் விழித்திருந்த நாட்கள் ஒரு சில மணி நேரங்களாகும். நாகர் கோயிலுக்கு நாங்கள் போய்ச் சேர்ந்த 6.30 அல்லது 7.00 மணியிலிருந்து உறங்க ஆரம்பித்தவர் எழுந்தது இரவு 9.30 அல்லது 10மணிக்குத்தான். திருவனந்தபுரத்தின் அருகில் ஏதோ கிராமத்தில் இருக்கும் தன் சகோதரியைப்பார்க்க வேண்டும். பணம் கிடைக்கும் என்று புறப்பட்டார் ஜான். பஸ் கட்டணம் ரூபா.10 என்று என்னிடம் வாங்கிக் கொண்டார். அவரை வழிஅனுப்பிவிட்டுத் திரும்பும்போது சுந்தரசாமி என்னைக் கேட்டார். ''இவரால் தனியாக ஏதாவது செய்ய முடியுமா? மற்தெல்லாம் போகட்டும் பஸ்ஸில் ஏற்றி அனுப்பியாகி விட்டது. சகோதரி வீட்டிற்கு அவர் ஒழுங்காகப் போய்ச் சேருவாரா?'' என்று.

ஜானைப் பற்றி எண்ணும்போதெல்லாம் ஒரு உருதுக் கவிதை எனக்கு ஞாகபம்



வரும். அதன் இரண்டாவது வரி, ''ஜிஸ்னே தேகா ஹோஷ் மேம்(ம்) முஜ்கோ உஸ்னே முஜ்மே(ம்) மேரி கமிதேகி'' எப்போதும் போதையில் இருக்கும் கவிஞன் சொல்கிறான்.

''போதையற்ற நிலையில் நான் என் முழுமையில் இருப்பதில்லை. அப்போது நான் குறைபட்டவன். போதையில் தான் என் ஆளுமையின் முழுமையைக் காணமுடியும்'' என்கிறான். ஜான் தன் சுயநிலையில் எப்போது இருந்தார் என்று சொல்ல முடியாது. 24 மணி நேரமும் அவர் போதையில் தான் இருந்தார். எப்போதாவது சில மணி நேரம் போதை குறைவாக இருக்கலாம். ஆக, ஜானின் முழு வியக்தி விகாசத்தையும் 24 மணி நேரமும் நாம் கண்டு கொண்டு தான் இருக்கிறோம் என்று சொல்ல வேண்டும்.

எப்போதும் குடியும் போதையுமாக இருந்த போதிலும், ஜான் சிரித்த முகமும் சிநேகம் கொண்ட மனிதர் தான். சில சமயம் கோபம் அவர் உள்ளே கொந்தளித்துக் கொண்டிருக்கும். அந்தக்கோபம் சமூக நிறுவனங் களுக்கெதிரான கோபம். எந்த நிறுவனத்தினதும் கட்டுப்பாடுகளுக்கு எதிரான கோபம். அவருடைய சொந்த பழக்கவழக்கங்கள், ஒழுங்கும் எதிர்பார்ப்பும் அற்ற, கட்டுப்பாடற்ற குணங்கள் பொறுப்பற்றதன்மை அவ்வப்போது நண்பர்களிடம் பழகு கிறவர்களிடம் கோபத்தைத் தூண்டும். ஜான் அதைப் பற்றியெல்லாம் அதிகம் கவலைப்படுவதில்லை. அதற்காக தன் சுபாவங்களை மாற்றிக்கொள்பவரும் அல்ல. ஒரு நமுட்டுச்சிரிப்பு சிரித்துவிட்டு எல்லாக் கோபங்களையும் உதறிவிட்டு மீண்டும் தன்வழி செல்வார். அவரைச்சுற்றி உலகம் இருந்தவாறு அவருக்கு ஒத்துப்போவதாக இல்லை. அதுபற்றி அவர் கொண்ட கோபம் உண்மையானது. பாசாங்குக் கோபம் அல்ல அவரது. நாடகபாணி கோபமும் அல்ல. உண்மையானது. ஜான் தனக்கு உண்மையானவர் தான், அந்த ''தனக்கு'' பிரச்சினைகள் நிரம்பியது என்பது வேறு விஷயம்.

தனக்கு உவக்காத உலக நியதிகளோடு வாழ இயலாத காரணத்தால் அவர் குடிபோதைகள் பக்கம் சென்றாரா அல்லது அவரது போதை வாழ்க்கைதான் உலகத்தோடு அவரை வாழ முடியாது செய்து விட்டதா என்பதைத் தீர்மானிப்பது கஷ்டம். அல்லது இரண்டுமே ஒன்றையொன்று போரிட் டுக்கொண்டனவா, அதற்கும் தெரியாது இருக்கலாம். ஆனால் அவர் போதைப்பழக்கங்களும் சமூகத்துடன் அவர் ஒத்துப்போக மறுத்தாலும் அவரது சமூக நிறுவனமறுப்பை, கோபத்தை ஆக்கரீதியான வழிகளில் செலுத்துவதின்று தடுத்துக்கொண்டி ருந்தன. அவரது மறுப்பும் அதிருப்தியும் அவரிடம் வெளிப்பட்ட பாங்கில், அவரைத் தொடர்ந்து அழிக்கத்தான் செய்தன.

இதெல்லாம் சரிதான் உண்மைதான். ஆனால் இக்கதையின் மற்றொரு பக்கமும் உண்டு. அவரது வாழ்நிலை எவ்வளவு மோசமாக இருந்த போதிலும், சமூகம் எவ்வளவுதான் அவருக்கு எதிராக இருந்தபோதிலும் ஜான் தன் இயல்பில், தன் விருப்பில் படைப்பாளியாக' ஓரளவாவது செயல்பட முடிந்திருக்கிறது. உலக விபரமும், தன் நினைவுகொண்ட மற்றொருவன் இத்தகைய தடைகளி லேயே எதிர்ப்பு சக்திகளிடையே செயல் இழந்திருப்பான். ஆனால் அத்தகைய ஒரு மனிதனுக்கு ஜான் தன் இயல்பில் தானே உருவாக்கிக்கொண்டிருந்த எதிர்ப்பு சக்திகள் இருந்திராது என்பது வேறு விஷயம். என்னவாக இருந்தாலும், இவ்வளவு தடைகளையும், எதிர்ப்புகளையும் மீறி அது ஜான் உருவாக்கிக் கொண்டதா அல்லது சமூகம் உருவாக்கியதோ, எதாக இருந்தாலும் அவற்றையெல்லாம் மீறி ஜான் தன் படைப்புக்காரியங்களில் ஈடுபடமுடிந்திருக்கிறது. அப்படைப்பு களின் குணம் எத்தகையதாக இருந் தாலும் அவை, அவரையும் அவர் தனக்கு எதிராக இருந்த சமூகத்தைப் பற்றிய அவரது பார்வையையும், படைப்பின் குறைபாடுகள் பெரிதாக இருப்பினும் நாம் அறிய முன்வைக்க முடிந்திருக்கிறது. அவை ஜானைப் பற்றியே பேசுகின்றன. இப்படங்களும் ஜானும், அவரது பார்வைகளும் ஒரு இயக்கத்தின் சிருஷ்டிக்கு மையமாக உத்வேகமாக இருந்திருக்கின்றன. இவ் இயக்க குணம் நம் கவனத்தை வேண்டுவதாகும்.

நான் முன்னர் குறிப்பிட்டேன். ஜானின் ''அக்கிரகாரத்தில் கழுதை'' என்ற திரைப்படம் பக்குவமற்றதாக நயமற்றதாக இருந்தது என்று சொன்னேன். ரித்விக் கடக் போன்ற ஒரு சிறந்த கலைஞன் ஆசிரியனின் - (ரித்விக் கடக்கின் படைப்புக்களிலேயே கூட நாம் பல ஏற்றத்தாழ்வுகளை ஒரு சீரற்ற தன்மையைக்காணலாம்) தேர்ந்த மாணவன் அபிமான மாணவர்களின் ஒருவன் என்றும், பூனா பிலிம் இன்ஸ்டிட்டியூட்டின் தங்க மெடல் பெற்ற மாணவன் என்றும் சொல்லப்பட்டவரின் படைப்பில் எதிர்பார்க்கும் தொழில்திறனை கைத்திறனை நாம் கொஞ்சம் கூட பார்க்க முடியாது ஏமாற்றப்படுகிறோம் என்றும் சொன் னேன். இன்னும் ஒரு சம்பவம், இந்த சந்தர்ப்பத்தில் ஞாபகம் வருகிறது.

டெல்லியில் கேரள கிளப்பிலோ அல்லது வேறு எங்கோ டெல்லியில் இருக்கும் மலையாள எழுத்தாளர்கள் கூட்டத்தில் ஜான் பேசினார். அது ''அக்கிரகாரத்தில் கழுதை'' படம் எடுக்க என்னை திரைக்கதை எழுதச் சொன்ன நாட்களில் நடந்தது. அப்போதைய திரைப்பட நிலையைப் பற்றி ஜான் அதிருப்தியை மிகக்கடுமையான வார்த்தைகளில் உதறி எறியும் பாணியில் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது கூட்டத்தில் ஜானைக் கேட்டார் இடைமறித்து, உங்கள் வித்யார்த்திகளே இதிலே இன்னமும் மோசமான படமாக அல்லவா இருந்தது?'' அப்போதும் ஜானின் முகத்தில் அவரது வழக்கமான நமுட்டுச் சிரிப்பு. ஜான் இதற்கு பதில் சொல்கிறார். ''அது சரிதான்: ஆனால்,' நான் எப்போது உங்களிடம் படம் எடுத்தால் நல்ல படங்களைத் தான் தருவேன் என்று சொன்னேன்?''

இது சாமத்தியமான நழுவல் இல்லை. எனக்குத் தோன்றுகிறது. ஜான் இதுபற்றியெல்லாம் கவலைப்பட்ட வரோ, தன்னை சிரமப்படுத்திக்கொள் பவரோ இல்லையென்று. அவர் இதன் பிறகு ''அக்கிரகாரத்தில் கழுதை'' எடுத்த விதத்திலும், அதையும் தொடர்ந்து இரண்டு படங்களை எடுத்த விதத்திலும் இதுதான் நிரூபணமாகிறது. எதையும் ஒழுங்காக, பூரணமாக செய்ய வேண்டும். அதில் செய்நேர்த்தி வேண்டும் என்பதில் எல்லாம் அவர் அக்கறை கொண்டது கிடையாது. ஜுரிகளின் சிறப்பு பரிசு பெற்ற ''அம்மா அறியான்'' படமும் இந்த ரகம்தான். அவரது வாழ்க்கை முழுதுமே அவர் அவராகத்தான் இருந்தார். அந்த அசிரத்தை, அந்த அலட்சியம், அதிலேயே அவர் திருப்தி அடைந்து விடும் மனப்போக்கு கொண்டவராகவே இருந்தார்.

அவரை இன்னும் நன்கு நெருங்கி அறிந்த பால் ஸகரையா சொன்னார். ''ஜான் மாறு சினிமா (Atternate Cinema) பற்றி கனவுகள் காண்பதில் சிறந்தவர். ஆனால் அவர் அவ்விடயத்தில் மிகுந்த அசிரத்தையும் அலட்சியமும் காட்டியவர்'' இதைவிட துல்லியமான மதிப்பீடு தருவது சிரமம். அவர் படைப்புகள் எத்தகைய ஒழுங்கும் அற்றவை. சிலசமயம் எரிச்சல் தருபவை. தர்க்கத்திற்கு மீறியவை. இப்படி எண்ணற்ற குறைகளை நாம் அடுக்கிச் செல்லலாம். ஆனால் ஒரு விஷயம் இந்த குறைகள் அத்தனையும் நாம் ஜான் என்னும் வியக்தியிடம் காண்பவை தான். இவ்வளவு குறைகளையும் நாம் ஜானிடம் சொல்வோமானால், இவை அத்தனையையும் ஜான் தயக்கமின்றி ஒப்புக் கொள்வார். தன்னிடம், தன் படங்களில் காணும் இத்தனை குறைகளையும் ஒப்புக்கொண்டு அவர் நம்மிடம் திருப்பிக் கேட்பார். ''ஆமாம் அதற்கென்ன இப்போது?''

ஒரு உண்மையான ஜானை நாம் தொடர்ந்து இப்போது பார்க்கிறோம். அவரிடமும் அவர் படங்களிலும் ''அக்கிரகாரத்தில் கழுதை'' படத்தின் கழுதையில் ''செரியாச்சன்டே குரூர க்ரித்யங்கள்''-ன் செரியாச்சன், ''அம்மா அறியான்'' படத்தில் வரும் ஹரி இம் மூன்றிலும், ஜான் தன்னைப் பற்றித் தான் பார்க்கும் பிம்பத்தையும் தன்னில் உலகம் பார்க்கும் தன் பிம்பத்தையும், தன்னில் முன்வைக்க முயன்றுள்ளார் என்று எனக்குத்தோன்றுகிறது. இவை ஒவ் வொன்றிலும் நாம் ஜானைப்பார்க்கலாம். சமூகத்தோடு ஒட்டாத ஒரு தான் தோன்றியை, சமூகம் நிராகரித்த, தான் சமூகத்தை நிராகரித்த வியக்தி, சமூகம் வேண்டாத, வெறுத்த ஆயினும், ''இருந்து விட்டுப்போகட்டும்'' என்று அலட்சியம் காட்டிய, கடைசியாக இவ்வளவையும் மீறி ஒரு கதாபுரு ஷனாக ஆக்கிய ஒரு வியக்தியைப் - பார்க்கலாம். ஹரியைப்போல இவ்வளவு கலவரங்களும் எதைப்பற்றி என்று தெரியாத பாவனையில் அல்லது உலகமே தன்னை ஒரு கழுதையாகத் தான் பார்க்கிறது. ஆனால் தன் போக்கில் வாழ விட்டு வைக்கிறது ஒரு அலட்சியத்துடன் என்றும் நினைத்திருக்கிறார். அல்லது செரியனைப் போல் தன்னைச்சுற்றிலும் உள்ள சமூகத்தின் தான் பார்க்கும் தவறுகள் எல்லாவற்றிற்கும் தன்னைக் குற்றவாளியாக்கிக் கொண்டு ஹரியைப் போல தன் அழிவைத் தானே தேடிக்கொண்டார் என்றும் தோன்று கிறது.

—▷19

**நாம் மீண்டும் 'அக்ரஹாரத்தில் கழுதை'க்கே செல்லலாம். அந்தப்படத்தில் உங்களுக்கு ஏதேனும் அரசியல் பிரக்ஞை இருந்ததா?**

எல்லாப்படமுமே அரசியல் படம்தான் என்று நம்பு கிறேன் சமூகத்தையோ அல்லது மக்களையோ பரிசீ லிக்கும் எதுவுமே அரசி யல்தான். நீங்கள் மக்களை முட்டாளாக்கினாலும் சரி, அல்லது விழிப்புறச் செய்தா லும் சரி எல்லாமே அரசி யல்தான்.

*நன்றி: அகவிழி*

சமூகத்தோடு ஒட்டாத ஒரு தான்தோன்றியை, சமூகம் நிராகரித்த, தான் சமூகத்தை நிராகரித்த வியக்தி, சமூகம் வேண்டாத, வெறுத்த ஆயினும், ''இருந்து விட்டுப்போகட்டும்'' என்று அலட்சியம் காட்டிய, கடைசியாக இவ்வளவையும் மீறி ஒரு கதாபுருஷனாக ஆக்கிய ஒரு வியக்தியைப் - பார்க்கலாம். ஹரியைப்போல இவ்வளவு கலவரங்களும் எதைப்பற்றி என்று தெரியாத பாவனையில் அல்லது உலகமே தன்னை ஒரு கழுதையாகத் தான் பார்க்கிறது. ஆனால் தன் போக்கில் வாழ விட்டு வைக்கிறது ஒரு அலட்சியத்துடன் என்றும் நினைத்திருக்கிறார். அல்லது செரியனைப் போல் தன்னைச்சுற்றிலும் உள்ள சமூகத்தின் தான் பார்க்கும் தவறுகள் எல்லாவற்றிற்கும் தன்னைக் குற்றவாளியாக்கிக் கொண்டு ஹரியைப் போல தன் அழிவைத் தானே தேடிக்கொண்டார் என்றும் தோன்றுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம்:

## ஒரு மறுபார்வை

# புதைக்க முடியாத பிணம் !

ஆணிமுத்தர்

ஈழத்து தமிழ் இலக்கிய உலகில் முன்னெப்போதுமில்லாத வகையில் ஓர் கருத்துநிலை அடிப்படையில் இயங்கத் தொடங்கிய அமைப்புத் தான் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம். இது 1946ல் தொடங்கி 1950களின் பின்னர் ஈழத்துத். தமிழ் இலக்கிய வரலாற்றில் முற்போக்கு வாதச் சிந்தனையின் புலமைத் தொழிற் பாடாக இயங்கிற்று.

முற்போக்கு இலக்கியக் கோட்பாட்டினை முன்வைத்து சமூக சிந்தனை மாற்றத்திற்கும் இலக்கிய மாற்றத்திற்கும் ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பாகவே இ.மு.எ.ச. தொழிற் பட்டது. இதன் தோற்றத்துடன் அதுகாலம் வரை சமூக அசைவியக்கத் தொழிற்பாட்டில் இருந்த அடிநிலை மக்களின் குரல்கள் மேற்கிளம்பின. அதோடு முக்கிய சமூக சக்திகளாகவும் இவர்கள் முன்னணிக்குக் கொண்டுவரப் பட்டனர்.

ஒவ்வொரு காலகட்டத்திலும் சங்கம் அவ்வக்கால வரலாற்று இலக்கியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முனையும் கோஷங்களை முன்வைத்தது. முதலில் 'ஈழத்துத்தமிழ் இலக்கியம்' எனும் கோஷத்தை முன்வைத்தது. ஈழத்தின் மண்வாசனையை வெளிப் படுத்தும் இலக்கியங்கள். ஈழத்தைத் தளமாகக் கொண்டு எழுதப்படும் இலக்கியங்கள். ஈழத்தின் பல்வேறு பிரதேசங்களின் வாழ்வியல், பேச்சுவழக்குகள் ஆகியன இடம் பெறுவதை அத்தியாவசியப்படுத்தியது.

'ஈழத்திலக்கியம்', 'மண்வாசனை இலக்கியம்' எனும் கோஷம் காரணமாக 'தேசிய இலக்கியம்' எனும் கோஷம் அடுத்து மேற்கிளம்பியது. அதாவது ஈழம் வாழ் மக்களிடையே நாம் ஒரு தேசத்தினர், ஒரு நாட்டினர் என்ற உணர்வையும் அவர்களுக்கிடையே ஒற்றுமையையும் வளர்ப்பதனையே முக்கியமாகவும் முதன்மையாகவும் கொண்டு செயற்பட்டது. இதனால் 'தேசிய'வாதத்தினை வற்புறுத்தியது. பின்னர் தேசிய இலக்கியத்துக்கு அடிப்படையாக அமையும் யதார்த்தவாதத்தை வற்புறுத்தியது. 1963க்கு பின் யதார்த்தவாதமே சங்கத்தின் முக்கிய இலக்கியக் கோஷமாக இருந்தது.

இன்று பின்நோக்கிப் பார்க்கும் போது இ.மு.எ.சங்கத்துக்குள்ள வரலாறு பூர்வமான சாதனை அது, சமூக அடக்கு முறைக்கு எதிராக அவ் அடக்கு முறைக்கு ஆட்பட்டோரே அணிதிரண்டு போராட ஊக்குவித்தமை தான். அதோடு எழுத்தை ஓர் ஆயுதமாகக் கொண்டு போராடியமை. அதுகாறுமான ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே, அதன் பாரம்பரியத்திலே முதற் தடவையாக நிகழ்ந்த ஒரு விடயம் என்றே இதனைக் கூறலாம்.

சமூக ஒடுக்குமுறைக்கும், பிற்போக்கு வாதத்துக்கும் எதிரான இலக்கியக் கருத்து நிலையாகவே முற்போக்கு வாதத்தை முன் வைத்து அது செயற்பட்டது. யாழ்ப்பாணத் தைப் பொறுத்தவரையில் மு.எ.சங்கம், இலக்கியத்தின் சமூக மயப்பாட்டிற்கும் ஜன நாயக மயப்பாட்டிற்கும் பெரும்பணி ஆற்றியுள்ளது எனக் கூறலாம். வன்னி, மலையகம், திக்குவலை, நீர்கொழும்பு, மட்டக்களப்பு, திருமலை, கண்டி போன்ற பிரதேசங்களில் மு.எ.சங்கத்தின் செயற்பாடுகள் விரவிக் கிடக்கின்றன. ஓர் இலக்கிய புத்துணர்ச்சி ஏற்பட்டு பலர் எழுதத் தொடங்கினர். மட்டக்களப்பில் முஸ்லிம் தமிழர்களுக் கிடையே ஒருமைப் பாட்டைக் கொண்டு வரவும் சங்கம் தொழிற்பட்டது. அதோடு வெவ்வேறு எழுத்தாளர் அமைப்புக்கள் தோன்றுவதற்கும் சங்கம் காரணமாகவும் இருந்தது.

மு.எ.ச. ஆரம்பத்திலிருந்து இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த எழுத்தாளர்களின் இலக்கிய முன்னணியாகத் தொழிற்பட்டது. செயற்குழு உறுப்பினர்கள், செயலாளர்கள் யாவரும் பெரும்பாலும் கட்சியின் அங்கத்தவர்கள். இருப்பினும் சங்கத்தின் அனைத்து அங்கத்தவர்களும் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவர்கள் அல்ல.

தேசியத்தன்மையை வற்புறுத்துவதற்காகவும் தேசிய ஒருமைப்பாட்டுக்காகப் போராடுவதற்காகவும் தேசிய சக்திகளை இணைக்க விரும்பும் ஒரு முன்னணியாகவும் இது தொழிற்பட்டது. இதற்காக அது இயலக் கூடியளவு சகலரையும் உள்ளடக்கிக் கொள்ள வேண்டுமென்ற நிலைப்பாட்டை கடைப்பிடித்த கருத்து நிலை முரண்பாடுடையோர் பலரையும் இணைத்துக் கொண்டது.

உண்மையில், சங்கத்தில் முற்போக்கு வாதத்துக்கான கருத்துநிலை இறுக்கம் கூட ஒரு சிலரிடையே மட்டுமே இருந்தது.

முற்போக்கு எழுத்தாளர்கள் யாவரும் நவீன எழுத்தாளர்களாக இனங்காணப்பட்டனர். தமிழ்ப் பாரம்பரியம் தெரியாதவர்கள் என்றெல்லாம் பழமைவாதிகள் குறைபட்டுக் கொண்டனர். மரபுக்கும், புதுமைக்கும் எதிரான போராட்டம் வெளிப்பட்டது. மரபுப் போர் என துல்லியமாக அடையாளம் காணும் வகையிலும் ஓர் கருத்தியற் போராட்டம் வன்மையாக 60-63களில் நடைபெற்றது.

தமிழ்ப் பாரம்பரியம் தெரியாதவர்கள் என்று கூறி, தமிழ்ப் பாரம்பரியத்தின் பிற்போக்கு சிந்தனைகளின் ஆதிக்கக் கருத்து நிலைகளின் மூலவர்களாகவும், பிரதிநிதிகளாகவும் சமூகத்தின் அதிகாரப்படிநிலையை, ஒடுக்கு முறைகளை கட்டிக்காப்பவர்களாகவுமே பழமைவாதிகள் இருந்தனர். இவர்களே முற்போக்கு புரட்சிகர சிந்தனைகளை எதிர்த்தனர்.

பின்னர் மரபுப்போர் படிப்படியாக ஓய்ந்தது. மு.எ.ச. தொடர்ந்தும் இதனை கருத்தியற் போராட்டமாக முனைப்புடன் வளர்த்துச் சென்றிருக்க வேண்டும். முற்போக்குத் தளத்திலிருந்து புரட்சிகரத் தளங்களை நோக்கி மார்க்சிய கருத்துநிலைப்போராட்டமாக அனைத்து சாத்தியமான வழிமுறைகளிலும் இது முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும். கோட்பாட்டுத் தளத்திலும், கோட்பாட்டாக்கம் செய்யப்பட்டு முன்னெடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இவை எவையும் நடந்தேறவில்லை. முன்னெடுக்கப்படவில்லை.

எழுத்தாளர்களுக்குக் கிடைத்த சமூக முக்கியத்துவம் காரணமாகவும், எழுத்தாளர் சங்க நடவடிக்கை ஈடுபாடு சமூக அந்தஸ்தை வழங்கக் கூடியதாக இருந்ததாலும் தாபன ரீதியில் இயங்கிய ஒரேஒரு எழுத்தாளர் நிறுவனமாக இவ்வெழுத்தாளர் சங்கமே தொழிற்பட்டதாலும் சங்க அங்கத்தவர்களுக்கு கருத்துநிலை இறுக்கம் முக்கியமல்லாது போய்விட்டது. மு.எ.சங்க லேபிள் மட்டுமே இவர்களுக்குப் போதுமானதாகவும் இருந்தது

மு எ ச ஈழத்துத்தேசிய இயக்கம் எனும் கோட்பாட்டினை வளர்த்துச் செல்லும் விதத்திலும் ஈழத்து இலக்கியத்துக்கு ஒரு வரலாற்றுப்பாரம்பரியம் உண்டு என்பதற்காகவும் முதன் முதலில் வற்புறுத்தப்பட்ட ஆறுமுகநாவலர் பின்னர் தேசிய முற்போக்கு இலக்கியத்தின் மூலவராகக் கொள்ளப்பட்டார். புதுமையின் புரட்சிகரத் தன்மையை வற்புறுத்துவதிலும் பார்க்க பழமையின் தொடர்ச்சி வற்புறுத்தப் படத் தொடங்கியது.

தேசிய இலக்கியத்தின் நவீனத்துவத்தையும் சமகால முக்கியத்துவத்தையும் வற்புறுத்துவதற்கு பழமைபேண்வாதிகள் போற்றும் அதே ஆறுமுகநாவலரையே அத்தேசிய இலக்கியத்தின் முன்னோடியாக்கும் முயற்சியை மு.எ.ச. மேற்கொண்டது. இந்தப்பின்புலத்திலே தொழிற்பட்ட பொழுது முக்கியமான மரபு நிலைப்படைப்பாளிகள் முக்கியப் படுத்தப் பட்டனர். முன்னர் சமயச்சான்றோராக மாத்திரம் போற்றப்பட்ட நாவலர் தேசியவீரர் ஆக்கப்பட்டார். இந்தப்புதிய பரிணாமத்துடன் 'சைவமும் தமிழும்' எனும் கருத்து நிலை பழமை பேண் வாதம் தன்னை நிலைபேறுடையதாக்கிக் கொண்டது. 1965-70 காலப் பகுதியிலேயே இது நடந்தேறியது.

முன்னர் நடைபெற்ற மரபுப் போர் தொடர்ந்தும் கருத்தியல் தளத்தில் புரட்சிகர கோட்பாட்டு ரீதியில் முன்னெடுக்கப்பட்டிருப்பின் ஆறுமுக நாவலர் குறித்த மறுமதிப்பீடுகளும் முன்னெடுக்கப்பட்டிருக்க முடியும். ஆனால் இவை எவையும் நடந்தேறவில்லை.

தமிழர் சமூகத்தின் பழமைவாதங்கள், பிற்போக்குக் கூறுகள், மேலாதிக்கம் செலுத்தும் ஆதிக்கக் கூறுகள் யாவும் இனங்காணப்பட்டு அவற்றுக்கெதிராக விடாப்பிடியாக போராட்டம் நடைபெற்றிருக்க வேண்டும். தமிழ்ச் சமூகம் அதன் சமூக உருவாக்கம் குறித்த கோட்பாட்டு ரீதியான புரிதல்களை நோக்கி நகர்த்தப்பட்டிருக்க வேண்டும். இவையெவையும் செய்யப்படவில்லை. உண்மையிலேயே முற்போக்குவாத இயக்கமாகவும், மார்க்சிய இயக்கமாகவும் இருந்திருந்தால் இவை சாத்தியப்பட்டிருக்கக் கூடும்.

மு.எ.சங்கத்தினர் வெறும் கதம்ப கூட்டமாகவும் பழமைவாதங்களோடு சமரசம் செய்பவர்களாகவும் கருத்து நிலை தெளிவு இறுக்கம் எதுவும் இல்லாதவர்களாகவுமே மாறிக்கொண்டிருந்தனர். முற்போக்கு வாதத்தின் அடிநாதமான சமூகச் சமமின்மையை எதிர்ப்பதிலும் பார்க்க சமூக சமரசத்துக்கு இடம்கொடுத்தனர். ஆதிக்க கருத்து நிலைகளுக்கு பலியாகினர்.

மு.எ.ச. ஒரு கொள்கை நோக்கைக் கொண்டு இயங்குவதாகக் கருதப்பட்டது. இதனால் அந்தக்கொள்கைகளை விளக்கி அதற்கும் படைப்புகளுக்குமுள்ள இயைபு இயைபின்மைகளை எடுத்துக்கூறும் விமரிசன முறைமை இங்கு முதன்மைப்பட்டிருந்தது.

கொள்கை நோக்கு படைப்புகளில் தெரியும் முறைமைபற்றிய விமரிசன சிரத்தையே மேலோங்கி நின்றமையால் அந்த விமரிசன எழுத்துக்களில் கொள்கை நோக்கு பிரதானப்படுத்தப்பட்டிருந்தது. இதனால் எந்தவொரு தனிப்பட்ட படைப்பாளிகளின் படைப்பாக்கம், படைப்பாளுமைகள் குறித்தும் பார்க்கப்படவில்லை. கொள்கையினை எடுத்துக்கூறுவோர் என்ற வகையில் எழுத்தாளர்களின் பெயர்கள் மட்டுமே இடம்பெற்றன. இப்போக்கே பட்டியல் விமரிசனம் தோன்றவும் வழிவகுத்தது.

மேலும் 1965க்கு பின் தொடக்க கால படைப்பு உத்வேகம் மெல்ல மெல்ல குன்றத் தொடங்கிற்று. விமர்சகர்களும் இதனை இனங்கண்டு கொள்ளாமல் திரும்பத்திரும்ப பட்டியல் போடும் விமரிசனத்தின் மூலம் படைப்பாளிகளைத் தூக்கி நிறுத்திக் கொண்டிருந்தனர்.

1970-75களில் படைப்பிலக்கியப்போக்கில் மெதுவாகத் தளர்வு ஏற்படத் தொடங்கியது. இக்காலத்தில் படைப்பு முயற்சிகளை விட விமர்சனம் மாத்திரமே முன்னணியில் மேலோங்கி நின்றது.

1963களில் பொதுவுடமைக் கட்சிக்குள் ஏற்பட்ட பிளவு மு.எ.சங்கத்தை பெரிதாகப் பிளவுபடுத்தவில்லையாயினும் இருபிரிவுகளிலும் எழுத்தாளர்கள் இருந்தமையால் சங்கத்தின் ஒருமைப்பட்ட இயக்கவேகம் குன்றத்தொடங்கியது. முற்போக்கு இயக்கத்தின் தாக்கமும் படிப்படியாக குறையத் தொடங்கியது.

இலங்கையின் அரசியலில் 1956 முதல் இனவாதம் வெளிப்படையாக அரங்கேறத் தொடங்கியது. 1963களின் பின் இனவாத அரசியல் இடதுசாரிகளையும் தழுவத் தொடங்கியது. இடதுசாரிகள் வர்க்க அரசியலுக்கு அப்பால் இனவாத அரசியலுக்குள் வீழ்த்தப்பட்டனர். இழுபடத் தொடங்கினர். இடதுசாரி அரசியல் பெரும்பான்மை மக்களுக்கான அரசியலாக மாறியது. சிறுபான்மை மக்கள் ஓரங்கட்டப்பட்டனர். ஈற்றில் தமிழ் இடதுசாரிகள், சிங்கள இடதுசாரிகள் என இடதுசாரி அரசியல் பிளவுபட்டது. இது 1970களின் பின்னர் துல்லியமாகவே வெளிப்பட்டது.

மு.எ.சங்கத்தை மேற்குறித்த பின்னணியும் பாதித்தது. அது மாத்திரமல்ல மு.எ.ச. தமிழர்களின் அரசியல் விடயங்கள் குறித்து தீர்க்கமான நிலைப்பாடுகளுக்கு வரமுடியா தளவிற்கு கருத்துத்தெளிவு அற்று இருந்தது. இன்னொரு விதத்தில் யதார்த்தத்தை புரிந்து செயலாற்றும் பண்பு கொண்டதாகவும் இருக்கவில்லை. படிப்படியாக சீரழிந்து சிதையத் தொடங்கியது.

மேற்குறித்த பின்புலங்களிலிருந்து மு.எ.ச. வளர்ச்சி அடைய முடியாத அமைப்பாகவே இருந்தது என்பது தெட்டத் தெளிவாகின்றது. இந்நிலையில் மு.எ.சங்கத்தை எதிர்க்கும் போக்குகள் வெளிப்படையாகின. (இவை பற்றி தனியாக பார்க்கப்படவேண்டும்) 1963ல் தொடங்கி 1970களின் பின்னர் இது அகற்சி பெறத் தொடங்கியது.

வரலாற்று ரீதியில் நோக்கும் போது 1970 களின் பின்பு மு.எ.ச.இலக்கிய அணுகுமுறைக்கும் பயில்வுக்கும் என எத்தகைய முன்மொழிவுகளையும், கோஷங்களையும் முன்வைக்க வில்லை. 1950-70களில் ஏற்படுத்திய தாக்கத்தின் செழுமையும் அந்தத் தொடர்ச்சியின் செழுமையுமே மு.எ.சங்கத்தை இன்று வரை முதன்மைப்படுத்துகிறது. இக்கால பணிகளின் தேட்டத்திலேயே பின்வரும் வரலாற்றைக் கடக்க முற்பட்டனர். இது இன்றுவரை தொடர்கிறது. சுயவிமரிசன நோக்கில் சங்கத்தை மீள்நோக்கிப் பார்க்கும் திறனை அடியோடு கைவிட்டனர்.

1970களின் ஆரம்பத்தில் ஒரு சில புதுத்தலைமுறையினரைத் தவிரவும் 80களில் எந்தவொரு புதுத்தலைமுறையினரும் மு.எ.சங்கத்துடன் இணைந்து செயற்பட்டதாகத் தெரியவில்லை. பின்வந்த தலைமுறையினரும் மு.எ.சங்கத்துடன் இணைந்து செயற்பட்டதாகத் தெரியவில்லை. அவர்கள் மு.எ.சங்கத்துடன் தங்களை அடையாளப் படுத்திக் கொள்வதைக்கூட விரும்பவில்லை. இவர்களும் புதிய தலை முறையினரை திரட்டுவதற்கான அக்கறையும் திட்டங்களும் இல்லாமலேயே உள்ளனர்.

1972-75காலப்பகுதியில் அரசியல் நடைமுறைத் தெளிவு இன்மையும் சித்தாந்த மயக்கங்களும் இன்னும் அதிகம் விரவிக் காணப்பட்டன. இவை பொதுவுடமைக் கட்சிகளை நிரம்பவும் பாதித்தன. எப்போதும் பொதுவுடமைக் கட்சிகள் கூட்டு அரசாங்கம் அமைத்து ஆட்சி புரியும் காலங்களில் எல்லாம் அரசின் பங்குதாரர்களாக இருந்து செயற்பட்டவர்கள். இக்காலங்களிலேயே தமிழர்களின் அரசியல் படிப்படியாக பறிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியில் மு.எ.ச தமிழர்கள் மத்தியில் இருந்து அந்நியப்படத் தொடங்கியது. அதற்கு முன்னர் எதிர்நோக்காத எதிர்ப்புகளுக்கும் முகங்கொடுக்க வேண்டியிருந்தது.

இன்று 95 ன் பின்னர் கூட பொ.ஐ.மு. அரசாங்கத்தை நியாயப் படுத்தும் அரசியலை முன்வைப்பவர்கள் அரசாங்கத்தின் பங்குதாரர்களாக வர ஆசைப்படுபவர்கள். அடிவருடிகளாக இருப்பவர்கள். மூன்று நான்கு பேர்கள் மட்டும் இருந்து கொண்டு மு.எ.சங்க அடையாளத்துடன் தமிழ் எழுத்தாளர்களைப் பிரதிநிதித்துவம் செய்வது என்ற மாயையை கொடுத்துக் கொண்டே தம் நலன்களை அடைவதில் குறியாக உள்ளனர். மு.எ.ச. என்ற பெயரை பயன்படுத்தி பயன் பெறவே இன்று சங்கம், இந்தக் குறியீடு, சொல்லாடல் யாவும் பயன்படுகிறது

1950 -70களின் தொடக்கம் வளர குறித்த பங்களிப்புப் பாத்திரமும் ஆற்றியவர்கள் 70களின் பின்னர் தீர்க்கமான நிலைப் பாடுகள் எதனையும் உருவாக்கி செயற்பட முடியாதவர்களாகி விட்டனர்.

மு.எ.ச. முற்போக்குச் சிந்தனைத் தளத்தில் கூட ஆழமாக வேரூன்றி அதன் அடுத்த கட்ட வளர்ச்சியாக மார்க்சிய கருத்துநிலை வளர்ச்சிக்குச் சென்றிருக்க வேண்டும். அவ்வாறு போகும் போது மார்க்சியத்தில் ஏற்பட்ட வளர்ச்சிகள் குறித்தும் தெளிவற்றிருக்கும் மார்க்சிய படைப்பாளர்கள் குறித்தும் அக்கறைப்பட்டிருப்பர் ஆனால் இவை யாவும் சாத்தியப்படவில்லை. இலக்கிய விழாக்கள் விமர்சனம், விமரிசனக் கோட்பாடுகள் குறித்த சிந்தனைகளுக்கும் உரையாடல்களுக்கும் கூட இவர்கள் போகவில்லை. எழுத்தாளர்கள் தங்களை வளர்த்துக்கொள்ளவில்லை. விமர்சகர்கள் இவர்களை வளர்த்தெடுப்பதற்கான எந்த வித முயற்சிகளிலும் ஈடுபடவில்லை. தமது அணி சார்ந்தவர்கள் என்ற காரணத்தினால் மட்டுமே சிறந்த படைப்பாளர்களாக வெளிப்படுத்தப்பட்டனர்

1970களின் பின்னர் எழுத்தாள்மை பற்றிய ஆழமான பிரச்சினைகள் பற்றி விவாதிப்பதற்கான களங்கள் தேவைப்பட்டும் அதனை நிறைவேற்ற முடியாதவர்களாகி விட்டனர். பல்வேறு பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்கொண்டனர். ஆனால் இவர்களுடைய புலமைத்துவ ரீதியான வளர்ச்சியின்மையால் சவால்களை எதிர்கொள்ள முடியாமல் போய்விட்டனர்.

இன்று மு.எ.சங்கத்துள் முன்னரே தோன்றிய கருத்துநிலை இறுக்கமின்மை வளர்ச்சியின்மைகள் யாவும் வளர்ந்து சீரழிந்த போக்காகவே மாறியுள்ளது. பழமைவாதங்களின் பிற்போக்குத்தனங்களின் புகலிடமாகவும், மறுவுற்பத்தி செய்யும் கருத்தியல் தளமாகவும் மாறியுள்ள கம்பன் கழகத்தோடு கூடிக்குலாவும் அதன் நிழலில் தம்மை இணைத்து நிற்கவும் முடிகிறது.

முற்போக்குவாதத்துக்கு எதிராகவோ மார்க்சியவாதத்துக்கு எதிராகவோ இந்தக் கட்டுரை எழுதப்படவில்லை முற்போக்கு புரட்சிகர சக்திகளின் கூட்டு வரலாற்றியல் தேவையாக, அவசியமாக மாறியுள்ளமையினால் புதிதாக சிந்தித்து இணைந்து செயலாற்றுவதன் மூலம் முற்போக்கு அமைப்பின் அவசியத்தை உணரவும் செயற்படவுமே மு.எ.ச குறித்து மீள்பார்வை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# இனியும் சூல் கொள்: அதிகாரத்திற்கு எதிராக!




## ஆர்.எம். ஸ்ராலின், பாரிஸ்

தமிழ்ப் 'பயங்கரவாதம்' இலங்கையிலிருந்து இந்தியாவைத் தொட்டது மட்டுமன்றி ஐரோப்பா உள்ளிட்ட அனைத்து புகலிட சூழலுக்கும் தாவி விட்டதென்ற வரலாற்றுப் பழியைச் சுமக்க வேண்டிய இழிவுநிலையை உரத்துச்சொன்னதோடு சபாலிங்கத்தின் உயிர் பிரிந்தது மறக்கமுடியாத உண்மை. இவரின் நினைவுகட்கு சமர்ப்பணமாய் ஐரோப்பாவிலிருந்து 23வது இலக்கியச்சந்திப்புக்குழுவினரின் கடின உழைப்பில் வெளிவந்திருப்பதே ''இனியும் சூல் கொள்'' என்ற தொகுப்பு மலராகும். அண்மையில் பாரிஸின் புறநகர்ப் பகுதியான ''கார்ஜ் லே கோணேஸ்'' எனும் இடத்தில் இடம்பெற்ற புலம்பெயர் எழுத்தாளர்களின் 23வது இலக்கியச்சந்திப்பு நிகழ்வில் வெளியிடப்பட்ட இம் மலரானது ''தமிழ் புலம்பெயர் இலக்கிய'' சூழலில் வெளிவந்தமை ஓர் குறிப்பிடும் படியான தடமாகும். பொதுவாகவே இவ்வுலகின் மானுட வரலாறென்பது மனித சாசனங்களுக்கிடையேயான அதிகாரப் போட்டியாகும். அதை அழகாய் மார்க்சின் வரிகளில் சொன்னால் ''வர்க்கங்களுக்கிடையேயான போராட்டம்'' எனலாம். இவ் அதிகார வர்க்கத்தினரின் ஆளுமைகளைத் தொடர்ந்து பாதுகாக்கவே உலகின் அதிக எழுத்தாளர்களின் எழுத்துக்கள் பயன்படுவது நாம் கண்ட உண்மை. இருப்பினும் மனிதாபிமான ஜனநாயக உரிமைகட்கான குரல்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் ஈனஸ்தாயியிலேனும் ஒலிக்காமலில்லை. மத நிறுவனங்களால் கட்டமைக்கப்பட்ட ஒழுங்குகள் அனைத்தும்அரசு பற்றிய தெய்வீக உரிமைக் கோட்பாட்டை உயர்த்திப் பிடிக்க உதவியது போல் மொழி, கலை, கலாசாரம் என்று அனைத்தும் ஆளும் கருத்தியல்களின் இருப்பை பேணிக் காக்கவே பயன்படும் இச்சூழலில் இவ்வாறான ஈனக்குரல்களாய் எழுதும் எழுத்துக்கள் பிற்காலத்தில் பொன்னால் பொறிக்கப்படுவதும் உண்டு. இவ்வாறான எழுத்துக்காய் கொல்லப்பட்ட செல்வி தொடக்கம் ராஜினி வரை நினைவு கூர்ந்து எழுதப்பட்ட அந்த ஆங்கிலக் கவிதையும், அதன் தமிழாக்கமும் மலரின் முன்பக்கத்தை நிரப்பும் போது அதனிடையே வந்து போகும் வணபிதா லோங்கும், பாத்திமாவும், சிவரமணியும் நம் நாட்டின் ச(ன்)னநாயகத்தை அப்படியே படம் பிடித்துக்காட்டுகின்றனர். இக்கவிஞை மல்லிகா இதுவரை எங்கிருந்தார்? இப்படிப்பட்ட சிறப்பான கவிதைகளை ஏன் தரவில்லை? என்ற கேள்வியும் கூட வருவது தவிர்க்க முடியாததே. அதற்குப்பதிலாகவே பொறுக்கியினுடைய ''பூக்களும் Bulletsம்'' என்ற கவிதை அமைகிறது.

இக்கவிதையில் எவ்வாறு ஐரோப்பிய புலம்பெயர் சூழலிலும் அராஜகம் மேல் ஓங்கும் கொலைத்தனமிக்கதோர் குட்டி யாழ்ப்பாண இராச்சியமாய் யாரும் பேசமுடியாத மடந்தைகளாய் வாழ்ந்து கொண்டிருப்பதையும் அத்தகைய சூழலில் ஓர் மாற்றுக் கருத்துக்காரனின், மக்கள் புரட்சிக்காரனின் குரல்கள் இறுக்கப் பட்டு இருக்கும் வேதனையையும் செப்பும் அழகு....

*காற்று பலமாக வீசுகிறது*
*அவர்கட்கு சாதகமாய்*
*என் இதழ்கள் படபடக்கின்றன*
*எந்நேரமும் இந்த மண்ணில்*
*உதிரலாம்*
*முட்கள் இறைச்சிக் கேங்கிய நரியாய்*
*நான் என் மகரந்தங்களை*
*காப்பாற்றியபடி.*

இத்தகைய நெருக்கடியான சூழலில் விரும்பியோ விரும்பாமலோ இங்குள்ளோரின் போலித்தனமிக்க தேசப்பற்று பற்றிய கௌரிமனோகரனின் புதியகணக்கு ''பாதுகாப்பு + பம்மாத்து = தேசப்பற்று'' என்ற அவரது கவிதையில் வெளிக்காட்டப் படுகிறது. அதாவது தம்பியும், தனயனும் வெளிநாடுகளில் சுகமாக வாழ்ந்து கொண்டு யாரோ ஒருவனைக்கொண்டு தமிழீழம் பெறத் துடிக்கும் யாழ்ப்பாணத் தமிழனை இப்படிச் சாடுகிறார்...'

*தென்தமிழீழச்*
*சிறார்களைக்கொன்றாவது*
*தமிழீழம்.....*
*ஏனெனில்*
*நான் தேசப்பற்று மிக்க*
*தமிழன்.*

மேலும் இப்படிப்பட்ட சூழலில் வாழும் மக்களைப்பார்த்து இன்னுமொரு கவிஞன் சுகன் சொல்கிறார் இப்படி....

*எவரும் எவராலும் எவ்விடத்திலும்*

*கொல்லப்படவில்லையென்கிற*
*எவரும் எவராலும்*
*எவ்விடத்திலிருந்தும்*
*துரத்தப்படவில்லையென்கிற*
*எவரும் எவரது தாலியையும்*
*அறுக்கவில்லையென்கிற*
*எவரும் எவரையும் எட்டுக்கு*
*வைக்கவில்லையென்கிற*
*எவரும் எவரொருவரது*
*கொலையையும்*
*ஏற்றுக்கொள்ளவில்லையென்கிற*
*எப்போதும் எல்லாவற்றுக்கும்*
*காரணங்களை வைத்திருக்கிற*
*இந்த மக்கள் என்னை மிரட்டி*
*வைத்துள்ளனர்.*

இத்தனைக்கும் மத்தியில் தேவிகணேசன் தனது ''காயம்பட்டு'' எனும் கவிதைமூலம் ஓர் நம்பிக்கை நாற்றை நட முனைகிறார் எம் சமூகத்தின்மேல். மக்களுக்கான எழுத்து என்பது மீண்டும் வரும், மனிதாபிமானத்தின் விழுமியங்களைத் தேடிப்பிடித்து அது கொண்டு வரும் என்று அறுதியிட்டுக்கூறுகின்றார் இப்படி...

*கோபம் தலைக்கேற*
*எழுத்துக்கும் கருத்துக்குமாய்*
*காணாமல் போனவர்களின்*
*வரிசையில்*
*என்னையும் சேர்த்து விட்டு*


*எவனுக்கோ பய்ந்து*
*எழுத முடியாமல் போன*
*தலைப்புக்களைத்*
*தேடிக்கொண்டிருக்கிறேன்.*

இது நிச்சயம் ஆளும் கருத்தியல்களின் அதிகாரக் கட்டமைப்புக்குள் சோரம் போய்விட்டு துதி பாடும் கவிஞர்களுக்கு ஓர் புதிய சவால். மற்றும் இளவாலை விஜேயேந்திரன், ரஜீன்குமார் போன்றோரது சிறந்த பல கவிதைகளும் மலரில் காணக்கிடைக்கின்றன. இதே போன்று மணிவண்ணன் எனும் கவிஞர் ஐரோப்பிய தொழிலாளர்களை நோக்கி தனது வர்க்கப் பார்வையை திருப்பும் விதம் ஓர் நல்ல பதிவு என்பதோடு எம் ஒவ்வொருவர் மனதில் வர்க்கப்புரட்சியின் அவசியத்தையும் அதன் நியாயப்பாட்டையும் தெளிவுபடுத்தியுள்ள விதம் மிகவும் பாராட்டத்தக்கது. தமிழ் நாட்டிலிருந்து தாடகை எழுதிய கவிதையும், ஜேர்மனியில் வாழும் பெண்ணியவாதியான ரஞ்சனியின் ''இருப்பு'' என்ற கவிதையும் ஆணாதிக்க வாதிகளுக்கு சவுக்கடி என்றுதான் கூற வேண்டும். இந்தவகையில் நிலா வெளிக்கைலையின் ''இடம்மாறும் அசோகவனங்கள்'' என்ற கவிதையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அரசியல், பெண்ணிலைவாதம், அகதித் தொழிலாளரின் நிலை என்றும், இனிய எம் நாட்டு நினைவுகளை மீட்டும் திருமாவளவன் கவிதைகள் தயாநிதி,... என்று நீளுகிறது கவிதைப்பட்டியல்.

சிறுகதை வரிசையைப் பார்ப்போமாயின், புதிய வரவுகளாக ஏ.எம். ஜாபிர், உதயசேனன் என்பவர்களது சிறுகதைகள் எமது நேர்கோட்டு கதை சொல்லும் மரபினை தூக்கி வீசிவிடுகின்ற நிலைமையை அவதானிக்க முடிகின்றது. இவை சிறுகதை இலக்கிய உலகிற்கு தேவையான ஓர் நல்ல சகுனமாகும். பாரிசில் புதிதாக தடம் பதித்துவரும் ஓர் சிறந்த சிறுகதையாளரான ஷோபாசக்தி அவர்களின் ''தேவதை சொன்ன கதை'' உண்மையிலேயே ஒரு கதை தான். கதை கட்டிக்கொண்டிருக்கும் பல எழுத்தாளர்கள் இவரின் கதைகளை முதலில் வாசிக்க வேண்டும். மற்றும் படைப்புக்கள் ஓர் வாசகனால் படித்து முடிக்கப்பட்ட நிமிடத்திலிருந்துதான் உருவாகத்தொடங்குகின்றன என்பதைத் தனது ''பிடி'' என்ற சிறுகதையின் மூலம் அடித்துச்சொல்லியுள்ளார். கலாமோகன் ''கனி'' என்ற இன்னுமொரு சிறுகதையினையும் அவருக்கேயுரிய மொழியில் எழுதியுள்ளார். ''காற்றில் ஓர் செய்தி'', ''கொள்ளிக்கு வந்த தேக்கு'' எனும் சிறுகதைகளை நோக்கினால் தமிழர்களுக்குள் மலிந்து விட்ட அரசியல் கொலைகள் பற்றி விபரிக்கின்றன. எம் சமூகத்தை கேள்வி கேட்கின்றன. என்னதான் இருந்தாலும் இம்மலர் வெளியீட்டுக் குழுவினர் மற்ற பல கதைகளை தவிர்த்திருக்கலாம் போல் உள்ளது. சில வேளை பேர்பெற்ற எழுத்தாளர்கள் என்பதாலோ என்னவோ? தெரியவில்லை. இப்படியான சிலரது சிறுகதைகள் என்ற சில பிதற்றல்களுக்கு இடம்கொடுக்காமல் விட்டிருந்தால் மேலும் பல தேவையான விடயங்கள் மலரில் இடம் பெற்றிருக்க முடியும் என்பதை சொல்லாமல் இருக்க முடியவில்லை. குறிப்பாக ''சிறுமிகள்'' என்ற கதை மொழிபெயர்ப்புக்கதையானாலும் அதன் அவசியம் உணர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது பாராட்டத் தக்கதொன்று. இதே போன்ற மொழி பெயர்ப்பு விடயங்களாக வாசுதேவன், சுசீந்திரன், பிரணவி குணசீலன் போன்றோரது ஆக்கங்கள் சிலவும் மலரில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கன.

கட்டுரைகளை நோக்கின், முன்னுரைகளையே வைத்து கட்டுரை வடித்துள்ள நீர்கொழும்பு முத்துலிங்கமும், யாருடைய கலைகள் யாருடைய கடவுள்கள் என்று கேள்வி எழுப்புகின்ற சி. சிவசேகரத்தின் கட்டுரையும் பலரும் வாசிக்கவேண்டியவை. செபஸ்தி

→19



'புலம்'
இரு மாத இதழ்
ஆசிரியர் இரவி அருணாசலம்
வெளியீடு:
IBC - Tamil
P.O. Box - 1505
London SW8 2ZH

லண்டன் ஐ.பி.சி, தமிழ் ஒலிபரப்புச்சேவையினர் புலம் என்ற இரு மாதங்களுக்கொருமுறையான சஞ்சிகையொன்றை வெளியிட்டுள்ளனர். புலம் -1 தை, மாசி இதழாக வெளிவந்துள்ளது. ஈழத்திலிருந்து அண்மையில் புலம் பெயர்ந்த படைப்பாளியும், சரிநிகரின் முன்னாள் ஆசிரியர் குழு உறுப்பினருமான இரவி அருணாசலம் புலத்தின் பொறுப்பாசிரியராகச் செயற்படுகிறார்.

*'நாமும் நிலத்தினது நல்வாழ்விற்கு நம்மாலான பணிகள் நடத்திடுவோம் சும்மா இரோம்...'' என்று கூறும் புலம்* தன்னை சிறந்த முறையில் கொண்டு வர பல பிரயத்தனங்களை எடுத்திருந்தது. எனினும் கால அவகாசமும், படைப்பாளிகளின் பங்கேற்காமையும் புலத்தின் கனதியைக்குறைத்துள்ளது. நன்றி கூடத்தெரிவிக்கப்படாமல் பல மீள் பிரசுரங்கள் இடம்பெற்றிருக்கின்றன. ஒரு நல்ல இதழுக்கான அமைப்பு வடிவத்தைக் காட்டுவதற்காக இவ்வாறு செய்திருக்கலாம். எனினும் போதிய வளங்கள் உள்ள புலம் புதிதாய் எதையும் செய்ய வேண்டும் எனத்தான் எதிர்பார்க்கிறோம்.

'புலம்' இரவி, படைப்பாளிகளுக்கு இவ்வாறு கோரிக்கை விடுக்கிறார்.

*'நட்புள்ளவரே,*

*நாங்கள் (ஐ.பி.சி.) 'புலம்' எனப் பெயரிட்டு இப்போதைக்கு இரு மாதங்களுக்கு ஒரு இதழ் வெளியிடுகிறோம். உங்கள் இதழான 'புலம்' இன்னும் வளம் பெறும் பொருட்டு இப்போதும் இனியும் படைப்புகளை அனுப்பிவைக்கும்படி தயவுடன் வேண்டுகிறோம். நீங்கள் எழுதாவிட்டால் இதழின் தரம் தாழும் என்பதில் சந்தேகம் இல்லை. படைப்புக்களை விரைந்து அனுப்பி வையுங்கள்.*

*உங்களை நம்புகின்றோம். எங்களை நம்புங்கள்.*

**ஷப்சே.**

1994க்குப்பிறகு சரிநிகர், மூன்றாவது மனிதன், இந்தியா டுடே, குமுதம், சுபமங்களா, நந்தலாலா, அகதி ஆகியவற்றில் வெளியான கவிதைகளையும், ஏற்கெனவே வெளியான ''ஒரு அகதியின் பாடல்'' தொகுதியிலிருந்து ஒரிரு கவிதைகளையும் சேர்த்து ஜெயபாலனின் அண்மைக்காலக் கவிதைகளை, எம்.பௌஸரின் 'மூன்றாவது மனிதன்' வெளியீட்டகம் அழகியவொரு தொகுப்பாக வெளிக்கொணர்ந்துள்ளது.




**உயிர்த்தெழுகிற கவிதை**
வ.ஐ.ச.ஜெயபாலன்
வெளியீடு:
மூன்றாவது மனிதன்
27, ஏ.வீ.வீ. வீதி
அக்கரைப்பற்று -02
(32400)
விலை: 80/= ரூபா

தொகுப்பின் அநேக கவிதைகள் 1990ல் புலிகளால், யாழ், மண்ணிலிருந்து பலவந்தமாக விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம் மக்களின் துயர்களைப் பற்றியும், தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையிலான இன ஐக்கியத்தின் அவசியத்தையும் உரத்துப் பேசுகின்றன.
கவிஞர் ஜெயபாலன் தொகுப்பின் முன்னுரையில்....

''எரிந்த வீடுகளின் புதிய கூரையில் பறவைகள் பாடவும், கொல்லப் பட்டவர்களது புதைகுழிகளில் புதிய மலர்கள் மலரவும் நான் பிரார்த்திக்கின்றேன். புதிய பறவைகளது பாடல்களும், புதிய மலர்களது வாசனையும், எரிந்த வீடுகளில் பிறந்து வளர்ந்த இளைய முஸ்லிம்களையும், தமிழர்களையும் ஒன்று சேர்க்கும். இறந்தவர்களது புதை குழிகளில் கண்ணீர் வடித்த முஸ்லிம் பெண்களதும், தமிழ்ப் பெண்களதும் மனசை நிறைய வைக்கும்.

இதைவிட எனக்கு எதுவும் வேண்டியதில்லை.

இது மட்டுமே எனக்கு வேண்டியது'' என்கிறார்.


எமக்கு வேண்டியதும் இவை நாமே.

**நாசாத்தி.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## பொறுமை இழக்க வேண்டும் !

சரிநிகர் 141வது இதழில் வெளிவந்த கௌசீகன் எழுதிய 'தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தம்' பற்றிய கட்டுரையை வாசித்தேன்.

தனியார் மயமாக்கலின் பின் தோட்டத் தொழிலாளர்தளுக்கு இருந்து வந்த வேலைப்பளுமேலும் கடுமையாக்கப் பட்டுள்ளது. வேலைப்பளுவை சுமக்க முடியாமலும் வாழ்க்கைச் செலவை சமாளிக்க முடியாமலும் தொழிலாளர்கள் துவண்டு போயுள்ளார்கள்.

இந்நிலையில் தோட்டத்தொழிற் சங்கங்கள் வரிந்துகட்டிக்கொண்டு ரூ.105/= சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டன. கௌசீகன் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளதுபோல் மலையகத் தொழிற்சங்கங்கள் அரசாங்கத்திற்கும், தோட்ட முதலாளிகளுக்கும் முதுகு சொறிந்ததன் விளைவு, தாம் முன்வைத்த அற்ப தொகையில் ஒரு ரூபாவை ஏனும் வென்றெடுக்க முடியாமல் போயுள்ளன.

குறிப்பாக தலைவர் தொண்டமான் காட்டிக்கொடுத்த வரலாற்றை காப்பாற்றி விட்டார். இந்த வேலை நிறுத்தமானது ஓர் புதிய வரலாற்றை படைக்கப்போனபோது தலைவர் தனது வரலாற்றை தொழிலாளர்கள் மாற்றிவிடுவார்களே என்று பயந்து மீண்டும் தொழிலாளர்களை காட்டிக கொடுத்ததன் ஊடாக தனது வரலாற்றைக் காப்பாற்றிக்கொண்டார் என்றே தோன்றுகிறது.

ஏனைய தொழிற்சங்க தலைமைகளும் தலைவர் தொண்டமான் ஓய்வெடுத்த ஒவ்வொரு நாளும் அவருக்கு எதிராக தாமும் ஓய்வெடுத்துக் கொண்டனரே தவிர வேறெதும் செய்யவில்லை. எல்லா மலையகத் தொழிற் சங்கங்களும் மலையக மக்களை ஏமாற்றி வருகின்றன என்பதை புரிந்துக்கொண்டு பொறுமையை இழக்க வேண்டும், மலையகத் தொழிலாளர்கள்.

மக்கள் பொறுமையை இழக்கும்போது தான் மலையகத்தில் ஓர் மக்கள் புரட்சி ஏற்பட்டு அவர்களே அவர்களது இருட்டை கிழித்துக்கொண்டு வெளிச்சத்துக்கு வரமுடியும்.

இப்போது மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக தமது பொறுமையை இழந்து கொண்டே வருகின்றனர். இதற்கு சரிநிகர் செய்து வரும் பணியின் ஓர் துளியே கௌசீகனின் கட்டுரையும் என்பதை கட்டுரையை வாசித்து முடித்த போது என்னால் உணர முடிந்தது.

***இரா. புஷ்பகாந்தன், பசறை***

## சமாதான வியாபாரிகளை மன்னிக்கலாமா ?

மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு பற்றி நல்ல விமர்சனம் ஒன்றை தந்த பொன். வேந்தனுக்கு என் பாராட்டுக்கள். தமிழின் பெயரால் யாசிக்க புறப்பட்டிருக்கும் பல பெரிய மனிதர்கள் மற்றவர்களை பற்றி கிஞ்சித்தும் சிந்திப்பதில்லை. பூனை கண்களை மூடிக்கொண்டால் பூலோகம் இருண்டு விடுமா என்ன? வாரிதிகளும் பகடைக்காய்களும்...

இது ஒரு அலசல் அருமையாக விருந்தது. பொது தேவையையும், முற்போக்கான கோட்பாடுகளையும், தமது சுய கசப்புக்களினால் விமர்சனம் செய்பவர்களும், நிகழ்வுகளை சீர்தூக்கி பார்த்து அப்பொது தேவையின் அவசியத்தை வாசகர்களுக்கு தரும் புத்திஜீவிகள் பத்திரிகையாளர்களை புலிச்சாயம் பூசி பார்க்கும் பல ஆசாமிகளுக்கு வரலாறு நல்ல பாடத்தை கற்பிக்கத்தான் போகிறது.

செம்பாட்டானின் 1972அரசியல் திட்டம் பற்றிய அலசல் நன்றாக இருந்தது. திட்டமிட்ட பௌத்த பேரினவாதம் கட்டங்கட்டமாக தன் இலக்கை அடைய எமது எட்டப்பர்களும் துணை போயுள்ளார்கள். அவர்களையும் மன்னிக்கலாம். ஆனால் ஜனநாயக அரசியல்வாதிகளையும், சமாதானத்திற்கான யுத்தத்துக்கு மறைவில் இருந்து முண்டு கொடுக்கும் (சமாதான) யுத்த வாதிகளையும் மன்னிக்க முடியுமா?

நீண்ட காலத்திற்கு பின் நல்ல ஒரு சிறுகதை வாசித்த திருப்தி, 'புரிதலும, புரிதல் புரிதலும்' நல்ல அருமையான கரு. ஆழமாகச் சிந்திக்க வைத்தது. இப்படியான கதைகளுக்கு முன்னுரிமை கொடுங்கள். ''சரிநிகர்'' எனும் பத்திரிகையில் இப்படியானவைகளைத்தான் நாம் எதிர்பார்க்கிறோம். பல கோணங்களான நிகழ்வுகளை தோலுரித்து காட்டுவதாக சரிநிகரின் ஒவ்வொரு அம்சமும் இருக்கட்டும்.

குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே... முற்றிற்று. அதைபோல் இன்னொரு தொடரை தொடங்கினால் சிறப்பாக இருக்கும். அதாவது மனோவியல் சம்பந்தமான தொடர்.

***கேகாலை மலர், கேகாலை***

## புரியவையுங்கள் !

1998 ஜனவரியில் வெளியான சரிநிகர், இதழ் 139இல் மலையகப் பகுதியில் மலையகத் தமிழர்களின் வரலாற்று தடயம் என்னும் கட்டுரையை வாசித்தேன். மலையகத்தின் உழைப்பாளியான நான் பூரண விளக்கம் பெற மீண்டும், மீண்டும் வாசித்தேன். எனது மனப்பலத்தை பலப்படுத்த நானே கேள்விகளை கேட்டுக்கொண்டேன். ஆனால், விடை காண முடியவில்லை. ஆனாலும் கட்டுரையாளரினால் நான் பிறந்த சில வருடங்களில் நடந்த, நான் அறியாத மூதாதையரின் சோகக் கதையை அறிந்து கொண்டேன்.

1948ஆம் ஆண்டுக்கான பிரசாவுரிமை சட்டம் எங்களின் கண்களை குருடாக்கியமை.

1964இல் எங்களது மாகாணம் முதலாவதாக அடிமை சாசனமாக கைச்சாத்திடப்பட்டமை.

1974ல் இரண்டாவது அடிமை சாசனம் நிறைவேற்றப்பட்டமை என்பன எனக்கு என்ன என்றே தெரியாது. எனக்கு மட்டுமல்ல எனது தலைமுறைக்கே தெரியவைக்க புரியவைக்க முடியும் என நம்புகிறேன். மலையக மக்களுக்காக எவ்வளவோ குரல் கொடுத்து வருகின்ற சரிநிகர் இதற்கும் வழியமைக்குமென நம்பி காத்திருக்கிறேன். வழி அமைப்பீர்களா?

***மு.கனகதாசன், பொகவந்தலாவ***

## அட்டன்..

அறவிடுகின்றனர். தனியார் போக்குவரத்து சேவையினர் நடத்தும் ''கமலன'' சேவையினர் 100/=வை கொழும்புக்கு கட்டணமாக அறவிடுகின்றனர். மேலும் அட்டன் பஸ் நிலையத்தில் தமிழ் மக்களிடம் பணம் பறித்தும், ஏமாற்றியும், மோசடி செய்தும் பிழைக்கவே ஒரு கூட்டம் இருக்கிறது. இவர்கள் பொலிசாரினதும், நகரசபையினரதும் மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சேவை அங்கீகாரம் பெற்ற குண்டர்கள் போலவே செயற்படுகின்றனர்.

இரவு நேரங்களில் கடைசி கொழும்பு பஸ் 12.00 மணிக்கு அட்டனை வந்தடைகிறது. ஆனால் அவ்வேளையில் அட்டனில் இருந்து எப்பகுதிக்கும் பஸ்சேவையில்லை. இரவு 8.00 மணிக்குப் பின், அட்டன் பஸ் நிலையத்தை அடையும் தமிழ் பயணிகள் தொழிலாளர்கள், இளம்பெண்கள், இளைஞர்கள் தனியார் வாடகை வாகன உரிமையாளர்களின் அடாவடித்தனங்களுக்கும் ஆளாக வேண்டியிருக்கிறது. 10கி.மீ. தூரத்துக்கு 300/=, 500/= வாடகை வசூலிப்பது, இளம்பெண்களை ஏமாற்றி மானபங்கப்படுத்துவது, வேறு வாகனங்களில் போகவிடாமல் தடுப்பது போன்ற செயல்களில் ஒரு ரவுடிக் கும்பலே ஈடுபட்டு வருகின்றது.

இவ்வாறான கடுமையான இனவாத புறக்கணிப்பும் ஆக்கிரமிப்பும், அடக்குமுறையும் கொண்ட அட்டன் மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சேவையானது பெரும்பான்மையான தமிழ் ஊழியர்களைக் கொண்ட சேவையாக மாற்றப்பட வேண்டும்.

அட்டன் மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சேவை குறைபாடுகளை கலையவும், அதை மலையக தமிழ் பிரதேசங்களுக்கான போக்குவரத்தை ஒருங்கமைக்கும் மையமாக மாற்றவும் மாணவர்கள், தொழிலாளர்கள், தொழில் புரிவோர் நலன்களை பாதுகாப்பதும், ஆளும் முன்னணி அரசின் மடியில் கனாவில் மூழ்கியுள்ள மலையக தலைமைகளின் கடமையென்பதை இடித்துரைக்க வேண்டியிருக்கிறது.

## ஆம்...

ஒப்பந்தப்படி இணைந்திருக்கிற வடக்கு கிழக்கிலும் உருவாக்கிப் பார்க்கலாம்.

***உங்களுடைய இந்தச் சிந்தனை ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் அரசியல் தீர்வுப் பொதிக்கு முரணானது என்பதை நீங்கள் உணரவில்லையா?***

தற்போதைய தீர்வுப்பொதி பரவலாக்கல் அலகு பற்றி எதையும் உள்ளடக்கவில்லை. என்றாலும், இந்த அரசாங்கம் மேற்கொண்ட மிக முன்னேற்றமான தீவிர முயற்சியின் வெளிப்பாடு இந்தப் பொதி. வேறு எந்த அரசாங்கமும் இது மாதிரி ஒன்றை முன்வைத்ததில்லை. என்றாலும் துரதிர்ஷ்டவசமாக பரவலாக்கல் அலகு பற்றிய எதுவும் இல்லாதிருப்பது ஒரு குறையாகவே உள்ளது.

***தீர்வுப் பொதியொன்றினூடாக தீர்வைக் காண்பதில் ஐ.தே.கவின் பங்கு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?***

அவர்கள் எதிர்க்கட்சியாக இருந்தாலுமோ, இல்லாவிட்டாலுமோ அவர்களெல்லாம் சிங்களவர்கள் என்று என்னால் சொல்ல முடியும். நல்ல நோக்கத்தோடு, நல்ல நம்பிக்கையோடு செய்யப்படுகிற எதையுமே அவர்கள் எதிர்க்கத் தான் முயல்கிறார்கள்.

## இனியும் சூல் கொள்..

யானின் சிற்பங்கள், உடலரசியல், நவீனத்துவத்திலிருந்து பின்நவீனத்துவம் வரை என்ற கட்டுரைகள் இம்மலரின் முதுகெலும்பு என்னுமளவிற்கு புதிய பல அவதானங்களை தமிழ்வாசகர்களுக்கு அள்ளித்தருகின்றன. மேலும் புகலிட வாழ்வியல் பிரச்சினைகளை முன்வைத்திருக்கும் புகலிடமும் புதிய நூற்றாண்டும், தலைமுறைகளின் முரண்பாடுகள் என்ற கட்டுரைகள் எம்புகலிட வாழ்வுக்குத்தேவையான அதிகம் பேசப்படாத விடயங்கள் பற்றி குறிப்பிட்டு இனிமேலாவது இப்படியான சிந்தனை வடிவங்களை இன்னும் ஊக்கப்படுத்தப்பட்டு வெளிக்கொணர வேண்டும் எனும் தேவையை வெளிக்காட்டி நிற்கின்றன.

மற்றும் சோவியத்யூனியன் வீழ்ச்சிக்குப்பிறகு ஓகோவென்று எக்காளமிட்ட ''மாக்சிச அலர்ஜிக்காரர்களை'' அடக்கி வாசிக்க வைத்திருக்கும் வ. அழகலிங்கத்தின் ''ஒரு நாட்டின் சோசலிசம்'' என்ற கட்டுரை, தமிழகத்திலிருந்து பொதிகை வெற்பனின் ''பித்தனும் பிரேமிளும்'' என்ற கட்டுரை, சி. புஸ்பராசாவின் ''இலங்கை அரசியல் போராட்டத்தில் முன்னுரிமை மறுதலிக்கப்பட்ட பெண்கள்'' என்ற கட்டுரை, 'தலித்தியம் பரவும் புகலிடம்'' என்ற சுகனின் கட்டுரை என்று இன்னும் பல கட்டுரைகள் ''இனியும் சூல் கொள்''ளுக்கு பக்க பலம் சேர்க்கின்றன.

இம்மலரில் காணப்படும் ஓவியங்கள் அனைத்தும் ஆக்கங்களை மேலும் மெருகூட்டுவதாகவே அமைகின்றன. ஓவியக் கலைஞர் கிருஸ்ணராசாவின் ஓவியங்கள் அவரது ஓவியத் திறமையை பறைசாற்றி நிற்கின்றன.

இத்தொகுப்பில், ஐரோப்பிய-மேற்குலகில் வாழும் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களுடன் இணைந்து இந்தியா, இலங்கை, சவுதிஅரேபியா போன்ற நாடுகளில் இருந்தும் 58 எழுத்தாளர்களினால் 29 கவிதைகளும், 18 சிறுகதைகளும் 21 கட்டுரைகளுமாக மொத்தம் 68 படைப்புக்கள் தொகுக்கப்பட்டிருப்பது மிகப்பெரிய புகலிட சாதனை என்றே சொல்ல வேண்டும். அதிலும் மரபு சார்ந்த அங்கீகாரம் பெற்ற எழுத்தாளர்களை விட புதிய பல எழுத்தாளர்கள் களம் புகுந்திருப்பது எதிர்கால தமிழ் புலம்பெயர் சூழலுக்கு தேவையான ஒன்றாகும்.

இறுதியாக ''துடைப்பானின் குறிப்புகள்'', சிறிஜெயவர்த்தனாவின் ''வன்முறையும் மனித உரிமைகளும்'' என்கின்ற இரண்டு ஆக்கங்களும் தமிழ் சூழலின் அதிகார ஆளுமைகள் ஆயுதங்களால் பாதுகாக்கப்படுவதை விளக்கி அவற்றைத் தொடர்ந்து பேணி வரும் போலி இலக்கியங்களை தள்ளி உதறிவிடுகின்ற இது போன்ற மலர்களின் படைப்புகளுக்கான தேவை எம்மிடையே இன்னுமிருப்பதை வலியுறுத்தி நிற்கின்றன.

## ஜான் ஆபிரகாம்...

கழுதையின் உயிரைப்பறித்த சமூகத்தை அழிக்க, தாய்தெய்வம் காளியாக தன் உக்கிர ரூபத்தைக்கொண்டெழுந்தது போல, தானும் சாம்பலிலிருந்து உயிர்த்தெழும் ஃபீனிக்ஸ் பறவையாக, உயிர்த்தெழுவார் என்று நம்பினரோ என்னவோ அல்லது ஹரியின் மறைவிற்குப்பிறகு கதாபுருஷனானது போல அவருடைய வாழ்க்கையும் இறப்பும் புராணிகக்கற்பனைக் கதாரூபம் எடுக்கும் என்று நினைத்தாரோ- தன் வாழ்நாளெல்லாம் இக்கதாரூப மாற்றங்களை வெறுத்தவராயிற்றே.

சங்கரப்பிள்ளை ஒரு இடத்தில் குறிப்பிடுகிறார். ''சமூகம் கலை பண்பாடு, புரட்சி இவைபற்றிய ஜானின் கருத்துக்கள் நம் சமூகத்தின் ஆதிகுடித்தன்மையோடு உறவு கொண்டவை'' என்று. உண்மையாகவே ஜானின் ஆளுமையிலும் சிந்தனையிலும் ஒரு ஆதிமனிதன் குடியிருந்தான். ஒரு ஆதி குடியின் மனது தர்க்கபூர்வமான பகுத்தறிவுப்பார்வைகொண்ட உலகில் சஞ்சரிப்பதில்லை. ஜானின் மனதும் பிம்பங்கள் புராணிகக்கற்பனைகள் குறியீடுகள் நிறைந்த ஒன்று. பிம்பங்கள் தான் அவரது கருத்து. அதைச் சுற்றித்தான் புராணிகக்கற்பனைகள் பிறக்கின்றன. வளர்கின்றன. தர்க்கம், பகுத்தறிவு, அறிவார்த்த வாதம் ஆகிய வேலிகளையெல்லாம் தகர்த்தெறிந்து அம்மைய பிம்பத்தை நாம் அணுக முடியுமானால், அப்பிம்பத்தில் நாம் செரியாச்சனைப் பார்க்கலாம். ஹரியைப் பார்க்கலாம். கழுதையைப் பார்க்கலாம். இவை ஒவ்வொன்றிலும் ஜானையும் கூட நாம் பார்க்கலாம்.

இக்குறியீடுகள் பிம்பங்களைச் சுற்றி எழுப்பப்பட்டு வலைபின்னும் தர்க்கத்தை கதையாடலை, அறிவார்த்த காரணங்களை நாம் நம்பமுடியாது போகலாம். ஆனால் அவற்றின் உண்மையை அவை ஒவ்வொன்றும் ஜானின் உண்மையை பிரதிபலிக்கும் நேர்மையை நாம் கேள்வி எழுப்ப முடியாது. அவை தான் உண்மை. ஜான் எவ்வளவு உண்மையோ, எப்படி உண்மையோ அப்படி ஜான். நமக்கும், சமூகத்திற்கும் எவ்வளவுதான் ஒத்துவராத, ஒட்டிஉறவு கொள்ள முயலாத ஒதுங்கிச் செல்லும் வியக்தியாக இருந்தாலும் இந்த உண்மைகள் உண்மைகள்தான்.

இதன் மூல வடிவம் ஆங்கிலத்தில், பேட்ரியட் பத்திரிகையின், 06.03.1988 இதழில் ஜானின் நினைவில் பிரசுரமானது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Registered as a newspaper in Sri Lanka.

# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

இல. 04, ஐயரத்ன வழி,
திம்பிரிகஸ்யாய,
கொழும்பு 05.

தொலைபேசி : 593615, 584380.
தொலை மடல் : 594229.
E-mail : sari@sri.lanka.net

## வவுனியா: தொடர்ந்து எரியும் ரயர்கள்!

வவுனியா நகரில் இருந்து சில மைல்கள் தூரத்தில் உள்ள ஔசத பிட்டி என்னும் சிங்களக் கிராமத்தில் உள்ள புதிய வீடமைப்புத் திட்டப் பகுதியில் இன்னுமொரு மனித சடலம் விறகு கட்டைகள் போட்டு எரிக்கப் பட்டிருந்தமையும் கடந்த வாரம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் கொடுத்த தகவலை யடுத்து ஸ்தலத்துக்கு சென்ற பொலிசார் எரிந்து மிஞ்சிக் கிடந்த சில எலும்புத் துண்டுகளைக் கொண்டே அங்கு ஒரு மனித சடலத்தையே இனந்தெரியாதவர்கள் எரித்துள்ள தாகத் தெரிவித்துள்ளனர்.

இதற்கு முன்னதாக மார்ச் 2ம்திகதி வவுனியா - செட்டிகுளம் வீதியில் இராசேந்திரன் குளம் பகுதியில் 2 மனித சடலங்கள் டயர் போட்டு எரிக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப் பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

பதினேழு வருடங்கள் இந்த நாட்டை ஆட்சிசெய்த ஐக்கிய தேசியக் கட்சி யின் ஆட்சிக் காலத்தில் தான் மனிதர்கள் டயர் போட்டு எரிக்கப் பட்டார்கள். பொதுஜன ஐக்கிய முன்னணியின் அரசாகிய தமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்பு டயர் போட்டு எரிக்கும் கொலைக் கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக் கப்பட்டு விட்டதாக நாட்டின் பிரதி பாதுகாப்பு அமைச்சர் சில தினங்க ளுக்கு முன்னரும் தெரிவித்திருந்தார்.

கடந்த மூன்று வார காலப் பகுதிக்குள் இடம்பெற்றுள்ள மூன்று சடலங்களின் எரிப்புக்கும் யார் காரணம்? யார் இதற்குப்பொறுப்பு என்பதை இந்த நாட்டின் பாதுகாப்புக்கும் பொது மக்களின் பாதுகாப்புக்கும் பொறுப் பான அரசும் பொறுப்பாளர்களும் கூற முடியுமா?

அதே நேரத்தில் இவ்வாறான மர்மக் கொலைகள் நடைபெறுவதை இராணு வத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சிவில் நிர்வாகம் நடைபெறுகின்ற வவுனியா பகுதியில் இனிமேல் நடைபெறாமல் தடுத்து நிறுத்துவோம் என அவர்கள் உறுதி அளித்து செயற்படுவார்களா?

இது இவ்வாறிருக்க, கடந்த 15ம்திகதி வவுனியா நகரில் உள்ள ஆட்டோ க்கள் நிறுத்துகின்ற நிலையம் ஒன்றில் கடைசியாகக்காணப்பட்ட ஜெகதீஸ் வரன் சபாபதி என்ற (24) ஆட்டோ சாரதி மர்மமான முறையில் காணாமல் போயுள்ளார்.

இரண்டு தினங்களுக்குப்பின்னர் சேதம் அடைந்த நிலையில் இவரது ஓட்டோ இராசேந்திரன் குளம் பகுதியில் கண்டெடுக்கப்பட்டு பொலி சாரினால் மீட்டு வரப்பட்டது. இந்த ஓட்டோ சாரதிக்கு என்ன நடந்தது என்பது குறித்து இன்னுமே எவருக் கும் எதுவும் தெரியாது.

ஆட்கள் மர்மமான முறையில் காணா மல் போனாலும், அல்லது மர்மமான முறையில் கொல்லப்பட்டாலும் உடன டியாக விசாரணைகளை முடுக் கிவிட்டுச் செயற்படுகின்ற வவுனியா பொலிசார், இந்தச் சம்பவம் குறித்தும் இன்னும் ''விசாரித்துக்'' கொண்டி ருக்கின்றார்கள்.

இவர்களுடைய விசாரணைகள் எப்போது முடியும், குற்றவாளிகள் எப்போது இனம் காணப்படுவார்கள் என்பதை எல்லாம் அசாத்தியமான பொறுமையோடு காத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## கோல்ப்க்கு மலிவு விற்பனை!

பாராளுமன்ற கட்டிடத்தொகுதிக் குச் சமீபத்திலுள்ள பிரதேசமான பத்தரமுல்லையில் அமைந்துள்ள மிகப் பெறுமதியான 136 ஏக்கர் நிலத்தை, சர்வதேச தரத்திலான கோல்ப் விளையாட்டுத் திடல் அமைக்கும் முகமாக மிகக் குறைந்த விலையில் நிறுவனம் ஒன்றுக்கு விற்க அரசு தயாராவதாகத் தெரிய வந்துள்ளது.

அரசிற்கு உரிய இப்பிரதேசம் சதுப்பு நிலம் எனக் காரணம் காட்டப்பட்டு அதன் பெறுமதி ரூ. 30 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனினும், பத்தரமுல்லை பிரதேசத்தில் ஒரு பேர்ச்சஸ் நிலத்தின் சரியான பெறுமதி 5 லட்சம் எனக் கருதின் இந்நிலத்தின் சரியான பெறுமதி 870கோடிக்கும் அதிகம் எனவும் தெரிய வருகின்றது.

1997 ஒக்டோபர் மாதம் இந்நிலத்தின் பெறுமதி ஒரு பேர்ச்சஸ் ரூபா 14,000 என்ற ரீதியிலேயே நிர்ணயிக்கப்பட்ட தாகவும், அக்காணி 99 ஆண்டுகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

அமைச்சரவையின் அனுமதி கிடைத் துள்ள இக்கொடுக்கல் வாங்கலின்படி இக்காணி ஏஷியா பசிபிக் கோல்ப் கோர்ஸஸ் லிமிட்டட் (Asia Pacific Golf Courses Ltd.) என்ற நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

நம்பத்தகுந்த வட்டாரங்களின் கருத்துப்படி இந்நிறுவனம் கடந்த ஆண்டு ஒகஸ்ட் 8ம்திகதி ஸ்தாபிக்கப் பட்டதெனவும், பின்னர் நவம்பர் 11ம்திகதி அந் நிறுவனத்துக்கு வியா பார அனுமதி கிடைத்ததாகவும் தெரிய வருகின்றது. இது வரையில் அந் நிறுவனப் பங்குகள் விற்கப்பட வில்லை எனவும் தெரிய வருகின்றது.

நீர்பெருக்கெடுப்பதைத் தடுப்பது தொடர்பாகப் பயன்படுத்தப்படும் பிரதேசமான இக்காணிப் பிரதேசத் தில் கோல்ப் விளையாட்டுத்திடல் அமைப்பதை தவிர, கால்பந்தாட்ட, கிரிக்கெட் மைதானங்களும், உணவு விடுதிகளும், மாடிவீடுகளும் அமைக் கப்படும் என இந்நிறுவனம் அறிவித் தல் விடுத்துள்ளது.

மேற்கூறப்பட்ட கொடுக்கல் வாங்கல் தொடர்பான சட்டமூலம் கடந்த பெப்ரவரி 9ம்திகதி முன் வைக்கப் பட்டதுடன், மார்ச் 4ம்திகதி அதற்கு சம்மதமும் கிடைக்கப் பெற்றுள்ள தாகவும் மேலதிக செய்திகள் தெரிவிக் கின்றன.

## கிண்ணியா உப்பாறு: யார்க்கெடுத்துரைப்போம்?

ஆள்பவர்களுக்கு எப்போதுமே மக்களின் நலன்களில் அக்கறை இருப் பதில்லை. முன்னர் இரவோடிரவாக ஒரே நாளில் யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்களை வெளியேற்றினார்கள் புலிகள்.

இப்போது கிண்ணியா உப்பாறு கிராமத்திலிருந்து நூறு குடும்பங்களை வெளியேற்றி இருக்கிறார்கள் படை யினர்.

மார்ச் 18ம் திகதி மதியம் போல் அக்கிராம ஆலயபரிபாலன சபை யைச் சேர்ந்த கௌரிராசா என்பவரை அழைத்து 24 மணிநேரத்துள் கிரா மத்தை விட்டு அனைவரையும் வெளியேறுமாறு அறிவித்தல் விடுக் கச் சொன்னார். மறுநாள் இரண்டு மணிக்குள் எல்லோரும் வெளியேறி விட்டார்கள்.

வெளியேறிய தமிழ் , முஸ்லிம் குடும் பங்கள் பாடசாலைகளிலும், பள்ளி வாசலிலும் தங்க வைக்கப்பட்டுள் ளனர். அவர்களால் கைவிடப்பட்ட கால்நடைகள் ஏறத்தாழ 20ஆயிர மாகும்.

ஏற்கெனவே 90ஜூனில் இடம் பெயர்ந்த இம்மக்கள் ஐந்து வருடங் களின் பின் 95ம் ஆண்டிலேயே மீளக்குடியேற்றப்பட்டிருந்தனர்.

இம்மக்களை வெளியேற்றிவிட்டு அரசாங்கம் சிங்கள மக்களைக் குடியேற்ற நடவடிக்கை எடுத்து வருகிறது என்கிறார் ஈ.பி.டி.பி. பா.உ.சந்திரகுமார்.

முன்னரும் இவ்வாறு தமிழ், முஸ்லிம் மக்களை வெளியேற்றிவிட்டு சிங்கள மக்களைக் குடியேற்றிருக்கிறது அரசு என்று சுட்டிக் காட்டியிருக்கிறார் அவர்.

இத்திக்குளம், உப்பாறு மக்கள் வெளி யேற்றப்பட்டதை அடுத்து நாவலடி, பட்டாளிபுரம், சின்னக்குளம் பிரதேச மக்களும் கலக்கத்துடன் இருக்கி றார்கள்.

மக்கள் அகதிகளாக வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள். தமிழ்க் கட்சிகள் என்ன செய்கின்றன என்று நீங்கள் கேட்பது அவர்களுடைய காதுகளில் ஒரு போதும் விழப்போவதில்லை. அவர்களுடைய காதுகளில் மட்டு மல்ல, யுத்தத்தில் அப்பாவி மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்று கூக்குரலிடும் எவர் காதுகளிலும் விழப்போவதில்லை.

## யாழ்ப்பாணத்துச் செய்திகள்!

எழிலவன்

யாழ்ப்பாணத்தில் இராணுவத் தினர் வீதிகளில் காவல் கடமைகளில் ஈடுபடுவது வழக்கம். இப்படி இவர் கள் வீதியோரங்களில் கடமையிலீடு பட்டிருக்கும் போது வீதியால் வரும் யுவதிகளை மறித்து தமக்குத் தேவையான பொருட்களை வாங்கு வதற்கு கடைக்கு அனுப்புவதுண்டு. வாழைப்பழம், சிகரெட், மிக்சர் போன்றனவே இவ்வாறு இராணுவத் தினரால் வாங்கப்படும் பொருட்கள். இராணுவத்தினர் இவ்வாறு யுவதி களை கடைக்கு அனுப்பும் போது அவர்களின் அடையாள அட்டை களை வாங்கி வைத்துக் கொண்டே அனுப்புவது வழக்கம்!

•

அண்மையில் யாழ்நகரிலிருந்து ஒருவர் கொழும்பிலுள்ள விடுதி ஒன்றுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். மறுமுனையில் சிங்களத் தில் பதில் கிடைத்தது. யாழ்ப்பா ணத்திலிருந்து தொடர்பு கொண்டவர், தான் பேச விரும்பியவரின் பெயரைச் சொல்லி யாழ்ப்பாணத்திலிருந்து பேசுகிறோம் என்றதும், ரிசீவரை எடுத்தவர் யார் புலியா பேசுவது என்றார். என்ன செய்வது தமிழர் என்றாலே புலிதான் போலும்.

•

யாழ்ப்பாணத்திலுள்ள சுதந்திரக் கட்சிக்கிளை அலுவலகத்தில் நற்சான் றிதழ்கள் வழங்கப்படுகின்றன. நற் சான்றிதழ்கள் பெறச்செல்வோரிட மிருந்து தட்டச்சுக் கட்டணமாக (ரைப் பிங்) முப்பது ரூபா அறவிடப்படு கிறது.

•

கொழும்பிலிருந்து யாழ்ப்பா ணத்திற்கு எடுத்து வரப்படும் தினசரிப் பத்திரிகைகள் ஒழுங்காக வந்து சேரு வதில்லை. பத்திரிகையை எடுத்து வரும் பஸ்ஸில் வரும் இராணுவத் தினரிடம் பத்திரிகை குறைவடை கிறதே எனக்கேட்டால் அவர்கள் விமானக் காற்றாடியின் (Fan) காற்றில் பத்திரிகைகள் பறந்து விட்டன. பத்திரிகை நிறுவனத்திற்கு எழுதுங்கள் என பதிலளிக்கின்றனர். இதேவேளை யாழ்ப்பாணத்திலுள்ள சில வர்த்தக நிலையங்களுக்கு பத்திரிகைகள் பழைய பத்திரிகை விலைக்கு விற் பனை செய்யப்படுகின்றன.

•

கடந்த 13.3.1998 அன்று புளியங் கூடலில் வைத்து முருகேசு ஸ்ரீதரன் என்ற இளைஞர் ஈ.பி.டி.பியினரால் கடத்திச்செல்லப்பட்டார். இவரைக் கடத்திச் சென்ற ஈ.பி.டி.பியினர் இவரது கைகளிரண்டையும் கட்டிப் போட்டு விட்டுப்போய் விட்டனர். அவர்கள் சென்றவுடன் இவர் தனது கைக் கட்டுகளை அவிழ்த்துவிட்டு அருகிலிருந்த பொலிஸ் நிலையத்தில் போய் சரணடைந்துள்ளார். இவர் கைதுசெய்யப்பட்டமைக்கான கார ணம் இவரது மைத்துனர் ஈ.பி.டி.பி யிலிருந்து பிரிந்த ராமேஸ்வரன், ராமமூர்த்தி ஆகியோரின் சுயேட்சைக் குழுவில் அங்கம் வகிப்பதே. அவரை சரணடையச் செய்யும் நோக்குட னேயே இவர் கைது செய்யப்பட் டுள்ளார். இவர் தன்னிடமிருந்த ரூபா 2000 பணத்தையும் ஈ.பி.டி.பியினர் எடுத்து விட்டதாகக்கூறியுள்ளார்.

•

## புலிகளிடம் போனது எவ்வாறு?

60 மெட்ரிக்தொன் அளவுள்ள மேற்கத்தேய மருந்துப் பொருட்கள் சந்தேகத்துக்கு இடமான முறையில் வடக்குக்கு அனுப்பப்பட்ட சம்பவம் தொடர்பாக உடனடியாக விசாரணை களை மேற்கொள்ளுமாறு வடக்கு இராணுவ அதிகாரிகள் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

வவுனியா பாதுகாப்பு கரையினூடு கடந்த 11ம்திகதி வெளியேற்றப்பட்ட இம் மருந்துத் தொகை கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அரச வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்லப்படுவதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. அங்கு பாதுகாப்பு அதி காரிகளிடம் கையளிக்கப்பட்ட உத்தி யோகபூர்வ கடிதங்களின்படி அவை கொழும்பு, சுகாதார திணைக்களத் தினால் அனுப்பப்பட்டவை எனக் குறிப்பிடப் பட்டிருந்ததாகவும் தெரிய வருகின்றது.

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரிப்புகளின் பிரகாரம், சுகாதார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர், இவ்வளவு தொகை மருந்துப் பொருட் கள் தம்மால் அனுப்பப்படவில்லை எனக்குறிப்பிட்டிருந்தார்.

பாதுகாப்பு அமைச்சு சில மருந்துப் பொருட்களை வடக்கிற்கு அனுப்புவ தைத் தடை செய்துள்ளதால், ஒரு தரம் அனுப்பக்கூடிய மருந்துப்பொருட் களின் தொகை நூற்றுக்கு 40% அளவு தான் என அவர் மேலும் தெரிவித் திருந்தார்.

ஒரே நாளில் இவ்வளவு அதிக மருந்துப் பொருட்கள் வடக்குக்கு அனுப்பப்பட்ட சந்தர்ப்பத்தை இதற்கு முதல் தாம் கேள்விப்படவில்லையென இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

குண்டு வெடிப்புக்காரணமாக ஏற் படும் காயங்கள், எரிகாயங்கள் என்பனவற்றைச் சுகப்படுத்தும் மருந் துப்பொருட்கள், மருத்துவ உபகர ணங்கள் என்பனவும் அம்மருந்துத் தொகையில் அடங்கியுள்ளன. இவ் வாறான மருந்துத் தொகை புலிகள் நிர்வாகம் நடக்கும் பிரதேசத்திற்குள் கொண்டு செல்லப்பட்டமை பெரும் சந்தேகத்துக்குரியதெனவும், இவை ஆறு லொறிகளில் ஏற்றிச்செல்லப் பட்டதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### சனாதனனின்
### ஓவியக் கண்காட்சி

காலம் : 1998 மார்ச் 20 - 28,
மு.ப. 10.00 - பி.ப. 07.00மணி வரை
இடம் : ஹெரிரேஜ் கலா பவனம்,
இல. 61, தர்மபால மாவத்தை,
கொழும்பு 07.

### கலந்துரையாடல்

**தமிழகத்தின் அண்மைகால இலக்கியப் போக்கு**

கலந்துரையாடுபவர்

**தெ. மதுசூதனன்**

காலம்: மார்ச் 28 சனி - பி.ப 4.30மணி

### கலந்துரையாடல்

**பின்நவீனத்துவம்**

கலந்துரையாடுபவர்கள்
**செல்வி திருச்சந்திரன்**
**சுனில் விஜேசிறிவர்த்தன**

காலம்: ஏப்ரல் 04 சனி - பி.ப. 4 .00மணி

இடம்: பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்,
இல. 58, தர்மாராம வீதி,
கொழும்பு 06.

*ஏற்பாடு : விபவி*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

வெளியிடுபவர் : ச. பாலகிருஷ்ணன். இல. 18/02. அலோ சாலை. [illegible] அச்சு பதிப்பு : [illegible] இல. 07. கெகடிய இடம். சிறிமல் உயன. இரத்மலானை. 24.03.98.